ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 4 அணா

மலர் 23 } அக்டோபர் 1961 { இதழ் 10

தமிழ் நாட்டுக் கிராமங்களில் பஞ்சாயத்து ஆட்சி

அக்டோபர் திங்கள் இரண்டாம் நாளிலிருந்து தமிழ் நாட்டுக் கிராமங்கள் எல்லாவற்றிலும் பஞ்சாயத்து ஆட்சி நடைமுறைக்கு வந்திருக்கிறது. இந்த ஆட்சி அமைப்பு முறையின்படித் தமிழ் நாட்டுக்கிராமம் ஒவ்வொன்றிற்கும் பஞ்சாயத்து என்று அழைக்கப் படும் ஊராட்சி மன்றம் ஒன்று அமைந்திருக்கும். குறிப்பிட்ட கிராமத்தைப் பற்றிய ஆட்சிப் பொறுப்புகளில் பெரும்பாலானவை அந்தக்கிராமத்தின் ஊராட்சி மன்றத்திடம் ஒப்படைக்கப்படும். ஒவ்வொரு கிராமமும் சில தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, தொகுதிக்கு ஓர் உறுப்பினர் என்ற முறையில், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரையும் தன்னகத்தே கொண்ட ஒரு

திருவனமே ஊராட்சி மன்றம் அல்லது பஞ்சாயத்து சபை ஆகும். ஏறத்தாழப் பத்து பஞ்சாயத்து... சேர்ந்த ஒரு தொகுதி பஞ்சாயத்து யூனியன் என்று அழைக்கப்படும். இந்தப் பஞ்சாயத்து யூனியன் முழுவதற்கும் பொதுவான ஆட்சி மன்றம் ஒன்று இருக்கும். அது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் என்று அழைக்கப்படும். பஞ்சாயத்து யூனியனில் உள்ள பஞ்சாயத்துகளின் தலைவர்கள் யாவரும் இந்த யூனியனின் உறுப்பினர்கள் ஆவார்கள். இவர்கள் தங்களில் ஒருவரை யூனியன் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். நகராட்சி மன்றம் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் ஆணையாளர் இருப்பது போல இந்தப் பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் ஆணையாளர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுப் பணியாற்றி வருவார். பஞ்சாயத்து யூனியனின் நடைமுறை நிர்வாக அதிகாரங்கள் பெரும்பாலும் இந்த ஆணையாளரிடம் இருக்கும். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் எனப்படும் ஊராட்சித் தொகுதி மன்றம் அவ்வப்போது எடுக்கும் முடிவுகளை மன்றத் தலைவரின் ஆலோசனையுடன் தக்க முறையில் நிறைவேற்ற வேண்டியது ஆணையாளரின் பொறுப்பாகும். ஊராட்சி மன்றத்திற்கு உள்ள பொறுப்புகள் எவை, ஊராட்சித் தொகுதி மன்றத்திற்கு உள்ள பொறுப்புகள் எவை எவை என்றும் 1958ல் தமிழ் நாட்டுச் சட்ட மன்றத்தால் நிறை வேற்றப்பட்டுள்ள கிராமப் பஞ்சாயத்து ஆட்சிச் சட்டம் வரையறுத்துத் தெரிவித்துள்ளது.

அண்மைக் காலம் வரையில் தமிழ் நாட்டுக் கிராமங்களின் ஆட்சிப் பொறுப்புகள் பெரும்பாலானவற்றை ஜில்லா போர்டுகள் எனப்படும் மாவட்ட ஆட்சி மன்றங்களே ஏற்று நடத்தி வந்தன. சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மாவட்ட ஆட்சி மன்றங்கள் யாவும் கலைக்கப்பட்டு விட்டன அல்லவா? இனி இந்த மன்றங்களின் பொறுப்புகள் யாவும் ஊராட்சி மன்றங்களாலும் ஊராட்சித் தொகுதி மன்றங்களாலுமே கவனிக்கப்பட்டு வரும்.

தமிழ் நாட்டுக் கிராமங்கள் யாவற்றிலும் பஞ்சாயத்து ஆட்சி தொடக்கமாகியிருப்பதைக் கிராமப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள புதியதோர் மறுமலர்ச்சி என்று கூறினால்-அது மிகையாகாது. தமிழ்நாட்டுக் கிராமப் பகுதிகளில் இப்போது ஏறத்தாழப் பதினைந்தாயிரம் ஊராட்சி மன்றங்களும் முன்னூற்று ஐம்பது ஊராட்சித் தொகுதி மன்றங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இந்த இருவகை மன்றங்களும் தேவையான அக்கறையோடும் நியாயமான பொறுப்புணர்ச்சியோடும் பணியாற்றுமானால், பத்து ஆண்டுகளில் தமிழ்நாட்டுக் கிராமங்கள் எல்லாவற்றிலும் புதியதோர் எழுச்சியையும் ஏற்றத்தையும் உருவாக்கிக் காட்டமுடியும். கிராம மக்களுடைய சமுதாய வாழ்விலேயும்

பொருளாதார நிலையிலேயும் மகத்தானதோர் மாற்றத்தை ஏற்படுத்த வல்ல பேராற்றல் இந்த மன்றங்களுக்கு உண்டு. உண்மையான இந்தியா என்பது கிராமங்களில்தான் வாழ்கிறது என்று காந்தியடிகள் அடிக்கடி சொல்வது வழக்கம். காந்தியடிகளின் இந்தப் பொன்மொழி பொதுவாக இந்தியாவுக்கு மட்டுமல்ல, சிறப்பாகத் தமிழகத்துக்கும் பொருந்தும். இந்தியத்துணைக்கண்டம் முழுவதையும் எடுத்துப் பார்த்தாலும் சரி, தமிழ்த் திருநாட்டை மட்டும் நினைத்துப் பார்த்தாலும் சரி, இந்த நாட்டு மக்களில் நூற்றுக்கு எண்பது பேருக்கு மேற்பட்டவர்கள் கிராமப் பகுதிகளிலேயே வாழ்கிறார்கள். நூற்றுக்கு எழுபத்தைந்து பேருக்கு மேற்பட்டவர்கள் உழவுத் தொழிலையே தங்கள் அடிப்படைத் தொழிலாகக் கொண்டு வாழ்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் இந்த நாட்டின் கிராமங்கள் முன்னேறினாலொழிய இந்த நாடு முன்னேற முடியாது என்பதை யார் மறுக்க முடியும்? அதுபோலவே, இந்த நாட்டுக் கிராமங்கள் எழிலும் ஏற்றமும் மிகுந்து சீரும் சிறப்பும் நிறைந்து, வலிவும் பொலிவும் வாய்ந்தனவாய்த் திகழவேண்டுமானால் ஊராட்சி மன்றங்கள் செம்மையும் செழுமையும் படைத்தனவாய் உயர்ந்து ஓங்கி வளர்ந்து சிறக்க வேண்டும் என்பதையும் யார் மறுக்கமுடியும்?

பஞ்சாயத்து ஆட்சிமுறையால் கிராமப் பகுதிகளில் புதியதோர் விழிப்புணர்ச்சி உருவாகும்; கிராம மக்கள் தங்களைத் தாங்களே நன்றாகப் புரிந்து கொள்ளத் தொடங்குவர்; தக்க முறையில் பயன் படுத்தப்படாமல் தங்களிடம் தேங்கிக் கிடக்கும் ஆற்றல் முழுவதையும் சமுதாய வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவர்.

பஞ்சாயத்து ஆட்சிமுறையால் ஏற்படும் மற்றோர் நன்மை, ஆட்சித் துறையிலும் நிர்வாகத் துறையிலும் கிராம மக்களுக்கு ஏற்படும் முதிர்ந்த அனுபவம் ஆகும். நகரங்களில் வாழ்கின்ற மக்களுக்கு நகராட்சி முறையால் ஆட்சிமுறை அனுபவம் ஏற்படுவது போலக் கிராமங்களில் வாழ்கிற மக்களுக்கு ஊராட்சி முறையில் நிர்வாக அனுபவம் பெருகி வளர்வதற்குச் சிறந்த வாய்ப்புகள் இருக்கின்றன. நேரடியாகச் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களைவிட முதலில் நகராட்சி மன்ற உறுப்பினர்களாகச் சில ஆண்டுகள் பணியாற்றி அதன்பின் சட்டமன்ற உறுப்பினர்களாக உயர்கின்றவர்கள் மிகுந்த நிர்வாக அனுபவம் படைத்தவர்களாக இருப்பதை நாம் காண்கிறோம் அல்லவா? இதே வகையில் நிறைந்த அனுபவம் பெறுகிற சிறந்த வாய்ப்பு இப்போது கிராம மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் அரசியல் அதிகாரங்கள் அவ்வளவும் ஒரே இடத்தில் குவிந்திருப்பது ஜனநாயகக் கோட்பாட்டின் சீரான வளர்ச்சிக்குப் பேராபத்தை விளைவிக்கும் என்னும் உண்மையை அரசியல் அறிஞர்கள் அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர். எல்லா அதிகாரங்களையும் மத்திய–மாநில அரசாங்கங்களிடம் மட்டுமே ஒப்படைப்பது ஜனநாயக முறை ஆகாது. இயன்ற அளவுக்கு அதிகாரங்களைப் பிரித்துப் பிரித்துப் பல்வேறு ஆட்சி அமைப்புகளிடம் பரவலான முறையில் வழங்கினால்தான் ஜனநாயகக் கோட்பாடும் தழைக்கும்; நிர்வாக இயந்திரமும் பழுதின்றி இயங்கும். அப்படியின்றி அதிகாரங்கள் யாவும் ஒரே இடத்தில் குவியுமானால் ஊழல்கள் பெருகும்; திறமையின்மை வளரும்; சர்வாதிகாரப் போக்குகள் தலையெடுக்கும்; நாட்டின் நலனுக்கு ஊறு விளையும். இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது ஊராட்சி மன்றங்கள்—ஊராட்சித் தொகுதி மன்றங்கள் ஆகியவற்றின் இன்றியமையாமை நன்கு விளங்கும். ஜனநாயகப் பயிர் தழைத்து வளர்வதற்காகச் சமுதாயப் பண்ணையில் போடப்படுகின்ற எருவுக்கு ஒப்பானவை இந்தப் பஞ்சாயத்து நிறுவனங்கள்.

கிராமப் பகுதிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இந்த மன்றங்கள் ஆற்றக்கூடிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன. இந்த மன்றங்கள், பெருவழிச் சாலைகளோடு கிராமங்களை இணைப்பதற்கான தொடர்புப் பாதைகளை உருவாக்கலாம். ஏரி மராமத்து வேலைகளைச் செம்மைப்படுத்தலாம். உழவர்களுக்குத் தேவையான விதைகள், இரசாயன உரம், உழுகருவிகள் முதலியவற்றை மலிவு விலையிலும் மொத்தமாகவும் பெற்றுத் தருவதற்கு உரிய திட்டங்களை வகுக்கலாம். உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய புதிய உழவு முறைகளை உழவர் பெருமக்களிடம் பரப்ப முனையலாம். உழவர்களின் வருமானத்தை வளர்ப்பதற்காகப் பல சிறிய தொழில்களைக் கிராமப் பகுதிகளில் தொடங்கலாம். சிறிய அளவில் மருந்தகங்களையும் மருத்துவமனைகளையும் தொடங்கி நடத்தலாம். ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இல்லாத கிராமங்களில் அவற்றை ஏற்படுத்தவும் செம்மையாக நடத்தவும் ஏற்பாடுகள் செய்யலாம். அப்பள்ளிகளில் பயிலும் ஏழைப் பிள்ளைகளுக்கு நண்பகல் உணவு அளிக்கவும் இலவச உடை வழங்கவும் நன்கொடை திரட்டுதல் முதலிய திட்டங்களை மேற்கொள்ளலாம். கல்வியறிவில்லாத முதியவர்கட்கு எழுத்தறிவு அளிக்கும் ஏற்பாட்டைச் செய்யலாம். எண்ணிப் பார்த்தால் பஞ்சாயத்து அமைப்புகளால் ஆற்றப்பட வேண்டிய பணிகள் ஏராளமாக இருப்பதை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். இவை அத்தனைப் பணிகளையும் ஊராட்சி மன்றங்கள் அல்லது ஊராட்சித் தொகுதி மன்றங்கள் தாம் மட்டுமே தனியாக இருந்து செய்து விடமுடியாது.

அது தேவையுமில்லை. மாநில அரசாங்கத்தின் உழவுத்துறை அதிகாரிகள், செப்பனீட்டுத் துறை அதிகாரிகள், கல்வித் துறை அதிகாரிகள், தேசிய வளர்ச்சித் திட்ட அதிகாரிகள், நூல் நிலையக் குழு அதிகாரிகள், முதியோர் கல்வித் திட்ட அதிகாரிகள், மாவட்டத் தண்டல் நாயகம் முதலிய அதிகாரிகள், கிராம முன்சீப் முதலிய பல்வேறு சாராரின் ஒத்துழைப்பைத் தக்க வகையிலும் தக்க நேரத்திலும் பெற்றாக வேண்டும் ஊராட்சி மன்றங்கள். அதுமட்டுமல்ல. கூட்டுறவு நாணய சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவு பாங்கிகள், கூட்டுறவுப் பண்டக சாலைகள் முதலிய பல வகைக் கூட்டுறவு அமைப்புகளின் ஒத்துழைப்பையும் முழு அளவில் பெற்றாகவேண்டும். பல்வேறு அரசாங்கத் துறைகளின் அலுவலர் ஒத்துழைப்பை ஒரு புறத்திலேயும், கூட்டுறவு அமைப்புகளின் அருந்துணையை இன்னோர் புறத்திலேயும், கிராம மணியக்காரர், பெரியதனக்காரர், பெருநிலக் கிழார் முதலிய செல்வாக்கு மிக்கவர்களின் அரவணைப்பை மற்றோர் புறத்திலேயும், ஊர்ப் பொது மக்களின் அன்பான ஆதரவை வேறோர் புறத்திலேயும் பெற்றால்தான் ஊராட்சி மன்றங்கள் அவற்றால் செய்யப்படக்கூடிய முழு வேலையையும் திறம்படச் செய்யமுடியும்.

மற்றொரு முக்கியமான கருத்தையும் இந்த நேரத்தில் சொல்லியாக வேண்டும். இந்த ஊராட்சி மன்றங்கள் உன்னதமான மன்றங்களாக விளங்கி உயர்தரமான பணிகளை ஆற்றி ஊரும் உலகமும் புகழும் நிலையை எய்த வேண்டுமானால் இந்த மன்றங்களில் சாதிப் பிணக்குகள், அரசியல் கட்சிப் பூசல்கள், குழு மனப்பான்மை ஆகியவை தலைகாட்டுதல் கூடாது. எக்காரணத்தாலாவது இந்தப் பிணக்குகளும் பூசல்களும் இந்த மன்றங்களில் நுழைந்து விடுமானால் அதன்பின் இந்த மன்றங்கள் பூசல்களின் பந்தடி மைதானங்களாகவும் பிணக்குகளின் போர்க் களங்களாகவும்தான் காட்சி அளிக்க முடியுமே தவிர மக்களின் நல்வாழ்வு மன்றங்களாகப் பணியாற்ற முடியாது.

சென்னைமாநகரில் சீரும் சிறப்பும் மிக்க முறையில் அண்மையில் நடைபெற்ற தமிழ் நாட்டுப் பஞ்சாயத்து மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய தமிழ்நாட்டுக் கவர்னர் திரு விஷ்ணுராம் மேதி அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல், பஞ்சாயத்து ஆட்சிமுறை, தமிழ் நாட்டுக்குப் புதியதல்ல. பிற்காலச் சோழர்கள் ஆட்சி புரிந்த காலத்திலேயே—ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே தமிழகத்தில் பஞ்சாயத்து ஆட்சி முறை தலைசிறந்த வகையில் பணியாற்றியிருக்கிறது. உத்திரமேரூர் கிராமத்தில் பராந்தக சோழன் ஆட்சி புரிந்த காலத்தில் பொறிக்கப்பட்டு இன்றைய தின

மும் காட்சி தரும் கல்வெட்டுக்கள் இந்த உண்மையை உலகுக்கெல்லாம் முரசறைந்து தெரிவித்துக் கொண்டிருக்கின்றன. இந்தக் கல்வெட்டுகளிலிருந்து பழந் தமிழகத்துப் பஞ்சாயத்து ஆட்சி முறையைப் பற்றிய அற்புதமான பல தகவல்களை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. அந்தக் காலத்தில் உத்திரன்மேரூர் கிராமம் ஆட்சி முறை வசதிக்காக முப்பது வட்டங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு வட்டமும், ஒரு குடும்பு என்று அழைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட நாளன்று ஒரு தனிக்குடும்பைச் சேர்ந்த வயது வந்த மக்கள் அனைவரும் ஒரு பொது இடத்தில் கூடி அந்தக் குடும்புக்கு உரிய பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பர். ஒவ்வோர் ஓலைத் துணுக்கில் அங்கு வந்துள்ளோர் ஒவ்வொருவரின் பெயரை எழுதி, எல்லா ஓலைகளையும் குடம் ஒன்றில்போடுவர். குடத்தை நன்றாகக் குலுக்கி, விவரம் தெரியாத சிறுவன் ஒருவனை அழைத்து, குடத்திலிருந்து ஏதேனும் ஓர் ஓலையை எடுக்கும்படி பணிப்பர். அவன் எந்த ஓலையை எடுக்கிறானோ அந்த ஓலையில் பொறிக்கப் பட்டுள்ள பெயருக்கு உரியவரே அந்தக் குடும்பின் பிரதிநிதி ஆவர். இவ்வாறு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் முறையை குடவோலை முறை என்றும், இக் கால வாக்குச் சீட்டுகள் போன்ற அக்கால ஓலைகளைக் குடவோலைகள் என்றும் அந்நாளைய தமிழ் மக்கள் அழைத்திருக்கின்றனர்.

இதே குடவோலை முறைப்படி முப்பது குடும்புகளுக்கு உரிய பிரதிநிதிகள் யாவரும் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அந்த முப்பது பேரும் கொண்டதாக ஊர்ப் பஞ்சாயத்து அமையும். சென்னை மாநகராட்சி மன்றத்தின் பல்வேறு பணிகளைச் செம்மையாக நிறைவேற்றுவதற்காகப் பல்வேறு நிலைக் குழுக்கள் (Standing Committees) இக் காலத்தில் அமைந்துள்ளன அல்லவா? இதே வகையான நிலைக் குழுக்கள் பல உத்திரன்மேரூர் பஞ்சாயத்து மன்றத்தில் அந்தக் காலத்தில் அமைந்திருந்ததாகக் கல் வெட்டுகள் தெரிவிக்கின்றன. இந்த நிலைக் குழுக்களை அக் கால மக்கள் வாரியங்கள் என்று அழைத்திருக்கின்றனர். ஏரி மராமத்து வேலையைக் கவனிப்பதற்காக ஏரி வாரியம் (Lake Committee) என்று ஒரு குழுவும், வரவு செலவு வேலையைக் கவனிப்பதற்காகப் பொன் வாரியம் (Finance-Committee) என்று ஒரு குழுவும், குடிதண்ணீர்ப் பிரச்சினையைக் கவனிப்பதற்காக நீர் வாரியம் (Drinking water Committee) என்று ஒரு குழுவும் உத்திரன்மேரூர் பஞ்சாயத்தில் அந்நாளில் அமைந்திருந்ததாகத் தெரிகிறது. இவற்றையும் இவை போன்ற பிற பல சுவையான செய்திகளையும் உத்திரன்மேரூர் கல் வெட்டுகளில் காணும்போது, பஞ்சாயத்து ஆட்சி முறை பண்டைத் தமிழ் நாட்

டில் எவ்வளவு பயனும் பண்பும் செம்மையும் செழுமையும் படைத்தன வாக விளங்கியிருந்தன என்பதை நினைத்து நாம் பூரிப்பும் பெருமை யும் அடைவதில் வியப்பென்ன இருக்கமுடியும்? பண்டைத் தமிழ் மக்களின் அரசியல் கலை நுணுக்கத்திற்கும், நிர்வாக அமைப்புத் திறமைக்கும், குடி தழுவி வாழ்ந்த அக்கால மன்னர்களின் உயர்ந்த பண்பாட்டிற்கும் தலைசிறந்த சான்றுகள் அல்லவா? இக் கல்வெட்டுகள் நெடுங்காலத்திற்கு முன்னிருந்தே தமிழகத்தில் வாழையடி வாழை யாக விளங்கி வந்த பஞ்சாயத்து மன்றங்கள், ஆங்கில ஆட்சி முறை காரணமாக இடையில் சிறிது காலம் மங்கி மறைந்து இருந்தவை இன்று மீண்டும் துளிர்த்துத் தளிர்த்து வளர்ந்து செழிக்கத் தொடங்கியுள்ளன.

ஆயிரமாயிரம் ஆரம்ப ஆசிரியர்களின் சார்பிலும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சார்பிலும் இந்தப் பஞ்சாயத்து மன்றங்களின் ஆட்சியை மனமார வரவேற்கிறோம். இந்த மன்றங்கள் சிறப்பாக வளர்ந்து செம்மையாகப் பணியாற்றித் தமிழகத்துக் கிராமங்களில் வளமும் வாழ்வும் செழித்து ஓங்கும்படிச் செய்யவேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

வாழ்க ஊராட்சி மன்றங்கள்! ஓங்குக அவற்றின் பெருமை!!

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

7. இரண்டரை அடி உயரத்துக்குக் கிணற்றைச் சுற்றி கைப்பிடிச் சுவர் எழுப்ப வேண்டும்.

8. ஆறு அடி அகலத்துக்குக் கிணற்றைச் சுற்றிலும் சிமெண்ட் தளவரிசை போட வேண்டும். தண்ணீர் தேங்காமல், 50 அடிக்கு அந்தண்ணீர் ஓடும்படி அமைக்க வேண்டும்.

9. கிணற்றுக் கருகில் குளிப்பதோ துணி துவைப்பதோ கூடாது.

10. எலிப்பொந்து, பொக்கை புரை, சாக்கடைத் தேக்கம் இவற்றையெல்லாம் நிரப்பி விலக்கிவிட வேண்டும்.

11. வருடத்துக்கு ஒரு முறையாவது—கோடைக் காலமானால், விசேஷம்—கிணற்றைத் தூரு வெடுத்துத் துப்புரவாக்க வேண்டும். சலவைப் பொடியைத் தண்ணீரில் போட வேண்டும்.

இத்தனையும் செய்தால், நல்ல குடிதண்ணீர் நிச்சயமாய்க் கிடைக்கும்.

ரஷிய அடிப்படையில் கல்வி சீர்திருத்தம்

தமிழ் நாட்டில் கொண்டுவர சுந்தரவடிவேலு யோசனை

தமிழ்நாடு கல்வி இலாகா டைரக்டர் திரு. என். டி. சுந்தரவடிவேலு ரஷியாவிலிருந்து 14-10-61 அன்று சென்னை திரும்பினார்.

ரஷியாவில் கல்வி முறை பற்றி அறிந்துவர இந்திய சர்க்காரால் அனுப்பப்பட்ட மூவர் கோஷ்டியில் இவர் ஒரு மெம்பர். விமான நிலையத்தில் நிருபர்களிடம் ரஷிய நாட்டுக் கல்வி முறை பற்றி சுந்தரவடிவேலு பின்வரும் தகவல்களைத் தெரிவித்தார்.

ரஷியாவில் கல்விக்கு முதல் இடம் அளிக்கப்படுகிறது. எல்லாரும் படிக்க ஏராளமாக சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. ரஷிய ஹைஸ்கூல்களில் நமது பழைய இண்டர்மீடியட் விஞ்ஞானப் பாடங்கள் போதிக்கப்படுகின்றன. அங்கு எல்லாக் கல்வி ஸ்தாபனங்களும் சர்க்கார் நிர்வாகத்திற்குட்பட்டவை. ஒரு ரஷிய ஆசிரியருக்கு ஒரு டாக்டரைப் போல் நல்ல சம்பளம் வழங்கப்படுகிறது.

புத்தி கூர்மை குறைவாக உள்ள மாணவர்களுக்குத் தனியாக விசேஷ படிப்பு சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

அந்நாட்டில் பரீட்சையில் மாணவர்கள் தோற்றுப்போவது என்பதே அனேகமாகத் தெரியாத ஒரு விஷயமாகும்.

ஒவ்வொரு ரஷியக் குழந்தையும் மூன்று மொழிகளைக் கற்கிறது. தாய் மொழி, ரஷிய மொழி, ஒரு அந்நிய மொழி ஆகிய 3 மொழிகளைப் படிக்கிறார்கள்.

ரஷிய அடிப்படையில் தமிழ் நாட்டுக் கல்வி முறையிலும் சீர்திருத்தம் செய்யலாம். ரஷியாவுக்குப் போய் வந்த மந்திரி சுப்பிரமணியத்தின் ஒத்துழைப்புடன் இந்தச் சீர்திருத்தங்களைக் கொண்டுவர முடியும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு சுந்தரவடிவேலு கூறினார்.

ரஷியா சென்று திரும்பிய 3 கல்விப் பிரமுகர்களும் அவர்களுடைய அறிக்கையை இந்திய சர்க்கார் கல்வி இலாக்காவுக்கு அனுப்புவார்கள்.

நாம் குடிக்கும் தண்ணீர்

மேரி மாத்யூஸ், ஆர். என், பி. எஸ்ஸி

எத்தனையோ பொருள்கள் இல்லாமல் நாம் சௌக்கியமாக வாழலாம். ஆனால் தண்ணீர் மட்டும் இல்லையென்றால் வாழ்வே முடியாது; செடி கொடி விலங்கினங்களும் கூட வாழ முடியாது. வாழ்க்கைக்கு அத்தனை அவசியம் இந்தத் தண்ணீர். எழுபது சதவிகிதம் ஜல மயமாய் உள்ள நம் உடம்பிலிருந்து நிறைய தண்ணீர் வெளிப்பட்டு, அதனை ஈடு செய்யும் வகையில் தண்ணீர் உள்ளே செல்லவில்லையென்றால், மரணமே சம்பவித்து விடும். இவ்வுண்மைக்குவிளக்கமாகக் காலரா வியாதி கண்ட நோயாளியை உதாரணமாய்ச் சொல்லலாம். காலரா கண்டவன் வாந்தி எடுத்துக்கொண்டே இருப்பான். அதே சமயம் பேதியும் ஆகிக் கொண்டிருக்கும். ஒதுப்புறமான கிராமத்திலோ, மருத்துவ சகாயம் கிடைக்காத இடத்திலோ இந்த நோயாளி இருக்கும் பட்சத்தில், தேகத்தில் திடீரென்று உண்டான திரவக் குறைவுக்குச் சுலபத்தில் ஈடு செய்ய முடியாது. அதனால், ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதற்கு முன்னரேயே பல நோயாளிகள் இறந்து விடுகிறார்கள்.

எவ்வளவு தண்ணீர் இவ்வுடம்புக்குத் தேவை? உடம்பிலிருந்து எவ்வளவு தண்ணீர் வெளியேறுகிறது என்பதைப் பொறுத்த விஷயம் இது. தேகத்தின் பல உறுப்புக்கள் மூலமாகத் தண்ணீர் செலவழிகிறது. மூத்திரக்காய், சருமம் இவற்றின் மூலம் நிறையத் தண்ணீர் போய்விடுகிறது. சுவாசகோசத்திலும் குடலிலும் கொஞ்சம் தண்ணீர் செலவழிகிறது. வயது முதிர்ந்தவர்கள், குழந்தைகள் வாலிபர்களைப் போன்று அத்தனை தண்ணீர் சருமம், சுவாசகோசம் இவற்றின் மூலம் இழப்பதில்லை. எனவே அவர்களை விட குழந்தைகளுக்கு அதிகமாகத் தண்ணீர் தேவைப்படுகிறது.

கொளுத்தும் வெய்யிலில் உழைக்கும் ஒருவனுக்குத் தேகத்தின் உஷ்ண நிலை மாறாமல் சீராக இருக்க வியர்வை வெளிப்படுவதால், திரவப் பொருள்கள் அதிகம் தேவைப்படுகின்றன. வியர்வை மிதமிஞ்சி வெளிப்படும் போது, உடம்பின் உப்புச் சத்து அதிகமாக வெளியேறிவிடுகிறது. இந்த உப்பு நஷ்டத்தைத் தண்ணீரில் உப்பைக் கொஞ்சம் கலந்து உட்கொள்வதால் ஈடுசெய்து விடலாம்.

உடம்பின் புறச் சுத்தத்துக்கு நீர் இன்றியமையாதது. அவ்வாறே அக உறுப்புக்கள் சுத்தமாய் இருக்கவும் நியதியில் நின்று

ஒழுங்குடன் இயங்கவும் தண்ணீர் தேவைப்படுகிறது. போதுமான அளவுக்குத் தண்ணீர் பருகா விட்டால், சிறுநீர் நெகிழ்ச்சி குறைந்து, மூத்திரக் காய்களின் உட் குழல்களில் உறுத்தல் உண்டாகும். இந்த நிலைமை நீடித்தால், மூத்திரக் காய்களின் இயக்கம் நின்று போகலாம்; இல்லை, அவற்றில் கற்கள் உண்டாகலாம்; அதுவும் இல்லை அவைகள் நோயுறலாம். மூத்திரக் காய்களைச் சுத்தம் செய்யவும், கழிவுப் பொருள்களில் நெகிழ்ச்சி பிறப்பிக்கவும், அடர்த்தியான கரைசலான சிறுநீரால் உண்டாகவல்ல உறுத்தலைத் தவிர்க்கவும் தண்ணீர் மிக்க பயனுள்ளதாகிறது. ஆரோக்கியமாய் வாழத் தினந்தோறும் எட்டு குவளை தண்ணீர் தேவைப்படுகிறது. காலையில் பல் துலக்கும் போது, ஒரு குவளையும் இரவில் படுப்பதற்கு முன்னர் ஒரு குவளையும் தண்ணீர் பருகுவது நல்ல பழக்கம். இப்பழக்கம் மலச்சிக்கலைத் தவிர்க்கும்.

உணவில் உள்ள பல் விதச் சத்துக்களைக் கரைக்கவும் உண்ட உணவைச் சீரணித்து ஏற்றுக் கொள்ளவும் தண்ணீர் தேவை. தெரிந்தோ தெரியாமலோ, உடம்புக்குள் விஷச் சத்து ஏதாவது உட்புகுந்து விட்டால், அதனை இளக்கி உடலை விட்டு வெளிப்படுத்த நிறையத் தண்ணீர் வேண்டியிருக்கிறது. உட்புகுந்த நோய்க் கிருமியுடன் உடம்பு போராடும் போதும், அந்தக் கிருமியைத் தொலைத்துத் தள்ள நிறையத் தண்ணீர் தேவையாகிறது. தீப் பற்றி எரியும் வீட்டில் தண்ணீரைக் கொட்டி, நெருப்பை அணைப்பது போன்று, சுரம் கண்டு திசுக்கள் காந்தும் போது, தண்ணீரை நிறையப் பருக வேண்டும். தண்ணீர் கொடுத்தால், சுரம் அதிகமாகிவிடும் என்று சிலர் கருதுகிறார்கள். தண்ணீர் தாகம், தண்ணீர் தாகம் என்று தவித்துக் கதறினாலும், சுரம் அதிகமாகிவிடும் என்கிற பயத்தில் இவர்கள் நோயாளிக்குத் தண்ணீர் கொடுப்பதில்லை. ஆனால் உண்மை என்ன? குடி தண்ணீர் குறையக் குறைய, உள்ளே உடம்புத் திசுக்கள் எரிச்சல் கண்டு, நோயாளி நாளுக்கு நாள் வற்றி உலர்ந்து பலஹீனம் அடைகிறான். பிரசவமான பிறகு கூட, பிள்ளைக் கனி பெற்றவளின் தாகம் தணியப் போதுமான தண்ணீர் கொடுப்பதில்லை. அப்படி தண்ணீர் கொடுத்தால், கருப்பையில் நோய் விளையும் என்பது சிலரது நினைப்பு. இந்த நினைப்பு தப்பான நினைப்பு. ஏனெனில், குழந்தை குடியிருந்த கருப்பையும் உணவு செல்லும் இரைப்பையும் ஒன்றல்ல; வேறு வேறு.

நாம் உயிர் தரித்து வாழ இந்தத் தண்ணீர் மிக மிக அவசியம். இத்தனை அவசியமான தண்ணீர் எவ்வாறு கிடைக்கிறது என்பதை அறியலாம்.

மழை நீர்

இயற்கையாக நமக்குக் கிடைக்கும் தண்ணீரில் மழை நீரே மிக்க பரிசுத்தமானது. எனினும், இதில் ஒரு சங்கடம். பரிசுத்தமான இதனைப் பரிசுத்தமாகவே பெறுவது கஷ்டம். மழை நீர் கால் பாய்ச்சி வரும் வான வெளியில் தூசியும் நுண் புழுக்களும் நிறைந்திருக்கின்றன. குடிநீராக மழை நீரைச் சேகரிக்க விரும்பினால், மழை கொஞ்ச நேரம் பெய்து, வான வெளி சுத்தமானவுடன் நாலு கம்பை நீண்ட சதுர வடிவில் திறந்த வெளியில் தரையில் நட்டு, சுத்தமான துணியை அவற்றில் விரித்துக் கட்டி, அதற்குக் கீழே நடு மையத்தில் சுத்தமான பானையைத் தரையில் வைக்க வேண்டும். அப்படிப் பிடித்த ஜலம் வடிகட்டின ஜலமாய், சுத்தமாய் இருக்கும்.

குளத்து நீர் அல்லது குட்டை நீர்

ஆழமில்லாத குளம் குட்டைகள் சாதாரணமாய்ச் சரியான பாதுகாப்பு இல்லாதனவாய்த் தான் இருக்கும். எனவே, இவற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் குடிப்பது அத்தனை நல்லதல்ல. வேறு முறைகளில் குடி தண்ணீர் கிடைக்காத ஜனங்கள் வேண்டுமானால் இந்தத் தண்ணீரைப் பயன்படுத்தலாம். ஆனால் ஒன்று: நன்றாகக் கொதிக்க வைத்த பின்னரே இந்த நீரைப் பருக வேண்டும்.

ஆற்று நீர்

ஆற்று நீர் அதன் உற்பத்தி ஸ்தானத்தில் சுத்தமாய் இருக்கும். ஆனால் போகப் போக அசுத்தம் கலந்து வீணாகிவிடுகிறது. தீச் சுவை யறியாப் பிணத்தின் உறுப்புக்களும் வெந்து தீய்ந்த சாம்பலும் ஆற்று நீர் ஓட்டத்தில் வந்து கலந்து ஐக்கியமாகின்றன. ஆடு மாடுகளை, இதர மிருகங்களை ஆற்றில் குளிப்பாட்டுகிறார்கள். மானிடர்களும் முழுகி முழுகிக் குளிக்கிறார்கள். ஆற்றின் இரு கரையிலும் மல சலம் கழிக்கிறார்கள். இந்த அசுத்தத்தை யெல்லாம் மழை சலம் அடித்துக் கொண்டு வந்து, ஆற்றில் தள்ளுகிறது. இப்படி யெல்லாம் ஆற்று நீர் தூய்மை கெட்டு, அசுத்தமய மாகிறது. இது காரணமாகப் பல வியாதிகள் உண்டாகின்றன.

கிணற்று நீர்

கிராம மக்கள் குடி தண்ணீருக்குக் கிணற்றைத் தான் நம்பி வாழ்கிறார்கள். இந்தக் கிணற்று நீரும் கழிவு நீர் கலந்து வீணாகக் கூடும். மாட்டுத் தொழுவமோ, ஒரு கக்கூசோ அருகில் இருந்து விட்டால் கேட்கவே வேண்டாம். அருகில் வளர்ந்துள்ள பெரிய மரங்கள் இலைகளைத் தழைகளைக் கிணற்றுக்குள் சொரிந்து, ஜலத்தைக் கெடுக்கலாம். மரத்தின் வேர்கள் கிணற்றின் பக்கச்சுவரில் பிளவுகள் உண்டாக்க, அவற்றின் மூலம் நோய்க் கிருமிகள் நீரில் வந்து

கலக்கலாம். கிணற்றுக் கருகில் எலிப் பொந்துகள் இருந்தால், அவைகளும் தீங்கு விளைவிக்கும். கைப்பிடிச் சுவர் இல்லாத கிணற்றுக்குள் மழை நீரும் வெள்ளம் கண்ட நதி நீரும் ஓடித் தாராளமாய்ப் பாய்ந்துவிடும்.

இவ்வாறு கிணற்று நீர் பல விதத்தில் அசுத்தமாகலாம். மிருகங்களும் மனிதனின் கவனக் குறைவும் இக்காரியத்தில் மிகுந்த பங்கு கொள்ளும். தண்ணீர்ப் பாத்திரங்களை நன்றாகக் கழுவி, எப்பொழுதும் மூடியே வைத்திருக்க வேண்டும். தண்ணீர் அதிக நேரம் ஒரு பாத்திரத்தில் இருந்தால், கொழகொழப்பு பாத்திரத்தில் காணும். அப்பொழுது அந்தத் தண்ணீர் குடிக்க லாயக் கற்றது. அனேகம் கிராமங்களில் தண்ணீர் சேந்தப் பயன்படும் வாளியும் தாம்பும் முற்றத்தில் கோழியும் பன்றியும் நாயும் பிற பிராணிகளும் ஓடிக்கொட்டம் அடிக்கும் இடத்தில் வைக்கப்பட்டிருக்கும். தண்ணீர் கெடுவதற்கு இது ஒரு காரணம்.

சில வாயுக்கள், சில உப்புக்கள் நீரில் கலந்திருந்தால் ஆரோக்கியத்துக்குக் கெடுதல். ஈயச்சத்து கலந்த தண்ணீர் குடிக்க லாயக்கற்றது.

குடிநீரில் குடியேறி வாழும் வியாதிக் கிருமிகளை உட்கொள்ளுவதால், பல நோய்கள் நமக்கு உண்டாகின்றன. காலரா, டைபாயிட், அமீபா பூச்சியால் வரும் வயிற்றுக் கடுப்பு, கினியா பூச்சியால் வரும் நோய் ஆகியவை அசுத்த நீரைப் பருகுவதால் உண்டாகும் பிரபலமான வியாதிகளில் ஒரு சில.

காலரா வியாதி கிணற்று ஜலத்தில் தாராளமாய் விருத்தியாகும் ஒரு வித நோய்க் கிருமியால் உண்டாவது. இந்த நோய்க்கிருமி ஆற்றிலும் கால்வாயிலும் கிராமத்துக்குட்டைகளிலும் வளர்ந்து செழிக்கக் கூடியது. தண்ணீர் மூலம் பரவும் கொடிய வியாதிகளில் காலராவும் ஒன்று. இவ்வியாதியின் அடையாளம் வாந்தியும் பேதியும். மலம் வடித்த கஞ்சி போல் கழியும். நோய் கண்ட சிறிது நேரத்திற்குள் வியாதிக்காரன் வற்றி உலர்ந்து விடுவான். கழிந்து போன நீர்ச்சத்துக்கு ஈடு செய்யத் தேவையான தண்ணீர் உடலுக்குள் செல்லவில்லை யென்றால் ஆசாமி க்ளோஸ்! உயிர்ப் பலி கேட்கும் இக் கொடிய வியாதியைத் தடுக்கலாம். காலரா பெருவாரியாகப் பரவியுள்ள காலத்திலும், சுத்தமான குடி தண்ணீர் வசதியற்ற இடத்துக்குச் செல்லுமுன் முன்னரும் காலரா ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். இந்த வியாதி சுத்தமாக வராமல் இருக்க, ஆறு மாதத்துக் கொரு முறை ஊசி போட்டுக்கொள்ள வேண்டும்.

அசுத்த நீரில் உள்ள இன்னொரு உயிர் அணுவினால் டைபாயிட் உண்டாகிறது. சிறு குடலைக் குறி வைத்துத் தாக்கிச் சீர

ழிக்கும் இவ்வியாதியின் சின்னம் ஜுரம், வயிற்று வலி, வயிற்றுப் போக்கு அல்லது மலச்சிக்கல். தண்ணீராய்க் கழியும் மலம் பருப்புக் குழம்பு போல் இருக்கும். நோய் இருக்கும் வரையில் காய்ச்சல் இருக்கும். கவனித்துச் சிகிச்சை செய்யா விட்டால், இந்தக் காய்ச்சல் மூன்று மாதம் வரையிலும் கூட நீடிக்கும். கிராமத்து மக்கள் இதைத் தொண்ணூறு நாள் காய்ச்சல் என்கிறார்கள். க்ளோரோமிசிடின் போன்ற மருந்துகள் இல்லாத காலத்தில் மாதக் கணக்கில் மக்கள் இவ்வியாதியின் பிடிக்குள் கிடந்து வருந்தினார்கள். எனவே, அப்படி ஒரு பெயர் இதற்கு வைத்துவிட்டார்கள். இந்த டைபாயிட் விபரீதமாகி, பெரும்பாலும் குடலைத் துளைத்துவிடுவதும் உண்டு. வருடம் தவறாமல் டைபாயிட் ஊசி போட்டுக்கொண்டு, நல்ல சுத்தமான தண்ணீரும் அருந்திக் கொண்டு வந்தால், வியாதி கிட்ட நெருங்காது.

அமீபா பூச்சியால் வரும் வயிற்றுக் கடுப்பு அமீபா பூச்சியால் உண்டாகும் வியாதி! அமீபா பூச்சி ஒற்றை உயிரணு கொண்ட பிராணி, சாதாரண கண்ணால் இதைக்காண இயலாது. வியாதிக்குச் சின்னமாக வயிற்றில் வலி பிறக்கும்; மலம் சீதமும் ரத்தமுமாகப் போகும். அமீபா பூச்சி குடலின் பக்கச் சுவர்களில் எல்லாம் புகுந்து துளை போட வல்லது. அப்படித் துளை விழுந்து உயிர் போவதும் உண்டு. உடம்பின் முக்கிய உறுப்புக்களில் ஒன்றான கல்லீரலையும் அமீபா பாதிக்க வல்லது. கல்லீரலில் கட்டி வந்து உயிருக்கு ஆபத்து விளைவிக்கலாம். அமீபா உடலுக்குள் நுழைந்து விட்டால், பிறகு அதனை வெளியேற்றுவது கடினமான காரியம். இந்த அமீபா அசுத்த ஜலத்தின் மூலம் தேகத்துக்கள் பிரவேசிக்கிறது.

படிகள் அமைந்த நாழிக் கிணற்று ஜலத்தில் கினியா பூச்சிகள் வாழுகின்றன. காலோடு ஒட்டிக்கொண்டு வந்து தண்ணீரில் கலந்து பரவும் இவை வியாதியைப் பொது உடைமையாக்க எத்தனிக்கும். இந்த வியாதியினின்றும் தப்ப விரும்புகிறவர்கள் நாழிக் கிணற்றுக்கு அருகில் கூடச் செல்லலாகாது.

சுத்தமான, குடிதண்ணீர் எவ்வாறு கிடைக்கும்? இதற்குப் பல வழி வகைகள் உண்டு :—

கொதிப்பு முறையில் சுத்தம் செய்தல்

கொதிக்கும் நீரில் பத்து நிமிஷத்தில் எல்லா வியாதிக் கிருமிகளும் செத்து விடுவதால், இந்த முறை வீட்டிலே அனுஷ்டிக்கக் கூடிய விரைவான, பத்திரமான முறை. கொதித்த வெந்நீரைச் சுத்தமான பாத்திரத்தில் ஊற்றி வைக்க வேண்டும். காலரா பரவியுள்ள நாட்களில் அவசியம் நீரைக் கொதிக்க வைத்து, ஆற விட்டுப் பருக வேண்டும்.

அயோடின் முறை

ஹாலோஸ் கரைசலைத் தண்ணீரில் விட்டு, பத்து நிமிஷம் வைத்திருந்தால், கிருமிகள் அனைத்தும் அழிந்து போகும் (20,000 பங்கு தண்ணீருக்கு ஒரு பங்கு அயோடின்). சுத்தமான அயோடின் சேர்ந்துள்ள கெஸ்ஸெபீல்ட் மாத்திரைகளையும் சில சமயம் உபயோகிப்பதுண்டு. இரண்டு கிரைன் எடை சோடா அயோடேட் மாத்திரையையும் அளவு சைட்ரிக் அமிலத்தையும் நாலு காலன் தண்ணீரில் கலந்து உபயோகித்தால், சில நிமிஷ நேரத்தில் காலரா கிருமிகளும், டைபாயிட் கிருமிகளும் செத்து ஒழிகின்றன.

சலவைப் பொடி முறை

சுண்ணும்பு க்ளோரைடான சலவைப் பொடி வெண்மங்கலான ஒரு பொடி. இது கட்டியாகவும் காணப்படும். இதற்குக் க்ளோரின் வாசனை கொஞ்சமும் கசப்பான, வெறுப்பான கரிப்பு ருசியும் உண்டு. சுத்தம் செய்யப்பட வேண்டிய தண்ணீரில் க்ளோரின் எந்த அளவுக்குக் கலந்திருக்கிறது என்பதைப் பொறுத்து, இந்தப் பொடியின் அளவு நிர்ணயிக்கப்பட வேண்டும். இக் காரியம் கொஞ்சம் சிக்கலான காரியம். இதற்குச் சுகாதார மேற்பார்வையாளரின் உதவியை நாடுதல் நலம். விஷயம் தெரிந்ததும் தண்ணீரைச் சுத்தப்படுத்துவதற்கு வேண்டியது அனைத்தையும் அவர் செய்வார்.

வடிகட்டு முறையால் தண்ணீரைச் சுத்தம் செய்வதும் உண்டு. ஆனால் அது அத்தனை நல்லது அல்ல. அசுத்தங்களைச் சுத்தமாய் முழுவதும் நீக்கிவிட்டோம் என்று சொல்வதற்கில்லை இந்த முறையில்.

ஆழமில்லாத கிணற்றிலிருந்து நல்ல தண்ணீர் பெறக் கீழ்க் கண்ட விதிகளை அனுசரிக்க வேண்டும் :—

1. மழை நீரோ ஆற்று நீரோ ஓடி உள்ளே நுழையாதபடி கிணறு மேட்டுப்பாங்கான இடத்தில் அமைந்திருக்க வேண்டும்.

2. நிலத்தில் அசுத்தம் இருக்கக் கூடாது. கக்கூஸ், சாக்கடை போன்ற அசுத்த ஸ்தலங்கள் கிணற்றுக்கு 200 அடிக்குள் இருக்கலாகாது.

3. நிலத்தில் அடியில் கடினமான பகுதியை ஊடுருவிக் கொண்டு நிற்கும் அளவு ஆழம் உள்ளதாய் இருக்கவேண்டும்.

4. கல்லால் கட்டி, சிமெண்ட் அல்லது கான்கிரீட் போட்டுப் பூசியிருக்க வேண்டும், பக்கச் சுவர் மூலம் தண்ணீர் கசியக் கூடாது. அடியிலிருந்து தண்ணீர் ஊற வேண்டும்.

5. கிணற்றுக் கருகில் மரம் ஒன்றும் வைக்கலாகாது.

6. தண்ணீர் எடுக்க வாளியோ கைப் பம்போ உபயோகிக்க வேண்டும்.

(7-ம் பக்கம் பார்க்க)

சமூகப் பாடப் பயிற்சி நூல்

(Social Studies Record Books.)

புதிய பாடத் திட்டப்படி திருத்தி அமைக்கப்பட்டது.

மாவட்டங்கள்	
சென்னை	75 ந.பை
செங்கற்பட்டு	,,
வட ஆர்க்காடு	,,
தென் ஆர்க்காடு	,,
சேலம்	,,
கோயமுத்தூர்	,,
நீலகிரி	,,
திருச்சிராப்பள்ளி	,,
தஞ்சாவூர்	,,
மதுரை	,,
இராமநாதபுரம்	,,
திருநெல்வேலி	,,
கன்னியாகுமரி	,,
ஐந்தாம் வகுப்பு	87 ந.பை
ஆறும் வகுப்பு	94 ந.பை

பழைய பாடத் திட்டப்படி

ஏழாம் வகுப்பு	62 ந.பை
எட்டாம் வகுப்பு	62 ந.பை

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

'ஆரம்பக்கல்வி' ஆபீஸ்

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

சமூகப் பாடப்பயிற்சி நூல் திறவு கோல்

Key to Social Studies

சமூகப் பாடப்பயிற்சி நூல்கள், 4, 5, 6 வகுப்புகள் வரை யில் புதியபாடத் திட்டப்படியும் 7, 8 வகுப்புகளுக்குப் பழைய பாடத்திட்டப்படியும் தயாரிக்கப்பட்டுள்ளன. புதிய பாடத்திட்டப்படி 4, 5, 6 வகுப்புகளுக்கு வேண்டிய முக்கிய கேள்விகளும், குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. சில ஆசிரியர்களுக்குக் கேள்விகளுக்கான தக்க விடைகளும், குறிப்புகளுக்கான விளக்கங்களும் தயாரித்துப் பிள்ளைகளுக்குக் கொடுக்க முக்கியமாக கிராமப் பகுதிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. ஆதலால் ஆசிரியர்களுக்கு உதவியாய் இருக்க நாம் பிரசுரித்துள்ள சமூகப் பாடப் பயிற்சி 4, 5, 6 வகுப்புகளுக்கான பயிற்சி புத்தகங்களில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்குப் பதில்களும், குறிப்புக் களுக்கான விளக்கங்களும் வகுப்பு வாரியாகத் தனியே அச்சடித்திருக்கிறோம். நமது பாடப் பயிற்சி புத்தகங்கள் வைத்திருக்கும் பாடசாலை ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர் மூலமாய்க் கடிதம் எழுதினால், மேற்படி சமூக பாடப் பயிற்சி நூல் திறவுகோல் வகுப்பு வாரியாக வகுப்பு ஒன்றுக்கு ஒரு பிரதி வீதம் இனமாக அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர்,

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,

ஆரம்பக்கல்வி ஆபீஸ், சென்னை-1.

உருவில் சிற்றூர்—புகழில் பேரூர்

(சாமி சிதம்பரனார்)

ஊர்

குற்றாலம் சிற்றூர். ஆனால் புகழில் பேரூர். இரத்தினம் சிறிது; அதன் ஒளி பெரியது. பொன் சிறிது; அதன் விலை மதிப்பு அதிகம். சிற்றணு உருவாகிய மருந்து, பெருநோயைப் போக்கும். இவ்வுண்மையை விளக்கும் இச் சிற்றூர்.

சிறு சிறு மாளிகைகளும், பெரும் பங்களாக்களும், இங்கே உள்ளன. பணக்காரர்கள் - தனிப் பெரு மாளிகைகளில் தனித்துறைகின்றனர். நடுத்தர மக்கள் சிற்றில்லங்களில் கூடியுறைகின்றனர். பல மதத்தினர் பல சாதியினர் ஒன்று கூடியுறைகின்றனர். பல ஊரினர் ஓரூரினர்போல் உறைகின்றனர். "யாதும் ஊரே, யாவரும்கேளிர்" என்ற உண்மைக்கு இவர்கள் எடுத்துக்காட்டு.

தேரோடும் தெரு. சங்கு வடிவத்தில் அமைந்த வீதி. சிறு சிறு சந்துகள். பேராற்றில் பிரிந்து செல்லும் கிளைகள்போன்றவை சந்துகள். ஊரெங்கும் தெங்கு, கமுகு, மா, பலா, ஆல், அரசு, மருது, தேக்கு போன்ற மரங்களின் செறிவு. தளிர்த்த அம்மரங்களின்மேல் கொடிகள் கணவனைத் தழுவும் மங்கையர்கள் போல் தழுவிக் கிடக்கின்றன. மரங்களின் நிழல், எம்மூர்க்கு வந்தவரை வாட்டாதேயென்று சூரியனுக்குக் கூறுவதுபோல் மேல் நோக்கி நின்று தளிர்க்கரங்களை அசைக்கின்றன. என் மக்களை ஆதவனுக்கு அஞ்சாதீர்கள் என்று சொல்லுவது போல் கவிந்து நிழல் தருகின்றன.

விருந்தினருக்குக் கமுக மரம் கவரி வீசுகின்றது. வாழை இலை பரப்புகின்றது. பலா, மா, பழம் சிந்துகின்றன. தெங்கு இளநீர் தருகின்றது. பூதேவி அருள் சுரந்து பால் தருவதுபோல் நீர் தருகின்றாள்.

குரங்குகள் கூட்டம், நாங்கள் உங்கள் முன்னோர்தாம் என்று கூறி வந்தவர்களிடம் உறவு பாராட்டுகின்றன. தாய்க் குரங்குகள் வயிற்றில் மகவை ஒடுக்கிக்கொண்டு தாவுகின்றன, மதில்களின்மேல் மாளிகைகளின் மேல் உலாவருகின்றன; குழந்தைகளை வைத்துக் கொஞ்சுகின்றன.

தாய் உட்கார்ந்தவுடன் குட்டிக் குரங்குகள் பரபரவென்று அங்கும் இங்கும் ஓடுகின்றன. துடுக்குப் பிள்ளையை அன்னை பிடித்து அடக்கி அணைப்பதுபோல தாய்க் குரங்கு சேய்க் குரங்குகளை அடக்கி அணைக்கின்றன.

சுடுகதிர் வீசும் சூரியன் இவ்வூருக்கு மட்டும் தண்கதிர் தருகின்றான். நற்குணமுடையோரை அடுத்த தீக்குணமுடையோரும் நற்குணமுடையராகி நற்செயல் புரிவர் அன்றோ?

தெங்கும், கமுகும், மலையின் உச்சியை எட்டிப்பார்க்க எழும்புவதுபோல் மேல்நோக்கி வளரும்.

மலை

உயரம், கரியநிறம். மேனோக்கி வளர்ந்திருக்கும் செடி, மரங்கள். அருவிநீர், மதயானை நின்று மதம் பொழிவதுபோல் காணும்.

மலையின்மேல் பல தோட்டங்கள் உண்டு. பழ மரங்கள் பயிர் செய்வர். பழத் தோட்டத்திற்குக் காவலர்கள் குரங்கினம். மற்றப்பறவைகளை, வரவொட்டா. ஆயினும் பறவைகள் குரங்கினங்கள் சண்டையிடும் சமயம் பார்த்துப் பழங்களைப் பறித்துச் செல்லும். இது, குடிகள் ஒன்றுபடாமல் சண்டையிடும் நாட்டின் சுதந்திரத்தை அந்நியர் கவர்வது போல் காணப்படும்.

நீர் சுரக்கும் மலைக்கு நிமிர்ந்து குடைபிடிக்கும் மரங்கள். அம்மரங்கள் தம்மையீன்ற தாயைப் பேணி வணங்குவதுபோல் கனிகளைச் சிந்தும், மலர்களை உதிர்க்கும்.

எருமைகள் போன்ற கரும் பாறைகள், யானைகள் நிற்பன போல் — படுத்திருப்பனபோல் காணப்படும் பாறைகள், குடைவிரித்ததுபோன்ற பாறைகள், பூமியின் தோற்றத்தைக் காட்டும் குண்டுப் பாறைகள் இவ்விதம் பலபல வடிவங்களில் காட்சி தருகின்றன.

மரச்செறிவு, கொடிப் படர்வு, செடி நிறைவு இவைகளால் மான்களின் ஓட்டம் தடைப்படுகின்றது. புலிவேங்கைகளின் பாய்ச்சலுக்கு இடமில்லை. வெள்ளாடு, காட்டெருமைகளும் மெதுவாக நுழைந்துசெல்லுகின்றன. குயில் மயில், கிளி, நாகணவாய், புறா, காக்கை, செம்போத்து முதலியவைகளும் சிறகை விரித்துப் பறக்க முடியாமல், இலைகளினிடையே, கொடிகளினிடையே நுழைந்து நுழைந்து செல்லுகின்றன.

மலை, நாட்டின்பொதுச்சொத்து. உழவர்கள் பயிர் செய்ய நீர் தருகின்றது. கொத்தர்களுக்குக் கல் தருகின்றது. தச்சர்களுக்கு மரம் தருகின்றது. பசித்தோர்க்குப் பழங்கள், தானியங்கள், அருந்துவதற்கு நீர் தருகின்றது. களைத்தோரைக் குளிப்பாட்டிக் களையாற்றுகிறது. இம்மலையிலுள்ள பண்டங்களைக்கொண்டு பல வெள்ளிமலை போன்ற மாளிகைகள் கட்டலாம், பொன் மலை போன்ற மாளிகைகள் கட்டலாம். நோயுற்றோரின் நோய் தீர்க்கும். வேண்டுவார்க்குவேண்டியனவெல்லாம் தரும். ஒரு தேசத்தின் சொத்தெல்லாம் பொதுவாக இருந்தால் அதனால் எல்லா மக்க

ளும் இன்பம் எய்துவர் என்பதற்கு இம்மலை உதாரணம். இந்தக் காட்சியைக் கண் கூடாகக் கண்டும் ஏன் சில மக்கள் பல சொத்துக்களைத் தமக்கே உரிமையாக்கிக்கொண்டு, சமுதாயத்தைப் பாழ்படுத்துகின்றனர்?

எல்லோருக்கும் எப்பொழுதும் இன்பம் கொடுக்கச் சபதம் கொண்டேன் வாருங்கள் என்பால் என்று எப்பொழுதும் வெண் கொடி உயர்த்தியதுபோல் மேலே வெண்மேகம் அசைந்து நிற்கும்.

விரும்பத் தக்க புளிப்புடையதால் மாசிக்காய் எனப் பெயர் பெற்றது. அந்தக் காய்களை மந்திகள் பறித்துப் பந்தாடுகின்றன.

அருவி

கரியமலை, இருட்படலம், வெள்ளருவி, படங் காட்டக் காட்டிய வெள்ளைத் திரை, அதில் நீராடுவோர் நீண்டும் குறுகியும், பருத்தும், மெலிந்துமுள்ள உருவத்தினர். சிவந்தவர், கறுத்தவர், வெளுத்தவர், மீசையுடையார், தாடியுடையார், இரண்டும் உள்ளோரர், இரண்டும் அற்றோர், கமுகனைய பெண்கள், சிற்றூனை போன்ற பெண்கள், மான்போன்ற, வாழைபோன்ற, மயிலனைய குயிலனைய கொடி போன்ற மாதர்கள்; பலநிறப் புடவை, சட்டை தரித்துள்ளனர். பல நிறக் கல்நகைகள், பொன்னகைகள் பூண்டுள்ளனர். இவ்விருபாலரும் அருவி நீரில் நின்றும் திரிந்தும் ஆடுவதும் திரையிற் காட்டும் காட்சிபோல் காணுகின்றது.

பல நோய்க்கு ஒரு மருந்து. மருத்துவர் இல்லாமலே ஒவ்வொருவரும் உண்டுமூழ்கி உடல் நலம் பெறும் மருந்து. மருந்தை நீரில் கரைத்து மக்களுக்குக் கொடுக்கும் முறையை இந்த அருவியிலிருந்து கண்டறிந்தனர்.

இந்த அருவி நீரில் பழச்சாறும், தேன் துளியும் கலந்து வருவதால் இதில் மூழ்கியவர், இதை அருந்தியவர் மதுவுண்டு பழகியவர்கள் போல் அருந்தித் திளைத்து ஆடுகின்றனர்.

தேன் கலந்துவருவதால் தேனருவியாகி, மணங்கலந்து செண்பா அருவியாகி, குணத்திலும் உருவிலும் அழகுடையதாய் வீழ்வதால் சித்ர நதியெனப் பெயர் பூண்டு வற்றாத வடவருவியாய் வீழ்கின்றது.

உடல் அழுக்கை, உடல் நோயை என் கைகளால் அடித்து ஓட்டுகிறேன், இதுபோல் உங்கள் மன அழுக்கையும், மன நோயையும் ஓட்டுங்கள் என்பது போல் ஓவென்றிரைந்து எதிர் நிற்பார் முகத்திலும், மார்பிலும் தலையிலும் தடதடவென்று அடிக்கின்றன: திருப்பி நின்றால் முதுகில் அறைகின்றது குத்துகின்றது.

உங்கள் உடற் பிணி போக்குகின்றேன், மனப்பிணியை மாய்க்

கின்றேன். உயிர்வாழ உணவுப் பொருளும் உற்பத்தி செய்து தருகிறேன் என்பதுபோல மக்களைக்குளிப்பாட்டிவிட்டு சித்ரநதி மூலம் ஓடி வயல்களில் பாய்ந்து வளம்செய்து பயிர் வளர்க்கின்றது. இதுவே ஒவ்வொரு மனிதனுடைய கடமையும் என முழக்கமிடுகின்றது.

இடையறாது வேலை செய்யும் அருவிக்குக் குடை பிடிப்பது போல் இருபுறமும் மரங்கள்! சற்றுப் படுத்து இளைப்பாறுக என்று சொல்வதுபோல் பாய் பின்னியதுபோல் நெருங்கிப் படர்ந்த பசுங்கொடிகள்.

தேனருவிக்குமேல் தெரியவில்லை. வானக கங்கையென்பர் சிலர். வாரி வழங்கும் அருவியென்பர் சிலர். மலையே ஊறிச் சுரக்கும் என்று உரைப்பர் சிலர். அருவியின் மூலம்அறிவதற்கில்லையாதலால் எது கூறினும் இயையும்.

கோயில்

சங்குவடிவில் அமைந்துள்ளது சக்கரம் உச்சி. உயர்ந்த கோபுரம் இல்லை. அடி உயர்ந்த மலையே கோபுரமாக உடையது.

பண்டு பெருமாள் கோயில். இன்று சிவன் கோயில். ஆயினும் அரியும் உண்டு, சிவனும் உண்டு.

ஏழையர்கள் தங்குவதற்கு இருப்பிடம் கோயில். ஏழைகள் மண்டபத்தில் சமைத்துண்பர். மகிழ்ச்சியுடன் கோயிலில்உறங்குவர். சாதி மத பேதம் இன்றிக் கோயிலினுள் அனைவரும் செல்லலாம்.

அகத்தியர் பெருமானைச் சிவனாக்கினார்என்பர். பெருமானுக்கு உருவுண்டு. சிவம் வடிவத்திற்கு உருவில்லை. சிவம் என்பதற்கு மங்களம், இனிமை, தமிழ் என்பது பொருள். இவ்வூர், இம்மலை, இவ்வருவி, பார்ப்பதற்கு அழகுடையது. மங்களகரமானது; வசிப்பவர்க்கு இன்பம் பயப்பது. இயற்கைகளைக் கண்டு அனுபவிப்பவர்களுக்குத் தமிழ் போல் தெவிட்டாத இன்பந் தருவது என்பதை விளக்கவே அறிஞர் மாலுருவுக்குப் பதில் சிவவுரு அமைத்தனர்.

சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் புகழ்ந்தனர். இளைஞர் சம்பந்தர் இயற்கையின் வனப்பை எடுத்துக் கூறியுள்ளார். திரிகூடராசப்பக் கவிராயர் இதன் தெய்வத் தன்மையை விவரித்துள்ளார்.

கோயிலும், கோயிலில் உள்ள தெய்வங்களும் செயற்கை. மலையும், அருவியும் இயற்கை. செயற்கையைக் காட்டிலும் இயற்கையே சிறந்ததென்பதை விளக்கும் இக்கோயில்.

ஒரு சிலரே செயற்கையான கோயிலுக்குள் செல்கின்றனர். பெரும்பாலானவர் கோயிலைப் பொருட்படுத்துவதே யில்லை. மலையையும், அருவியையுமே

(21-ம் பக்கம் பார்க்க)

விண்வெளி ஆராய்ச்சியால் விளையும் நன்மைகள்

உலகைச் சுற்றிவரும் செயற்கைக் கோள்கள் பற்றி இன்று அடிக்கடி கேள்விப் படுகிறோம். விண்வெளியுகம் தோன்றிவிட்டது. இந்த நூற்றாண்டின் மிக்க பரபரப்பூட்டும் நிகழ்ச்சி இதுவே எனலாம். எனினும் விண்வெளி ஆராய்ச்சி ஏராளமான செலவு இழுப்பதாகவே உள்ளது. எனவே, இவ்வளவும் வீண் செலவுதானே என்ற ஐயம் தோன்றலாம். வீட்டு வேலைக்கும், மருத்துவப் பணிக்கும், கல்வித் துறைக்கும் இதனால் ஏதாவது நன்மை உண்டா என்ற கேள்வி எழுவது இயல்பே.

அன்றாட வாழ்க்கைக்கு உதவும் அநேக நன்மைகளை அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி ஏற்கனவே வழங்கத் தொடங்கிவிட்டது என்பது ஆறுதலளிக்கும் உண்மையாகும்.

முதலில், விண்வெளி ஆராய்ச்சியால் விஞ்ஞானஅறிவு வளர்கிறது. மனிதன் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தையும் தன்னையும் பற்றி இன்னும் நன்கு அறிய இது உதவியாகும். மேலும், அன்றாட வாழ்க்கைக்கு உதவக்கூடிய பல பொருள்களும் அதனால் கிடைக்கும். ஏற்கனவே அதன் வழியாகக் கிடைத்த பல கிளைப் பொருள்கள் வீடு, தொழிற்சாலை முதலிய பல இடங்களில் பயன்படுகின்றன.

விண்வெளி விமானிக்கு வேண்டிய உணவு பற்றிய ஆராய்ச்சியால் புதுவகை உணவுகள் தோன்றுவதால் உலகின் மக்கள் தொகைப் பெருக்கத்துக்குத் தேவையான உணவு கிடைக்க முடியும்.

விண்வெளிக் கப்பலில் ஒரு முறை உபயோகித்த தண்ணீரையே மீண்டும் மீண்டும் பயன்படுத்த வழி தேடும் ஆராய்ச்சியால் உலகில் மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாகத் தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்க

20-ம் பக்கத் தொடர்ச்சி

நாடிச் செல்கின்றனர். கோயில் அருவியின் அண்மையில் இருந்தும் அதைப் பலர் கண்டெடுத்தும் பார்ப்பதில்லை.

ஒரு சிலரே கோயிலுக்குட் சென்று கோயிலின் முன்னின்று கும்பிட்டு வணங்குகின்றனர்; மனமுருகப் பாடுகின்றனர், ஆடுகின்றனர்.

—'ஜனசக்தி'

வழி கிடைக்கலாம்; பாசன வசதியும் திருந்தும்.

விண்வெளி வாகனங்களின் வெப்ப நிலையைக் கட்டுப்படுத்தும் ஆராய்ச்சியால், வீடுகளைச் சீரான தட்பவெப்ப நிலையில் வைத்திருக்கும் சிக்கனமான வழி வகைகள் தெரியவரலாம்.

விண்ணிலிருந்து இறங்கும் விண்வெளிக் கப்பல்கள் வாயு மண்டலத்தில் தீப்பற்றியும் இரசாயன நிகழ்வுக்கு உள்ளாகியும் கெட்டுப் போகாதவாறு காக்க மிகவும் வலிய நுண்ணிய துருவேறா உருக்குக் கம்பிகளால் பின்னிய 'துணி' ஒன்று உண்டு. தொழிற்சாலைகளில் தீ விபத்து நேராமல் தடுக்கும் சிறப்பு மிக்க பணி இந்தத் துணிக்குக் கிடைக்கலாம்.

செயற்கைக் கோளில் வைக்கும் கருவிகளின் எடையும் பருமனும் மிகக் குறைவாக இருக்க வேண்டும். ஆதலால், பொருள்களை மிகச் சிறியவையாகச் செய்தளிக்கும் புதுத் துறை ஏற்பட்டுள்ளது; ஒரு சர்க்கரைக் கட்டியளவில் ஒரு புது ரேடியோ விற்பனைக்கு வந்திருக்கிறது.

வெயிலடிக்கும் நேரத்தில் சூரிய சக்தியைத் தேக்கி வைத்து சூரியன் மறைந்த பின் செயற்கைக் கோளின் கருவிகளுக்கு மின்விசை வழங்க வல்ல சிறிய நிக்கல்—காட்மிய மின்கலம் ரேடியோவுக்கும் டார்ச்-லைட்டுக்கும் மிக்க உதவியாகும்; அதன் மின்விசை தீர்ந்து போனால் வீட்டிலேயே மின்விசை இணைப்போடு பொருத்தி மின்விசை ஏற்றிக்கொள்ளலாம்.

விண்வெளிக் கப்பலில் மனிதன் உட்கார அமைக்கப்படும் இருக்கைகள் போன்று மோட்டார் கார்களில் அமைத்தால், எவ்வகைப் போக்குவரத்து விபத்திலும் பிழைத்துக் கொள்ளலாம்.

ஏவுகணை எரிபொருள்களிலிருந்து தயாரித்த ஒரு மருந்து மன நோய்களைத் தீர்க்கவும் அறுவை மருத்துவத்தில் உடல் சூட்டை விரைவில் தணிக்கவும் ஏற்கனவே பயன்பட்டு வருகிறது அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி, மருத்துவத் துறையில் இதுபோல் இன்னும் பல நன்மைகள் புரிகிறது.

விண்வெளியில் செல்லும் மனிதனின் இருதயத் துடிப்பு, மூளை அலைகள், இரத்த அழுத்தம், சுவாச வேகம் முதலியவற்றை இடையறாது பதிவு செய்து காட்டும் நுண்ணிய கருவிகளை இனி மருத்துவ இல்லத்தில் நோயாளி உடம்புடன் பொருத்தி விட்டால், தூரத்தில் இருந்தவாறே அவனது நிலைமையைக் கவனித்துவரலாம். நிலைமை மாறினால் உடனே தெரிந்துவிடும்.

தன் எடையைத் தான் உணரா நிலையில் நெடுநேரம் இருந்தால், மூச்சு விடுதல், உண்ணல், உறங்கல், உழைத்தல் ஆகியன எவ்வாறு பாதிக்கப்

படும் என்று ஆராயும் ஆராய்ச்சியால் மருத்துவத் துறையில் பல சிறந்த முறைகள் தோன்றக் கூடும். விண்ணில் தனிமையாக நெடுநேரம் தங்குவது பற்றிய ஆராய்ச்சியால் மனநோய் தீர்க்கும் மருத்துவத் துறை பயனடையக் கூடும்.

செயற்கைக் கோளில் பயன்படும் பாதரச மின்கலங்கள் போன்றவை பேச முடியாதவர்களுக்குச் செயற்கைக் குரல்வளை அமைத்துக் கொடுக்கவும் இன்னும் பலவகைகளிலும். மருத்துவத் துறையில் பயன்படுகின்றன.

விண்வெளி ஆராய்ச்சியால் கிளை பொருள்களாகத் தோன்றும் அன்றாடப் பயனுள்ள பொருள்களுக்கு அளவேஇல்லை என்று தெரிகிறது. புதுவகைக் கலப்பு உலோகங்கள், துணிகள், இரசாயனப் பொருள்களெல்லாம் ஏற்கனவே விற்பனைக்குத் தயாராகியுள்ளன. நீடித்த உழைப்பும், மிக்க வலுவும் அமைந்தவையும் அணுக்கதிரியக்கத்திலும் உயர்ந்த வெப்பநிலையிலும் நன்கு பணியாற்றக் கூடியவையுமான பல பொருள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

வெயில் விசை மின்கலங்கள், எரிபொருள் வாயுமின்கலங்கள்; பழுதில்லாத அணுவுலைகள் ஆகியவை விண்வெளிப் பயணத்துக்கு ஏற்றவையாகக் கருதப்படுகின்றன. விசை வழங்க அவை இனி எண்ணெய்க்கும் நிலக்கரிக்கும் பதிலாக நிலை பெறலாம்.

இரும்புக் கனிப் பொருளைத் தோண்டி எடுக்கவும் "ஜெட்" விசைக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன; மற்ற முறையில் தோண்டி எடுப்பது செலவு மிக்கதாகும்.

மேலும் செய்திப் போக்குவரத்துக்கும் வானிலையறிவிப்புக்கும் செயற்கைக் கோள்கள் பயன்படும் காலம் கிட்டியுள்ளது. எதிரொலி–1. கரியர்-1பி என்பவை செய்திப் போக்குவரத்தில் சோதனை செய்வதற்காக ஏற்கெனவே செலுத்தப்பட்டுள்ளன. எதிரொலி–1 பூமியில் ஓரிடத்திலிருந்து கிடைக்கும் வானொலி அலைகளை வாங்கி இன்னோரிடத்துக்குப் பிரதிபலிக்கும் பெரிய பலூனாகும். "கரியர்" பூமியிலிருந்து கிடைக்கும் தகவல்களைப் பதிவு செய்து வைத்துப் பின்னர் பூமிக்கு ஒலிபரப்புவது.

வானிலையாராய்ச்சிச் செயற்கைக் கோள்களும்மூன்று அனுப்பப்பட்டுள்ளன. 'டைரோஸ்" என்னும் பெயர் வரிசையில் உள்ள இவை மூன்றும் மேக மூடாக்கை மேலேயிருந்து படம் பிடித்து அனுப்புபவை, ஏற்கனவே ஆயிரக்கணக்கான படங்கள் கிடைத்துள்ளன. உலகமெங்கும் வானிலையறிவிப்பு அதிகத் துல்லியமாக இருக்க இவை உதவும். இதனால் பல கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள சேதங்களைத் தவிர்க்கலாம்.

வானில் பறக்க வழி வகுத்தோர் !

மனிதன் பறக்கப் படித்த வித்தையை ஜவஹர்லால் நேரு "உலக வரலாறு" என்னும் நூலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்: "காற்றினும் கனமான ஒரு இயந்திரத்தில் ஏறி முதன் முதல் உயரச் சென்றவர்கள் வில்பர் ரைட், ஆர்வில் ரைட் என்னும் அமெரிக்க அண்ணன் தம்பியார் இருவராவர். அதுவே இன்றைய ஆகாய விமானத்தின் முதன் மாதிரியாகும். 1903 டிசம்பர் மாதம் அவர்கள் 300 கெஜதூரத்துக்கும் குறைவாகவே பறந்தார்கள். என்ற போதும், அது வரை யாரும் செய்யாத ஒரு காரியம் அது......1903-க்கு முன் பலர் பலூன்களில் உயரச் சென்றுள்ளனர்; ஆனால், அரேபியக் கதைகளில் வரும் பறக்கும் கம்பளங்களையும் நம்முடைய இந்தியக் கதைகளில் வரும் பறக்கும் ரதங்களையும்போல் பழைய கதைகளிலும் புராணங்களிலும் வருகின்றனவே அல்லாமல் ஒருவரும் காற்றைவிடக் கனமான ஒரு பொறியில் உயரச் சென்றதில்லை."

விண்வெளியை ஆராயும் விண்வெளி மனிதர்கள் எண்ணிக்கை பெருகத் தொடங்கியுள்ள இன்று ரைட் சகோதரர்கள் பற்றிநினைவு கூர்வது நன்று. இன்றைய அருஞ்செயல்களுக்கு வழிகாட்டி ஊக்க மூட்டியவர்கள் அவர்கள். அன்று அவர்கள் செய்ததை இன்று நினைத்துப் பார்க்கையில் அது சாதாரணமாகத் தோன்றலாம்; எனினும் விண்வெளியை வெல்ல மனிதன் படிப்படியாய்ச் செய்து வரும் முயற்சிகளில் அது வரலாற்றுச் சிறப்புடைய பெருஞ் செயல் என்பது உண்மை. ரைட் சகோதரர்கள் எல்லாவற்றையும் தாமே முயன்று கண்டுபிடித்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்தார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

இவர்கள் தந்தையர் மில்டன் ரைட் ஒரு மத குரு. பின்னர் அவர் ஒரு பிஷப்பாகவும் ஆனார். வில்பர் இண்டியானா மாநிலத்தில் நியூகாஸில் என்னும் இடத்துக்கு அருகில் 1867 ஏப்ரல் 16-ல் பிறந்தார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ஓஹையோ மாநிலத்தில் டேய்ட்டன் நகரில் ஆர்வில் பிறந்தார்.

இளமையிலேயே இருவருக்கும் இயந்திரக்கலையில் நாட்டம் மிகுதி. இருவரும் விளையாட்டுக் கருவிகள் செய்து விற்றுக் கைச் செலவுக்குப் பணம் சேர்க்கலாயினர். ஆர்வில் உயர்நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும் போதே அச்சகம் ஒன்றை உருவாக்கி வார இதழ் ஒன்றைத் தொடங்கினார். விரைவில் அண்ணனும் இம் முயற்சியில்

சேர்ந்தார். இருவரும் அதன் பின் இணைபிரியாதவராயினர் இருவரும் இறுதிவரை மணம் ஆகாமலே வாழ்ந்தனர்.

1892ல் அவர்கள் சைக்கிள் கடை ஒன்று வைத்தனர். விற்பனையோடு பழுது பார்க்கும் வேலையும் செய்தனர். கடைக்கு மேல் ஓர் அறையில் சைக்கிள்களை உற்பத்தி செய்யவும் தொடங்கினர். சறுக்கு (கிளைடர்) விமானத்தில் பறந்து வழிகாட்டிய ஆட்டோ லிலியந்தால் காலமானது பற்றிய பத்திரிகைச் செய்திகளைப் படித்ததும் அவர்கள் பறப்பதில் விருப்பம் கொண்டனர். 1899 ல் அவர்கள் இது பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகளை யெல்லாம் கற்கலாயினர்.

1900 ல் அவர்கள் முதன் முதல் சறுக்கு விமானம் ஒன்றைச் செய்தனர். அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையில் மணல் தேறிகள் நிறைந்த கிட்டிஹாக் என்ற இடத்தில் அவ்விமானத்தில் அவர்கள் 300 அடி தூரம் மிதந்து இறங்கினர். அடுத்த ஆண்டு அதைவிடப் பெரிய சறுக்கு விமானம் ஒன்றைச் செய்து பறந்தனர். இருபுற இறக்கைகளையும் வெவ்வேறு கோணத்தில் வைத்துப் பக்கவாட்டில் புரளாமல் பார்த்துக் கொள்ளலாம் என்பதைக் கண்டனர்.

ஆனால் அவர்கள் காற்றை எதிர்த்து நீந்தும் திறன் கண்டார்கள் இல்லை. எனவே ஆராயலாயினர். ஆறடி நீளக் காற்றுச் சுரங்க வழி ஒன்றை அமைத்து பலவகையான மாதிரி இறக்கைகளைச் செய்து அதில் வைத்து ஆராய்ந்தனர். விமான இயலில் இன்று அடிப்படையான ஆராய்ச்சிக் கருவி இவர்கள் கண்டுபிடித்த காற்றுச் சுரங்க வழிதான்.

இவர்கள் உருவாக்கிய மூன்றாவது சறுக்கு விமானம் பறந்த தூரம் அதற்குமுன் வேறு எந்தச் சறுக்கு விமானமும் பறந்ததில்லை. இனி, இயந்திரத்தில் இயங்கும் விமானம் காண முயன்றனர் இருவரும். அதன்படி 1000 டாலருக்குக் குறைவான செலவில் ஒரு விமானம் செய்தனர் அதன் இறக்கைகளின் நீளம் $40\frac{1}{2}$ அடி. விமானியோடு அதன் எடை ஏறக்குறைய 750 ராத்தல். அதை இயக்கும் பெட்ரோல் இயந்திரத்தையும் அவர்களே செய்தனர்.

புது விமானத்தில் பறக்க 1903 செப்டம்பர் மாதம் அவர்கள் கிட்டி ஹாக் சேர்ந்தனர். ஆனால் அடுத்து அடுத்துப் புயல்காற்று அடித்ததும், விமானத்தில் சிறு சிறு கோளாறுகள் தென்பட்டதும் சேர்ந்து, டிசம்பர் 17—ம் தேதி வரை அவர்கள் வெள்ளோட்டம் விட முடியாதபடி செய்து விட்டன. அன்றும் காற்று பலமாகவே அடித்தது. இருந்தாலும் அன்று பறந்தே தீர்வதென்று அவர்கள் முடிவு செய்தனர். ஆர்வில் விமானத்தில் ஏறினார்; இயந்திரத்தின் அருகில் கீழ் இறக்கைமேல் படுத்

பிடித்துக்கொண்டார். வில்பர் ஒரு பக்கத்து இறக்கை முனையைப் பிடித்து விமானம் ஆடாமல் பார்த்துக்கொண்டார். விமானம் 40 அடி தூரம் தரையில் ஓடி, மேலே கிளம்பி, 120 அடி தூரம் பறந்து, 12 விநாடியில் கீழிறங்கியது. விமான யுகம் பிறந்துவிட்டது.

முன்பு முனைந்தவர்களின் முயற்சி தோல்வியுற இவர்கள் முயற்சி மட்டும் வெற்றி பெற்றதற்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று, இறக்கை அமைப்பு; மற்றொன்று, விமானத்தை நினைத்தவாறு திருப்புவதற்கு ஏற்றவண்ணம் மடக்கிய இறக்கை நுனிகளையும் சுக்கானையும் பயன்படுத்தும் அமைப்பு. இறக்கை நுனிகளை மடக்கும் நுட்பந்தான் பின்னர் "ஏலிரான்" நுட்பம் என வளர்ச்சி கண்டது. ரைட் சகோதரர்கள் கண்டுபிடித்த மிகப் பெரிய விமான இயல் நுட்பம் இதுவே.

யாரும் நம்பவில்லை

அமெரிக்க அரசாங்கத்துக்குத் தங்கள் கண்டுபிடிப்பை விற்பதற்குச் செய்த முயற்சிகள் வீணாகவே, அவர்கள் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனிக்கெல்லாம் சென்றார்கள். ஒரு நாடும் விமானத்தில் அக்கறை காட்டவில்லை. இவர்களாவது, பறப்பதாவது என்றே எல்லாரும் வாளாவிருந்தனர்.

ஐயத்தைப் போக்க ஆவல் கொண்ட அண்ணன் தம்பியர் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் விமானத்தில் பறந்து காட்டத் திட்டமிட்டனர். பிரான்ஸில் வில்பர் விமானத்தில் தாம் பறந்ததுமன்றி, மற்றவர்களையும் ஏற்றிக்கொண்டு பறந்து காட்டினார். ஐரோப்பா முழுவதிலுமிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் மக்கள் அவர் பறப்பதைக் காண பாரிஸ் நகருக்கு வரலாயினர். அமெரிக்காவில் ஆர்வில் செய்த முயற்சியும் இத்தகைய சிறப்புப் பெற்றது.

1909 நவம்பரில் ரைட் விமானங்கள் தயாரிக்க அமெரிக்கக் கம்பெனி ஒன்று உருவாயிற்று. அதற்கு முன்பே ஜூலை மாதத்தில் அமெரிக்க அரசாங்கம் ஒரு விமானம் செய்து கொடுக்கும்படி ரைட் சகோதரர்களுடன் ஒப்பந்தம் செய்திருந்தது. விமானத்தை வெள்ளோட்டம் விட்டபோது, ஆர்வில் மணிக்கு $42\frac{1}{4}$ மைல் வேகத்தில் பறந்து காட்டி 5,000 டாலர் பரிசு வேறு பெற்றார். விமானத்தின் விலை 25,000 டாலர்.

1912ல் விமானம் பெரிதும் முன்னேற்றம் காணத் தொடங்கிய சமயம் வில்பர் ரைட் டைபாய்டு கண்டு காலமானார்.

விமானம் ஆடாமல் காக்கும் பணியைத் தானாகவே செய்யும் கருவி ஒன்றை 1913-ல் ஆர்வில் கண்டுபிடித்துப் பரிசு பெற்றார். 1920-ல் அவர் இறக்கை அமைப்பில் செய்த மாறுதல் இன்றளவும்

(27-ம் பக்கம் பார்க்க)

திருவள்ளுவரும் மனோதத்துவமும்

(பெ. ஜனார்த்தனம்)

உலகம் அளித்த பெரியார்களின் பட்டியலில், உலகம் போற்றும் ஒப்புயர்வற்ற நூலாகிய 'திருக்குறளைப்' படைத்த திருவள்ளுவர் ஓர் முக்கிய இடம் பெறுவார். அவருடைய ஆழ்ந்த அறிவும், சீரிய சிந்தனையும், நேரிய வாழ்க்கையும், உயர்ந்த பண்பும் இவை யாவும் ஒருங்கே சேர்த்துக் கடைந்தெடுக்கப்பட்ட அமிழ்தம்தான் தமிழரின் அழியாக் 'கருவூலமாகிய' திருக்குறளாகும்.

திருக்குறள் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலகம் முழுவதும் பரவியிருப்பது அதனுடைய பெருமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இதனைப் பரணர், 'திருவள்ளுவர் தம்முடைய இரண்டடிக்குறள்களினால் இவ்வுலகத்தாரால் நினைக்கப்படுவனஎல்லாவற்றையும் அளந்தார்' என்று ஒருபாட்டில்கூறுகின்றார். திருவள்ளுவர் அக்காலப் பழக்க வழக்கங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் தக்கவாறு கருத்துக்களைக் கூறியிருப்பினும் அவையாவும் என்றும் அழியாத வாழ்வின் உண்மைகளாகும். மனோவியல் வல்லுநர்கள்கூடத் திருவள்ளுவரின் ஒப்பற்ற சிந்தனையையும், மனோவன்மையையும் ஞானத்தையும் கண்டு வியந்து பாராட்டுகின்றனர். சுருக்கமாகச் சொன்னால் திருக்குறள் ஒரு மனோதத்துவ நூல் எனலாம்.

இனி, திருவள்ளுவரின் மனோவியல்புகளை விளக்கும் குறள்களைச் சிறிது விளக்குவோம். அவர் திருக்குறளை அதிகார முறையாக வகுத்திருப்பதும், எக்கருத்தையும் இரண்டடிக்குறளால் சுருங்க விளங்க வைத்திருப்பதும் அவருடைய மனோதத்துவ அறிவை நன்கு காட்டும். திருக்குறளில் கூறப்பட்ட கருத்துக்கள் யாவும் மனா தத்துவத்தின் அடிப்படையில் எழுந்தனவாயினும் ஒரு சில கருத்துக்கள் திருவள்ளுவரின்

(26-ம் மக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலான விமானங்களில் உள்ளது. முதல் உலகப் பெரும் போரில் அமெரிக்க இராணுவத்தில் அவர் சிறிது காலம் பணி புரிந்தார். மற்றபடி அவர் 1948ல் காலமாகும் வரை ஒதுங்கியே வாழ்ந்தார்.

இன்று ரைட் சகோதரர்களின் உருவச் சிலைகள் அமெரிக்காவின் "புகழ் மன்றத்தை" அணி செய்வதைக் காணலாம். டிசம்பர் 17-ம் தேதி நாடு நெடுகிலும் "ரைட் சகோதரர்கள் நாள்" எனக் கொண்டாடப்படுகிறது. 1948-க்குப் பிறகு ஆகஸ்ட் 19-ம் தேதி—ஆர்வில் பிறந்த நாள்—"தேசிய விமான இயல் நாள்" எனச் சிறப்பிக்கப்படுகிறது.

சிறந்த சிந்தனையையும், தத்துவ ஞானத்தையும் நன்கு வெளிப் படுத்துகின்றன.

'மனம் தான் ஒருவனுடைய வாழ்க்கையை அமைக்கின்றது' என்பது மனோவியலின் அடிப்ப டையாகும். இம் மனத்திலி ருந்துஉண்டாகும்எண்ணங்களுக் கேற்ப ஒருவனுடையமனமானது சூழ் நிலைக்குத்தக்கவாறு பண் பட்டிருக்கும். இதே கருத்தை வள்ளுவர் கூறியிருப்பதைப் பா ருங்கள்.

"மனத்தானும் மாந்தர்க்
குணர்ச்சி யினத்தானும்
இன்னான் எனப்படும் சொல்"

ஒருவன் யாருடன் நட்புக்கொண் டுள்ளானோ அவனைப் பொறுத்தே அவனுடைய பண்பும் அமையும் என்று கூறுகின்றார்.

இரண்டாவதாக, உயர்ந்தஎண் ணங்களும், ஊக்கமும்தான் வாழ் வில் ஒருவனை உயர்த்தி மேன்மை யுறச் செய்யும். ஒருவனுடைய வெற்றியும் வாழ்க்கையில் இன்ப மும் அவனுடைய எண்ணம், ஊக்கம் இவைகளைப் பொறுத்தே தான் உண்டாகும். அதனால்தான் எல்லோரும் உயர்ந்த எண்ணங்க ளும், ஊக்கமும் பெற்றிருக்க வேண்டும் என்று உளநூல் அறி ஞர்கள் கூறுகின்றனர். இதே கருத்தினை இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்னமே திருவள்ளுவர் எவ்வளவு அழகாகக் கூறியுள் ளார்!

"வெள்ளத் தனையமலர்
நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு"
"உள்ளுவதெல்லா முயர்வுள்
ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமைநீர்த்து"

எப்பொழுதும் மேலானவற் றையேநினைத்து முயலவேண்டும். அவை தவறிப் போயினும் முயன் று அவற்றைப் பெற்றதோடொக் கும் என்றுகூறுகின்றார். மேலும் மனிதனாகப் பிறவி எடுத்ததன் பயன் வாழ்க்கையின் எத்துறையி லாவது உயர்ந்து, அழியாப் புக ழை ஈட்டவேண்டுமென்கின்றார். அதனால் தான் 'தோன்றிற் புக ழொடு தோன்றுக' என்று கூறிப் போந்தார்.

எது சிறந்த அறம் என்பதற்கு அவர் தரும் விளக்கத்தைப் பா ருங்கள். நம்முடைய உள்ளம் மா சற்றதாகவும் தூய்மையாகவும் இருப்பதேஎல்லா அறங்களிலும் சிறந்த அறம் என்றுகூறுகின்றார். கீழ்க்கண்ட குறளில் அக்கருத் தினைக் கூறியுள்ளார்.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல்
அனைத்தறன்
ஆகுல நீர பிற'.

பின்பு வாய்மை பற்றி அவர் வகுத்துள்ள இலக்கணத்தைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

"வாய்மைஎனப்படுவதி யாதெ
னின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்"

ஆம்! பிற உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்காத சொற்களைப் பேசுதலே வாய்மையாகும் என்று கூறுகின்றார். மேலும் பொய்யான சொற்களும் குற்றத்தினின்றும் நீங்கிய நன்மையைத் தருமாயின் அவையும் மெய்ச்சொற்களின் இடத்தனவாம். அடுத்தபடியாக ஒழுக்கத்தின் அவசியத்தை மிகவும் வலியுறுத்துகின்றார். சிறந்த ஒழுக்கத்தைப் பின்பற்றுபவனே வாழ்க்கையில் எல்லா வகைப் பேறுகளையும் பெற முடியும். அதனால் தான் 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்று வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

மேலும் திருவள்ளுவரின் ஆழ்ந்த உண்மைகளை ஆராயும் பொழுது அவர் ஓர் தெய்வப்பிறவியோ என்று கூட ஐயுறச் செய்யும்.

ஒருவன் மற்றொருவனுக்குத் தீங்கிழைக்கின்றான். அவனைத் தண்டித்துத் திருத்தும் வழி யாது? பதிலுக்குத் தீங்கிழைத்துத் தண்டிக்கக் கூடாது. அப்படிச் செய்வதனால் போலி இன்பம் தான் உண்டாகும். பின்னர் தீங்கு செய்தவர்களை எவ்வாறு தண்டிப்பது? இதற்கு வள்ளுவர் கூறும் வழியைப் பாருங்கள்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

தீங்கு புரிந்தவனுக்கும் அவன் வெட்கிக் குனியும்படி நன்மையே செய்து அவனைத் திருந்தச் செய்ய வேண்டும் என்று கூறுகின்றார். இதையன்றோ புத்தர், காந்தி போன்ற அறிஞர்களும் தங்கள் உயர்ந்த கொள்கைகளாகப் போதித்துச் சென்றனர். மேலும் இது போன்ற மக்களை 'அன்பு' என்ற ஆயுதத்தால் திருத்திவிடலாம் என்றும் கூறுகின்றார். அதனால் தான் 'மதத்திற்கும் அன்பே துணை' என்று கூறிப் போதித்தார்.

மனிதன் பகுத்தறிவு படைத்தவன். அதனால் எதையும் சிந்தித்தே பேச வேண்டும். சிந்தித்தே பிறர்சொல்வதை ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் சிந்தித்தே ஒரு காரியத்தைத் துவக்க வேண்டும். திருவள்ளுவர் 'சிந்தனை'யே சிறந்த அறிவு என்கின்றார்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப தறிவு"

"எண்ணித் துணிக கருமம் துணிந்த பின்
எண்ணுவ மென்ப திழுக்கு"

அடுத்ததாக 'செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்' என்று குறிப்பிடுகின்றார். ஒருவன் கற்று உணர்ந்து கொள்வதைக் காட்டிலும் செவிவாயிலாகக் கேட்டு உணர்ந்துகொள்வதுதான் சிறந்த முறை என்கின்றார். அதனால் தான் செவிச் செல்வம் எல்லாச் செல்வங்களிலும் உயர்ந்த செல்வம் என்று வலியுறுத்துகின்றார்.

எது உண்மையான இன்பம் என்பதற்குத் திருவள்ளுவர் கூறும் விளக்கம் போற்றத்தக்கதாகும். மாசற்ற குழந்தைகளுடன் கொஞ்சுவதிலும், அவர்களின் மழலைச் சொற்களைக் கேட்பதிலும் உள்ள இன்பம் குழலின் இசையிலும், யாழின் இசையிலும்கூட இல்லை, என்று கூறுகின்றார். மேலும் வந்த விருந்தினரை முகமலர்ந்து உபசரித்து, இன் சொற்களினால் பிறரை மகிழ்வித்துத் தானும் உண்டு பிறருக்கும் அளித்து அதனால் உண்டாகும் இன்பத்தைவிடச் சிறந்த இன்பம் உண்டா என்றும், சிறந்த ஒழுக்கம் மேற்கொண்டு, பல அறங்களைச் செய்து, தன்னால் இயன்ற வரைக்கும் பிறருக்குக் கொடைகளைச் செய்து உலகில் புகழுடன் வாழ்வதில்தான் உண்மையான இன்பம் அடங்கியிருக்கின்றது என்றும் தெரிவிக்கிறார்.

இனி இறுதியாக, திருவள்ளுவர்ஓர் தத்துவஞானிமட்டுமன்று; அவரை ஒரு ராஜதந்திரி என்றும் கூறலாம். இதை அரசு அமைச்சு போன்ற இயல்களிலிருந்து நன்கு உணரலாம். திருக்குறள் உலகில் உள்ள வரை, திருவள்ளுவர் பெருமை சுடர் விட்டுப்பிரகாசித்துக்கொண்டிருக்கும். திருக்குறள் என்றும் அழியாத வாழ்வின் உண்மைகள் அடங்கிய ஒப்பற்ற தமிழரின் கருவூலமாகும். திருக்குறள் உலக மக்களுக்கு வழிகாட்டும் ஒளி விளக்கு. தமிழர் எல்லாம் இவ்வழிகாட்டியின் மூலம் செந்நெறியில் ஒழுகினால் நம்நாடு பண்பிலும், அறிவிலும் ஒப்பற்ற நாடாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. அவர் காட்டிய அறிவுப்பாதையில் சென்று உலகத்திற்குச் சான்று கோலாக நாம் விளங்குவதே திருவள்ளுவரின் ஒப்பற்ற முயற்சிக்கு நாம் செலுத்தும் நன்றியாகும்.

வாழ்க திருக்குறள்!

வளர்க திருவள்ளுவர் பெருமை!

—பச்சையப்பன் கல்லூரி இதழ்

சிந்தை கிளரும் சித்தன்ன வாசல்

(இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.)

திராவிட ஓவியக்கலை, தனிச் சிறப்பும், பெருமையும், புகழும் கொண்டதாகும் என்பதைச் சித்தன்னவாசல் மலைக்குகையிலே காணப்படும் சிதைந்த ஓவியங்கள், உலகிற்கு விளக்கிக் காட்டிக்கொண்டிருக்கின்றன.

சித்தன்னவாசல் என்பது புதுக்கோட்டைக்கும் விறலி மலைக்கும் இடையில், புதுக்கோட்டையிலிருந்து எட்டுக்கல் தொலைவில் இருக்கும் சிற்றூர் ஆகும். அங்குப் பாறையாக ஓங்கி வளர்ந்து, அகன்று கிடக்கும் மலைக்குன்றுகள் சில அங்கும் இங்கும் தோற்றமளிக்கின்றன. அவற்றில், அந்த ஊருக்குச் சென்றவுடன் கண்ணுக் கெதிரே காணப்படும் பெரியதொரு மலைக்குன்றின் சரிவில், சில நூறு அடிகள் ஏறியவுடன், மலைக்குடைவு ஒன்று காணப்படுகிறது. அந்த மலைக்குடைவு திராவிட சிற்பக்கலையின் சீரிய எடுத்துக்காட்டுகளுள் ஒன்றாகும்.

மலைக்குடைவிலே குடையப்பட்ட மண்டபங்கள் இரண்டும், குடைவுக்கு வெளியே குடைவை ஒட்டி கருங்கற்களால் கட்டப்பட்ட மண்டபம் ஒன்றும் காணப்படுகின்றன. மண்டபங்கள் எல்லாம் நீண்ட சதுரவடிவில் அமைந்திருக்கின்றன. முன்னே கட்டப்பட்டுள்ள மண்டபம் சற்றுப் பெரியதாகவும், குடையப்பட்ட மண்டபங்களிலே முன்மண்டபம்சற்றுச் சிறியதாகவும், பின் மண்டபம் அதைவிடச் சற்றுச் சிறியதாகவும் இருக்கின்றன.

இந்த மலைக்குடைவிலுள்ள சிற்பங்களும், ஓவியங்களும் சமண சமயச் சார்புடையன என்று தெரிய வருகின்றன. தமிழகத்தில் சமண சமயம் பரவியிருந்த காலத்தில் இந்த மலைக்குடைவு தோண்டப்பட்டிருக்கிறது. சமண சமயத்தைப் பரப்புவதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருந்த மகேந்திரப் பல்லவ மன்னன் காலத்தில், அதாவது கி. பி. 640–ஆம் ஆண்டிற்கும் கி. பி. 670–ஆம் ஆண்டிற்குமிடையில், சித்தன்ன வாசல் மலைக்குடைவு தோண்டப்பட்டிருக்கவேண்டும் என்று வரலாற்றறிஞர்கள், பல சான்றுகளைக் கொண்டு அறுதியிட்டுக் கூறுகின்றனர். மதுரையில், சமண முனிவர்கள் பாண்டிய மன்னனால் கழுவேற்றப்பட்டு, கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டபோது, கொடுமைகளுக்கு இரையாகாமல் தப்பி ஓடிவந்த சில முக்கியமான சமண முனிவர்கள், காடுகள் சூழ்ந்திருந்த சித்தன்னவாசல் மலைச்சரிவில் ஒளிந்திருந்து வாழத்தலைப்பட்டனர் என்றும், அவர்களது முயற்சியில் இந்த மலைக்குடைவு குடைந் தெடுக்கப்பட்டது என்றும் வர

லாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். மகேந்திரப் பல்லவ மன்னனின் ஒத்துழைப்போடு சமண முனிவர்கள் இந்த மலைக் குகையை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். மலைக் குகைக்கு வெளியே கட்டப்பட்டிருக்கும் கருங்கல் • மண்டபம், சுமார் மூந்நூறு அல்லது நானூறு ஆண்டுகாலத்திற்கு முன்னால், நாயக்க மன்னன் ஒருவனால் கட்டப்பட்டது என்று அந்த மண்டபத்திலுள்ள கல்வெட்டு குறிப்பிடுவதாகச் சொல்லுகின்றனர்.

மண்டபங்களும், தூண்களும் சிலைகளும் அமையுமாறு மலை குடையப்பட்டிருக்கிறது. உள் மண்டபத்தில் மூன்று தீர்த்தங்கருடைய சிலைகளும் வெளி மண்டபத்தில் இரண்டு தீர்த்தங்கருடைய சிலைகளும் சுவரோடு வைத்துச் செதுக்கப்பட்டிருக்கின்றன. உள் மண்டபத்தின் நடுவில் அருகக் கடவுள் சிலையும், சிலையின்மேலே முகட்டிலிருந்து தொங்குவது போன்ற மலர்ந்த தாமரைப்பூவின் சிலையும் இருந்ததாகவும், அவை பிற்காலத்தவரால் உடைக்கப்பட்டு விட்டதாகவும் சொல்லப்படுகின்றன. உடைபட்ட சிலைகளின்பகுதிகள் வெளியில் சிதறிக்கிடக்கின்றன. உள் மண்டபத்தின் நடுவில் கீழேயும் மேலே முகட்டிலும் சிலைகள் இருந்து உடைபட்டுப் போனதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன.

சுற்றிலுமுள்ள சுவர்களின் மீதும், மண்டபங்களின் முகடுகளின் மீதும், சிலைகளின்மீதும் அரைக்கப்பட்ட வெண்மையான வழுவழுப்பானசுண்ணாம்புக்காரைகள் பூசப்பட்டு, அவற்றின்மீது அழகான ஓவியங்கள் வரையப்பட்டன என்று தெரியவருகின்றது. தூண்களிலும், முகடுகளிலும் வரையப்பட்டுள்ள ஓவியங்களில் ஒரு சில மட்டும் அரைகுறையாக மறைந்தும், சிதைந்தும், கலைந்தும், அழுக்கேறியும் தென்படுகின்றன. சுமார் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளாகக் குகைக்குவந்து சென்றும், தங்கியும் இருந்த பகைவர்களாலும், அறியா மக்களாலும் பெரும் பகுதி ஓவியங்கள் சிதைக்கப்பட்டும், அழிக்கப்பட்டும், அகற்றப்பட்டும் போயிருக்கின்றன. எஞ்சிய சிலதான் சிதைந்த தோற்றத்தில் தூண்களிலும், முகடுகளிலும் காணப்படுகின்றன. ஓவியம் வரையப்பட்ட காரைகள் இருந்து அகற்றப்பட்டதற்கான அறிகுறிகள் சுவர்களிலும், சிலைகளிலும் தென்படுகின்றன.

எஞ்சிக் காணப்படும் சிதைந்த ஓவியங்கள், ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் தமிழன் ஓவியம் தீட்டுவதில் எத்துணை அளவு மிகவும் சிறந்தவனாக விளங்கினான் என்பதைக்காட்டுவனவாக அமைந்திருக்கின்றன. ஓவியங்கள் சிதைந்தும் அழுக்கேறியும் காணப்பட்டாலும், அவற்றில் காணப்படும் பல்வேறுவகையான வண்ணங்கள் இன்று தீட்டப்பட்

டனபோல் ஒளிவீசிப் பொலிவுடன் விளங்குகின்றன. ஆயிரத்து முந்நூறு ஆண்டுக்காலமாக வீசிய புயலுக்கும், அடித்த மழைச்சாரலுக்கும், எரித்தவெய்யிலுக்கும், கொட்டிய பனியின் வாடைக்கும், மூட்டிய அடுப்பின் புகைக்கும் இரையாகாமல்—மங்காமல் — மறையாமல்— வெளுக்காமல்—சாயம் கலையாமல் அப்படியே இருக்கும் தன்மை, பார்த்துப் பார்த்து வியந்து போற்றற்குரியதாகும். சிவப்பு, பச்சை, ஊதா, நீலம், மஞ்சள், கறுப்பு, வெள்ளை போன்ற பல்வேறு வண்ணங்களால் ஓவியங்கள் வரையப்பட்டிருக்கின்றன. ஓவியங்கள் வரைவதற்காகத் திரட்டப்பட்ட வண்ணங்கள் இலை, காய், கனி, கிழங்கு, வேர் போன்ற மரவகைப் பொருள்களிலிருந்து எடுக்கப்படாமல், வண்ணக்காவிக் கற்களிலிருந்து எடுக்கப்பட்டனவாகும் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். வண்ணக்கற்களிலிருந்து வண்ணங்கள் எடுக்கப்பட்ட காரணத்தால்தான், நூற்றுக்கணக்கான ஆண்டுகள் ஆகியும் அவைஅழியாமலும், வெளுக்காமலும் இருக்கின்றன என்று கூறுகின்றனர்.

வெறும் கோடுகளால் மட்டும் ஓவியங்களை வரைந்து காட்டாமல் ஒளியும் நிழலும் (Light, and Shade) அமைந்த தன்மையில், ஓவியங்களை உள்ளது உள்ளவாறு வரைந்து காட்டும் அரும்பெரும் திறன், பண்டைக் காலந்தொட்டே தமிழர்களிடையே சிறந்து விளங்கிற்று என்பதைச் சித்தன்னவாசல் குகை ஓவியங்கள் காட்டுகின்றன. சித்தன்னவாசல் குகையில் காணப்படுவனபோன்ற திராவிட ஓவியக்கலையும் திராவிடச் சிற்பக் கலையுந்தான் அசந்தா— எல்லோரா 'பேகன்ற குகைகளையும் அழகு படுத்தி நிற்கின்றன. இந்தக் குகைகளிலெல்லாம் காணப்படும் ஓவியங்கள் அனைத்தும் முழுக்க முழுக்கத் திராவிட ஓவியக் கலையைச் சார்ந்தனவாகும். வடநாட்டு ஓவியக் கலைக்கும் இந்த ஓவியங்களுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. வடநாட்டிற்கு என்று சிறப்புக்குரிய ஓவியக்கலை இருப்பதாகத் தெரியவில்லை. இன்று வடநாட்டில் நிலவும் ஓவியங்களெல்லாம் பாரசீக, அரேபியா, மேலைநாட்டு ஓவியக்கலைகளைச் சார்ந்தனவாகும்.

சித்தன்னவாசல் மலைக்குடைவின் முகடுகளில் சிதைந்த தோற்றத்தில் சில ஓவியங்கள் காணப்படுகின்றன. உடலெங்கும் வண்ணப்பூப் பொறித்த விரிப்பு போன்று விதவிதமாக வரையப்பட்ட ஒருசில ஓவியங்கள் இருக்கின்றன. வேலைப்பாடுகளமைந்த முந்தானையோடும், கரையோடும் அந்த விரிப்புக்கள் காட்சியளிக்கின்றன. குடையப்பட்டுள்ள முன் மண்டபத்தின் நடு உட்கட்டில் தாமரைக் குளக் காட்சி மிகத் தெளிவாகவும், அழகாகவும் தீட்டப்பட்டி

ருக்கிறது. தண்ணீரில் தாமரை இலைகள் மிதப்பதுபோலவும், சில தாமரை இலைகளில் தண்ணீர்த் துளிகள் தத்தளிப்பது போலவும், சில தாமரைப்பூக்கள் மலர்ந்திருப்பது போலவும், சில தாமரைப் பூக்களின் மேலிதழ் விரிந்து மடங்கி வீழ்ந்து கிடப்பதைப்போலவும் ஓவியம் வரையப்பட்டிருக்கிறது. தாமரைப் பூக்கள், தாமரை இலைகள் ஆகியவற்றின் இடையே யானைகளும், எருமைகளும், பசுக்களும் நீரில் பாய்ந்து நிற்பனபோலவும், மீன்கள் துள்ளுவதைப் போலவும், தாமரைத் தண்டுகளுக்கிடையே மீன்கள் நுழைந்து செல்வதைப் போலவும், அழகான காதலன் தாமரைக் குளத்தில் இறங்கித் தாமரைப் பூக்களைப் பறித்துத் தன் காதலியிடம் கொடுப்பது போலவும், காதலி அவற்றை வாங்கிப் பூக்கூடையில் சேர்ப்பது போலவும் ஓவியம் வரையப்பட்டிருக்கின்றது. ஒரு தூணில் மகேந்திரப்பல்லவ மன்னனும், அவனது துணைவியும் சேர்ந்தாற் போல் நிற்பதுபோல் அழகுற வரையப்பட்டிருக்கின்றது. ஆனல் அந்த ஓவியமும் சிதைந்த அழிந்த தோற்றத்தில்தான் இருக்கிறது. நடனம் ஆடும் பெண்ணின் சிதைந்த தோற்றம் தூணின் ஒரு பகுதியில் காணப்படுகிறது. திராவிட ஓவியக்கலையின் சிறப்பும், பெருமையும், ஈடும் எடுப்பும் அற்ற தன்மையும் சிதைந்து மிகச் சிலவாகக் காணப்படும் ஓவியங்களிலேயே தென்படுகின்றன என்றல் அவற்றின் முழுத்தோற்றமும் எத்துணைச் சிறப்போடும், அழகோடும் விளங்கியிருக்கும் என்பதை நாமே மனக்கண்ணல் ஒருவாறு நினைவுகூர்ந்து பார்த்தால், தெள்ளெனப் புலப்படவே செய்யும்.

வெளிமண்டபத்தில் இருக்கும் தீர்த்தங்கரர் சிலைகள் இரண்டும் தொள்ளைக்காது செட்டியார்கள் என்றும், உள்மண்டபத்தில் இருக்கும் தீர்த்தங்கரர் சிலைகள் செட்டியார்களிடம் கடன்பட்டு, கடனைத் திருப்பிக் கொடுக்கமுடியாமல் உள்ளே பதுங்கிக் கிடக்கும் கடனாளிகள் என்றும் அந்தப் பகுதிமக்கள் அறியாமையின் காரணமாக ஒரு கட்டுக்கதையையும் கட்டிவிட்டிருக்கிறர்களாம்.

இந்த மலைக்குடைவுக்குப் பக்கத்தில் சிறிது தொலைவில் அதே மலைக்குன்றில் ஆள் நுழையக்கூடிய குகை ஒன்று தென்படுகிறது. அதில் நுழைந்தால் இயற்கையாகவும், செயற்கையாகவும் அமைந்த கள்ளவழி ஒன்று, மலையின்மேல்மட்டத்தில் நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. அங்கிருந்து மறுபக்கம் சென்றல் மலையின் உச்சிப் பகுதியில் சாய்வாக வைத்திருக்கும் விரிந்த குடைபோன்ற பெரிய இயற்கைக் குடைவு ஒன்று காணப்படுகிறது. அந்தக் குடைவின் அடித்தளத்தில் வழ வழப்பாகப் படுக்கைகள் பல செதுக்கப் பட்டிருக்கின்றன. படுக்கையில் தலைவைத்துப் படுப்பதற்

கேற்ற முறையில் தலையணை போல் மேடிட்டுச் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படுக்கைகள் இருபதுக்குமேல் எண்ணிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கருங்கற் படுக்கையில் சமணத் துறவிகள் அந்தக் காலத்தில் படுத் துறங்கினர் என்று தெரியவருகிறது. ஒவ்வொரு படுக்கையின் ஓரத்திலும், அந்தந்தப் படுக்கைக் குரிய துறவிகளின் பெயர்கள், பாலி மொழி எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இந் தக் குகையின் முகட்டிலும் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்ததற்கான அறி குறிகள் தென்படுகின்றன.

சிறந்து வாழ்ந்த திராவிடரின் தமிழரின் வாழ்வு இந்தக்காலத்தில் எப்படிச் சிதைந்து காணப்படுகின்றதோ; அப்படியேதான் சிறந்து விளங்கிய சித்தன்ன வாசல் ஓவியங்களும் இன்று சிதைந்த நிலையில் காட்சி அளிக்கின்றன!

—'மன்றம்'

டாக்சிகளில் டிரைவர் மனைவியர் படம்

விபத்துக்களைத் தடுக்க உபாயம்

ஜப்பான், புகவ்டாநகர சசாய் டாக்சிகார் கம்பெனியார், தங்கள் கம்பெனி டாக்சிகளை ஓட்டும் டிரைவர்கள் தங்கள் தங்கள் மனைவியர் புகைப்படத்தை அவர்கள் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கும் வகையில் முகப்பில் ஒட்டி வைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளனர். இவ்விதம் ஏற்பாடு செய்து மனைவியர்பால் அன்பின் அறிகுறியல்ல-தங்கள் அன்புக்குரியவளின் (மனைவியர்) படத்தை டிரைவர்கள் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்க வாய்த்தால் அவருக்காகவாவது தாங்கள் எவ்வித விபத்திலும் அகப்படலாகாது என்ற எண்ணம் ஏற்படலாம் என்றும் இதனால் டிரைவர்களுக்கு கார்களை அதிக ஜாக்கிரதையாக ஓட்டவேண்டும் என்ற எண்ணம் ஏற்படும் என்ற கருத்திலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

குவெய்ட்டின் வளமும் வரலாறும்

6,000 சதுரமைல் பரப்பளவுள்ள சுதந்தர நாடு

கல்வி, பாடநூல், இருவேளை உணவு—இத்தனையும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது

ஈராக் உரிமை கொண்டாடும் குவெய்ட்டின் ஆண்டு வருமானம் 200மில்லியன்பவுன்களாகும். இந்நாட்டில், ஆண்டொன்றுக்கு 600 மில்லியன் பீப்பாய் அளவுக்குரூட் எண்ணெயும், பெட்ரோலும் எடுக்கப்படுகின்றன.

இங்குள்ள எண்ணெயின் அளவு உலகத்தின் எண்ணெய் இருப்பில் ஐந்தில் ஒருபங்காகும். இந்த அளவு வேறு எந்தத்தனி நாட்டிடமும் இல்லை.

குவெய்ட் நாட்டு மக்களில் பத்தில் ஒருவர் வீதம் கார் வைத்துக் கொண்டுள்ளனர்.

குவெய்ட், ஆறாயிரம் சதுர மைல் பரப்பளவுள்ள மிகச்சிறிய இடமாகும். கட்டுப்பாடு மிக்க இஸ்லாமிய ஷேக்கின் ஆளுகைக் குட்பட்ட இந்நாடு, உலகத்திலுள்ள நாடுகளில் சராசரி நபர் விகித வருமானம் அதிக முள்ளவற்றில் ஒன்றாகும். ஆண்டொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 500 பவுன்களுக்கு மேல் வருமான விகிதம் உள்ளது. போக்கு வரத்தை ஒழுங்கு படுத்தும் போலீசுக்காரர் வாரம் ஒன்றுக்கு 20 பவுன்களுக்கு மேல் பெறுகிறார். நூறு பேரைக் கொண்ட அல்சபா என்கிற ஆளுங் குடும்பத்தின் வருவாயோடு இதை ஒப்பிட்டால் மிகச் சிறிய தொகையாகும். உதாரணமாக குவெய்ட் உள்துறை அமைச்சர் ஷேக் அப்துல்லா முபாரக்கிற்கு உரிமையான ஆறு அரண்மனைகள் இப் பகுதியில் உள்ளன; இவை ஒவ்வொன்றும் 10—இலட்சம் பவுன்களுக்குமேல் பெறுமான முள்ளதென்று கருதப்படுகிறது.

66வயதுள்ள மன்னரானஷேக் அப்துல்அல் சலாம்அல்சபாஎன்பவர் மிகஉயர்ந்தரகமோட்டாரான காடிலாக்வண்டிகள்30வைத்திருக்கிறார். எப்படி யிருப்பினும், மன்னர் தனக்கீடாக யாரும் செல்வத்தில் உயர்ந்தவர் என்ற உரிமை பெற்று விடக்கூடாது என்று கருதுபவர். சமீபத்தில், அம்மன்னர் தன்னுடைய அதிகாரி ஒருவரோடு தகராறு செய்து கொண்டாராம்; காரணம், அதிகாரி தங்கத்தகட்டால் கட்டப்பட்ட கார் ஒன்று வாங்க விரும்பியதுதானாம்!

கல்வி இலாகா அமைச்சரான ஷேக் அப்துல்லா அல் பாபிர், நாட்டு மக்கள் அனைவருக்கும்இலவசக்கல்வியும், இலவசமாகப்பாட

நூல்களும் வழங்கிவருகிறார். ஆசியாவிலோ, மத்தியக்கிழக்கு நாடுகளிலோ இப்படிப்பட்ட முறை இல்லையென அவர் நிகரற்ற உரிமை கொண்டாடலாம்.

பள்ளிமாணவர்களுக்கு இலவசமாக இரண்டுவேளை உணவு வழங்கப்படுகிறது. பள்ளிகள் அத்தனையும், அரண்மனையைப்போன்றுள்ளன.

குவெய்ட்டில் இன்னும், காட்டுமிராண்டித்தனமான — கொடூர தண்டனைகள் நீடித்துள்ளன. ரம்சான் தினங்களில் பொது இடங்களில் புகைபிடித்தல் போன்றவற்றிற்காகப் பொது இடங்களில் நிறுத்திக் கசையடி வழங்கும் காட்டுமிராண்டித் தனமான தண்டனை உள்ளது.

குவெய்ட்டின் மக்கள் தொகை என்னவென்பதுதிட்டவட்டமாகத் தெரியாவிடினும், உத்தேசமாக 300 ஆயிரம் என்பதை ஏற்றுக்கொண்டால், அதில்100 ஆயிரம் மக்கள் அந்நிய நாட்டைச் சார்ந்தவர்களாக இருப்பர். அவர்கள் மத்திய கிழக்கு நாடுகள், பாரசீக வளைகுடா, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளைச் சார்ந்தவர்களாவர்.

"ஆரம்பக்கல்வி" ஆபீஸ்.

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் *பாரங்களை அனுப்ப தபால் செலவு :*

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

பண்டைக்காலத் தமிழர்கள் கண்ட மக்களாட்சி முறை

பஞ்சாயத்து மாநாட்டில் கவர்னர் பேருரை

"பஞ்சாயத்துக்கள், தல நிர்வாகத்துறைகளில் சுய ஆட்சி உறுப்புக்களாகத் தமிழ்நாட்டில் பழங்காலந்தொட்டே நிகழ்ந்து வந்துள்ளன. செங்கற்பட்டு மாவட்டத்தில் உத்திரமேரூரில் உள்ள வைகுண்டப் பெருமாள் கோயில் சுவரின் வெளிப்புறத்தில் காணப்படுகிற மிக முக்கியமான கல்வெட்டுக்கள், பழந்தமிழகத்திலே கிராம நிர்வாகம் எப்படியிருந்தது—கிராமக் குடியாட்சி முறை சபைகள் மூலம் எப்படி இயங்கிவந்தது—கிராம மன்றங்களின் உறுப்பினர்களுக்கு இருக்கவேண்டிய யோக்கியதாம்சங்கள் என்னென்ன—என்பது பற்றியெல்லாம் நமக்குத் தெளிவாக விளக்குகின்றன.

"ஆயிரம் ஆண்டுக்கு மேலாகிவிட்ட இந்தக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளவைகளிலிருந்து பல்வேறு குழுக்களைக் கொண்ட 'கிராம சபை'யினால் நடத்தப்பட்டுவந்த கிராமக் குடியாட்சிமுறை, சாசனத்தின் காலத்தையும் விட மிகவும் பழமையானது என்று நமக்குத் வெளிவாகத் தெரிகிறது.

"கிராமச்சபையும், அதன் குழுக்களும், எப்படி அமைக்கப்பட வேண்டும்—அதன் நிர்வாக அமைப்பு முறைகள் என்ன—உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்ற முறைகள் என்ன—என்பது பற்றிய தெளிவான விளக்கங்களைப்பற்றிய விவரங்களும் அடங்கிய அரச உத்தரவே இந்தச் சாசனமாகும்.

"கிராமமானது பன்னிரண்டு குடியிருப்புக்களாகப் பிரிக்கப்பட்டு, அவை மேலும் 'வார்டு'களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியில் வசிக்கின்ற மக்களும் தங்களுடைய பிரதிநிதியை 'குடவோலை' முறை மூலம் தேர்ந்தெடுக்கின்ற முறை, அந்தக் காலத்தில் அமுலில் இருந்துவந்துள்ளது என்பதை நாம் அறியும்பொழுது, நமக்கு ஆச்சரியம் மேலிடுகிறது.

"தேர்தல்கள் எப்படி நடைபெற வேண்டும்—அதற்கான விதிமுறைகள் என்னென்ன—அபேட்சகர்களுக்கு இருக்கவேண்டிய யோக்கியதாம்சங்கள் என்னென்ன—யார் யாரை அபேட்சகர்களாகத் தேர்ந்தெடுக்கக்கூடாது—அபேட்சகர்களை எப்படித் தேர்ந்தெடுக்க வேண்டும்—வாரியங்கள் நியமனம் செய்தல் எப்படி, கிராமக் கணக்குகளைப் பராமரிக்கின்ற வேலைமுறைகள் என்னென்ன—என்பது பற்றியெல்லாம், இந்தச்

சாசனம் நமக்குத் தெள்ளத் தெளிந்த முறையில் சித்திரிக்கிறது.

"கிராமப் பஞ்சாயத்துக்கள் மிகப் பழங்காலத்திலேயே வேரூன்றி இருந்தன என்பதும், மனிதனின் கூட்டு வாழ்க்கையினையும், கலாச்சாரத்தையும் வளர்க்கின்ற நிறுவனங்களாக அவை பெருமிதத்துடன் திகழ்ந்து வந்தன என்பதும், இவைகளிலிருந்து மிகவும் தெளிவாக நமக்குப் புலனாகிறது.

"கிழக்கு இந்தியக் கம்பெனியின் ஆட்சிக்காலத்தில், ஜனநாயகத்தின் அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு அமைந்த இந்த நிறுவனங்கள் அழிக்கப்பட்டன; ஆனால், இந்த நிறுவனங்களின் அமைப்புக்களை மறுபடியும் புதுப்பிக்க வேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்து, நடவடிக்கைகளை மேற்கொண்ட பெருமை, ரிப்பன் பிரபு அவர்களைச் சாரும்"

என்று, தமிழ்நாட்டுக் கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள், சென்னையில் நடந்த பஞ்சாயத்து மாநாட்டுக்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு துறையிலும் புரட்சி உருவாகிறது!

அவர், தம் உரையில் மேலும் கூறியதாவது:—

நாட்டின் எல்லாத் துறைகளிலும் ஒரு சமநிலையான அபிவிருத்தியை அடையவும் சாதாரண மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதன் மூலம் ஒவ்வொருவருக்கும் வளமான வாழ்வினை அளிக்கவும் வேண்டி தொடர்ந்து ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுச் செயல்பட்டுவருகின்றன.

சுதந்தரம் கிடைத்ததிலிருந்து, இந்தத் திட்டங்களின் மூலமாகப் புதிய தொரு இந்தியாவை உருவாக்குகின்ற இந்த வேலை, நாட்டின் மிகப்பெரிய வேலையாக அமைந்துவிட்டது. நம்முடைய திட்டமிட்ட அபிவிருத்தி அடிப்படை நோக்கங்கள் இரண்டு. வெகு வேகமாகப் பெருகிவருவதும், தொழில்நுட்ப முன்னேற்றமுள்ளதுமான ஒரு பொருளாதார அமைப்பினை சனநாயகமுறைகளில் உருவாக்குதல்; ஒவ்வொரு குடிமகனுக்கும் சமமான வாய்ப்புக்களை அளிக்கின்ற நீதியை அடிப்படையாகக்கொண்ட ஒரு சமுதாய அமைப்பினைத் தோற்றுவித்தல்—ஆகிய இந்த இரண்டுமே இந்த முக்கியமான நோக்கங்களாகும்.

மனித முயற்சிகளினால் இயக்கப்படுகின்ற ஒவ்வொரு துறையிலும், இன்றைக்கு ஒரு பெரிய புரட்சி உருவாகிக்கொண்டுவருகிறது. இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் அந்தப் புரட்சியில் பங்கு கொண்டோ, அல்லது அதை உணர்ந்து கவனிக்கின்ற ஓர் சாட்சியாகவோ திகழ்கிறான்.

பெரிய தொழிற்சாலைகளை அமைத்தல், பெரிய அளவில் திட்டங்களைத் தீட்டி நடத்துதல்-என்பதோடு மட்டுமல்லாமல், உணவு உற்பத்திக்கும் மிக முக்கியமான இடம் அளிக்கப்பெற்றுள்ளது. உணவு விஷயத்தில் தன்னிறைவு நிலையை அடைவதற்காக மட்டுமல்லாமல், இயற்கையின் ஒத்துழைப்பு இல்லாமற் போகின்ற காலங்களிலும் நம் முறைய தேவைகளைச் சமாளிக்கவும் வேண்டி, உணவு உற்பத்தியில் கவனம் செலுத்தப்படுகிறது.

ஐந்தாண்டுத் திட்டத்தில் பஞ்சாயத்துக்களின் நிலை

சனநாயக முறையில் படிப்படியான அதிகாரப் பரவல் முறை என்பது உருவம் பெறத் தொடங்கிவிட்டது. உள்ளூர் நிர்வாக அமைப்பு முறையில், பஞ்சாயத்து ஒரு சுயாட்சி உறுப்பாகத் திகழத் தொடங்கிவிட்டது. தேசிய ஐந்தாண்டுத் திட்டத்தில் இன்றியமையாத அம்சங்களைச் செயல்படுத்துவதில் இந்தப் பஞ்சாயத்துக்கள் மிக முக்கியமான பங்கினைப்பெறும்.

1930-ம் ஆண்டு இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின் மூலம், பஞ்சாயத்துக்கள், ஆரம்பத்தில் தாலுகா போர்டுகளின் கீழ் கொண்டுவரப்பட்டு, பின்பு ஒரு பக்கத்தில் ஜில்லா போர்டுகள் கீழும், மற்றொரு பக்கத்தில் அரசாங்கத்தின் கீழும் கொண்டுவரப்பட்டன. பின்பு, அரசியல் சட்டத்தின் 40-வது விதியில் கூறப்பட்டுள்ளதை, நடை முறையில் நிறைவேற்றும் நோக்கத்தோடு, 1950-ஆண்டு சென்னை கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டம் நிறைவேறியது.

1958-ம் ஆண்டில், தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் தோன்றியது. 1958-ல், தேசிய அபிவிருத்தி மன்றத்தினால் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்ட வேலைகள் சம்பந்தப்பட்ட குழுவின் சிபாரிசுகளின் விளைவினால் ஏற்பட்ட புதிய கருத்துணர்வுகளின் அடிப்படையில், பஞ்சாயத்து நிர்வாகத்தை அமுலாக்கும் சட்டம், தமிழ்நாட்டில்தான் முதன் முதலாக நிறைவேறியது என்பதை, இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

1958-ம் வருடத்திய புதிய சட்டத்தின் கீழ் அமைக்கப்பெற்றுள்ள பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், சமீப காலம் வரையில் இருந்துவந்த பஞ்சாயத்துக்கள், தாலுகா போர்டுகள், மாவட்ட போர்டுகளிலிருந்து கருத்து அடிப்படையில், மிகவும் வேறுபட்டுள்ளன என்பது கவனிக்கப்படவேண்டும். தல நிர்வாகக் கடமைகள் என்று பொதுவாகக் கூறப்படும் கிராமத் துப்புரவு வேலைகள், தெரு விளக்குப் போடுதல், கிராமப் போக்குவரத்துக்களைப் பராமரித்தல், வடிகால், சுகாதாரம், ஆரம்பக்கல்வி போன்ற இவைகளை மட்டுமே கவனித்துக்கொள்கிற நிறுவனங்களாகத்தான் இவைகள் திகழ்ந்து

வந்தன. இவைகளுக்கு ஆதாரங்கள், நிதி வசதிகள் அதிகம் கிடையாது. குறைந்த அளவிலிருந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு, இவை ஒன்றோடொன்று ஒட்டாமல், ஒருவிதத் தொடர்பு மின்றித் தன்னிச்சையாகவும், கிராமப் பஞ்சாயத்துக்கும்-மாவட்டக் கழகத்திற்குமிடையே உயிரோட்டமுள்ள ஒரு தொடர்பே இல்லாத நிலையிலும் இயங்கிவந்தன. ஆனால், 1958-ம் ஆண்டு சட்டத்தின்படி தோற்றுவிக்கப்பட்டுள்ள புதிய தல நிர்வாக அமைப்பு முறையில், மாவட்டக் கழகங்களுக்கு வாரிசாக வருகின்ற பஞ்சாயத்து யூனியன், கிராமப் பஞ்சாயத்துக்களின் கூட்டுறவின் அடிப்படையில் நடைபெறுகின்ற ஓர் ஒருங்கிணைந்த அமைப்பு முறையாகத் திகழும்.

யூனியனை நடத்துகின்ற அதிகாரம் பெற்றுள்ள பஞ்சாயத்து யூனியன் மன்றமானது, கிராமப் பஞ்சாயத்துக்களின் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்குகிறது. பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களுக்கு மிடையே மிக நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்துகின்ற-அமைப்பு முறையில் செய்யப்பட்டுள்ள இந்த மாறுதலானது, விசேட முக்கியத்துவம் படைத்ததாகும். இதைவிட முக்கியமானது, நாட்டின் திட்ட அபிவிருத்தி சம்பந்தப்பட்ட பணிகளில், பிரதேச சுயாட்சி உறுப்புக்களாக இந்த நிறுவனங்கள் பங்கேற்றுக்கொண்டு, திறமையுடன் அந்தப் பணிகளைச் செயலாற்றிவைக்கும் வகையில், அவைகளுடைய கடமைகளும், வசதிகளும், ஆதாரங்களும், வருங்காலத்தில் பயன்தரத்தக்க முறையில் மாறுதல்கள் செய்யப்பட்டிருப்பதுதான்.

உள்ளாட்சி நிர்வாகம், அபிவிருத்தி நிர்வாகம் சம்பந்தப்பட்ட இந்தச் சீர்திருத்த வேலையானது, முடிவு பெற்றுவிட்டது, மாநிலம் பூராவும், 12540 பஞ்சாயத்துக்களும், 373 பஞ்சாயத்து யூனியன்களும் செயல்படத் தொடங்கியுள்ளன.

மக்கள் ஆட்சியை நிறுவவேண்டும் என்ற இலட்சியத்தை நாம் அடைவதற்கும், திறமையாக அவைகளைச் செய்ய உறுதுணையாக அதிகாரப் பரவல் முறை, பொறுப்புக்களைப் பகிர்ந்து ஒப்படைத்தல், ஆகிய வேலைத் திட்டம் உள்ளது. இந்த வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதில், பல்வேறு கட்டங்கள் உள்ளன. சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களைப் பஞ்சாயத்து யூனியன்களாக மாற்றி அமைத்தல், மாவட்டக் கழகங்கள் கலைக்கப்படுதல் ஆகிய, இந்த, வேலைகள், இந்தக் கட்டங்களில் மிக முக்கியமானவை. அப்படிப்பட்ட ஒரு மக்களாட்சியை அமைப்பதில், ஒவ்வொரு மனிதனும்—அதிலும் குறிப்பாகக் கிராமங்களில்

(46-ம் பக்கம் பார்க்க)

மாநிலப் பஞ்சாயத்து மாநாட்டில் நேரு அறிவுரை

"இந்தியாவில் கிராமங்களே அதிகம். கிராமங்கள் வளர்ச்சி அடைந்து மாறினால்தான் இந்தியாவும் வளர்ச்சியடைந்து மாறும். இதில் பஞ்சாயத்துகளுக்கும் பஞ்சாயத்துப் பிரதிநிதிகளுக்கும் பெரிய பொறுப்பு இருக்கிறது. அதை நிறைவேற்ற வேண்டும்." என்று பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு, சென்னை நகரில் ஐலண்டு மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் 8-10-61 அன்று கூடிய தமிழ்நாடு பஞ்சாயத்து மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

கல்வியை விஸ்தரிப்பது, மின்சாரம் முதலிய சக்திகளை நன்கு உபயோகிப்பது, பஞ்சாயத்து ராஜ்யத்தை அமைப்பது, கூட்டுறவு முறையைப் பின்பற்றுவது ஆகிய நான்கு அம்ச திட்டத்தைப் பஞ்சாயத்துப் பிரதிநிதிகளுக்குப் பிரதம மந்திரி சொல்லி இதில் வெற்றி பெற்றால் பெரும் போரில் வெற்றி பெற்று மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியவர்களாவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:— இந்தப் பஞ்சாயத்து மாநாட்டில் கலந்துகொள்வது பற்றி நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். நாடு சுயராஜ்யம் அடைந்த பிறகு பஞ்சாயத்து ராஜ்ய அமைப்பு ஒரு மாபெரும் சாதனையாகும். இது ஒரு புரட்சிகரமான மாறுதல் என்றே நான் கருதுகிறேன்.

நாம் சுதந்திரம் அடைந்த பிறகு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை எப்படி உயர்த்துவது? ஏழ்மையை அகற்றி எல்லோருக்கும் வேலை வாய்ப்புகளைத் தேடிக் கொடுப்பது எப்படி? என்பதுபற்றிச் சிந்தித்து அதற்காக ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிப் பெரும் வளர்ச்சி யடைந்திருக்கிறோம். 1952-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ந் தேதி காந்தி ஜயந்தி தினத்தன்று சமுதாய நல அபிவிருத்தி திட்டம் துவக்கப்பட்டது. அதுமுதல் இத்திட்டம் நன்கு பரவி இந்தியா முழுவதும் விஸ்தரித்திருக்கிறது. இப்பொழுது மூன்று லட்சம் கிராமங்களில் இத்திட்டம் அமுலிலிருக்கிறது.

சமுதாய நலத்திட்ட நன்மை

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காரணம் என்ன? இந்தியாவில் 80 சதவிகித மக்கள் கிராமங்களில் வசிக்கின்றனர். கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்

டும், கிராமங்கள் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காகவே இத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. சென்ற ஒன்பது வருஷங்களில் இத்திட்டம் நல்ல பலனளித்திருக் கிறது. விவசாயம், கல்வி, போக்குவரத்து முதலிய பல துறைகளில் வளர்ச்சி ஏற்பட் டிருக்கிறது. கிராம மக்களி டையே விழிப்பு ஏற்பட்டிருக் கிறது. புதிய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் உண்டாக்கி யிருக் கிறது. அவர்கள் எல்லாவற்றிற் கும் பிறரை நாடும் நிலை மாறி தன் னம்பிக்கையுடன் வேலை செய்து வாழ்க்கை நடத்த வழி ஏற்பட் டிருக்கிறது.

ஆட்சி முறை மாறுதல்

பிரிட்டிஷ் ஆட்சி நடந்தபோது மக்கள் பொறுப்பேற்கவில்லை. அதிகாரிகளே அவர்களுக்காக எல்லாவற்றையும் செய்துவந்த னர். பிரிட்டிஷ் ஆட்சி மறைந்த பிறகு பெரிய மாறுதல்கள் ஏற் பட்டுள்ளன. அதிகாரிகளே இன் னும் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் நமது மக்கள். அப் பொழுதிருந்த ஆட்சி வேறு. இப்பொழுதுள்ளது வேறு. அப் பொழுது டில்லியிலிருந்து வைஸ் ராய் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதிநிதியாக ஆட்சி நடத்தினார். இப்பொழுது டில்லியில் பார்லி மெண்டும், ராஜ்யங்களில் சட்ட சபைகளும் இருந்து மக்கள் பிரதி நிதிகள் ஆட்சி நடத்துகின்றனர். நிர்வாக இயந்திரம் இருந்தபோதி லும் அதன் அமைப்பில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இந்த மாறு தல் நாட்டின் வளர்ச்சியுடன் இணைந்து வந்திருக்கிறது. பிரிட் டிஷ் ஆட்சி காலத்தில் சட்டம் சமாதானத்தை நிலைநாட்டுவது. நாட்டைப் பிறநாடுகள் படை யெடுப்பிலிருந்து பாதுகாப்பது ஆகிய முக்கிய வேலைகளே அர சாங்கத்துக்கு இருந்தன. தற் கால முறையின் திட்டங்கள் பற்றி அப்பொழுது எண்ணமே இல்லை. ஆங்காங்கு சிற்சில சிறிய கால்வாய்த் திட்டங்கள், கல்வித் திட்டங்கள் முத லியன அப்பொழுதும் மேற் கொள்ளப்பட்டன. ஆனால் அவை எல்லாம் அபிவிருத்தி திட்டங்க ளாக இல்லை. அபிவிருத்தி திட்ட மென்பது முன்னணியில் இல்லை. சட்டத்தையும் சமாதானத்தை யும் பாதுகாப்பது, வரி வசூலிப் பது, சிறிய அபிவிருத்தி திட் டங்களை மேற்கொள்வது இவையே அரசாங்க வேலையாக இருந்தது. அது போலீஸ் அர சாங்கமென்று கூடக் கூறலாம். இதைக் குறையாகச் சொல்ல வில்லை. நிர்வாகம் நன்றாகத்தான் நடந்தது. போலீஸ் நிர்வாகத்தில் வெளிநாட்டு உள்நாட்டுப் பாது காப்பு சரியாகத்தான் இருந்தது. அந்த அளவுக்கு ஆட்சி நடத்தப் பட்டது.

இன்றைய நிலைமை

இப்பொழுது சுயராஜ்யம் வந்த பிறகு நமது சிந்தனையும் கவன மும் இதர பிரச்னைகளில் இருக் கிறது. நாட்டு மக்களின் வாழ்க்

கைத் தரத்தை உயர்த்துவதே இப்பொழுது முக்கியமானதாக இருக்கிறது. நமது மக்கள் ஏழைகள். சமுதாய, பொருளாதார வாழ்க்கையும் அப்படித்தான். இவற்றை மாற்றி க்ஷேமநல அரசாங்கம் ஏற்படுத்த நமது குறிக்கோளையே நாம் மாற்றியமைத்திருக்கிறோம். சோஷலிஸ சமுதாய அமைப்பை ஏற்படுத்த உறுதிகொண்டிருக்கிறோம். ஏழை, பணக்காரர் என்ற ஏற்றத் தாழ்வு இல்லாதிருக்க விரும்புகிறோம். இதன் மூலம் எல்லாம் சமமாக்கப்படவேண்டும் என்று பொருளல்ல. அது சாத்தியமல்ல. அவசியமும் இல்லை. எல்லோருக்கும் சமமான சந்தர்ப்பம் வேண்டுமென்பதே கருத்து. நமது நாட்டில் பலருக்குச் சமசந்தர்ப்பம் கிடையாது. குழந்தைகள் கல்வி பயிலக்கூட சமசந்தர்ப்பம் இல்லை. ஆனால் சென்ற 14 ஆண்டுகளில் நாம் முன்னேறியிருக்கிறோம். ஆயினும் நமது இலட்சியத்தை அடையும் பிரயாணத்தில் நாம் இன்னும் நீண்ட தூரம் போக வேண்டியிருக்கிறது.

புரட்சிகரமான மாறுதல்

நாம் சுதந்திரம் அடைந்த பிறகு பல சமூக சீர்திருத்தங்களும் புரட்சிகரமான மாறுதல்களும் செய்ய வேண்டியிருக்கிறது. சமூக பொருளாதாரத் துறைகளிலும் சீர்திருத்தங்கள் வேண்டியிருந்தன. அவற்றைச் செய்து வந்திருக்கிறோம். அத்துடன் மிக அவசியமான சட்டம், சமாதானத்தை நிலைநாட்டுவதையும் கவனித்து வருகிறோம். இப்பொழுது அரசாங்கத்தின் கடமை என்ன? டில்லியில் இந்தியா சர்க்கார் இருக்கிறது. அது போல் இங்கும் சென்னை அரசாங்கம் இருக்கிறது. மந்திரிகள் இருக்கின்றனர். பல அதிகாரிகளும் இருக்கின்றனர். இங்கு பஞ்சாயத்து பிரதிநிதிகளான நீங்கள் நாட்டு ஆட்சியுடன் நெருங்கிய உறவுகொண்டிருக்கிறீர்கள். விரிவான முறையில் இதைப் பரிசீலித்தால் நாட்டின் ஆட்சியில் போலீஸ் கான்ஸ்டபிளுக்கும் குமஸ்தாவுக்கும் பங்கு இருக்கிறது. தலைமையில் இருந்து உத்தரவு பிறப்பிப்பதால்மட்டும் போதாது. மக்களே பங்கு கொண்டு நாட்டுக்கும் மக்களுக்கும் எது நல்லது என்பதைச் சிந்தித்துமுடிவுசெய்து அதைஅமுல் நடத்த வேண்டும். நான் யார்? நீங்கள்யார்? நான் மக்கள் பிரதிநிதியாக இருந்து பார்லிமெண்டில் பணியாற்றுகிறேன். நீங்களும் மக்கள் பிரதிநிதியாகவிருந்து கிராமத்தில் பணியாற்றுகிறீர்கள். முற்காலத்தில் அரசர்கள் இருந்தனர். நல்ல மன்னர்களும் உண்டு, கொடுங்கோல் மன்னர்களும் உண்டுபிறகு பிரிட்டிஷ் ஆட்சியில் வைஸ்ராய் ஆட்சி. அதன் பிறகு மக்கள் ஆட்சி. இப்பொழுது அந்தக் கருத்தை மேலும் விஸ்தரித்து பஞ்சாயத்து ஆட்சி. கிராம மக்கள் நாட்டு ஆட்சியுடன் நேர் தொடர்புகொண்டிருக்கின்றனர். "பஞ்சாயத்துகள்" திட்டங்களை

வருத்து மக்கள் நன்மையைக் கருதி அவற்றை அமுல் செய்கின்றன. குறைகளையும் போக்குகின்றன. இது ஜனநாயக ஆட்சியை மக்கள் வரை கொண்டு செல்வதாகும். இது எப்பொழுது முழு நிலைமை பெறும்? பொருளாதார சுதந்திரம் அடையும்போதுதான். அதற்காகவே நாம் முற்பட வேண்டும். அந்தப் பெரும் பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. மக்களைத் தன்னம்பிக்கையுள்ளவர்களாகச் செய்யவேண்டும். திறமையும் ஆற்றலும் ஏற்படச் செய்ய வேண்டும். ஒரு நாட்டின் பலம் அதன் மக்கள் தொகைமட்டுமல்ல. தொகை என்றால் ஆடு மாடுகளை எண்ணுகிறோம். அதுபோல் இது போதாது. மக்கள் திறமை முக்கியம். மக்களின் தரம் மோசமாக இருந்தால் நாட்டின் தரமும் அவ்வாறேதான் இருக்கும். முற்காலத்தில் இந்தியா பலமாக இருந்தது. ஏன்? கிராமங்கள் பலமாக இருந்தன. கிராம சமுதாயம் நன்றாக அமைக்கப்பட்டிருந்தது. கிராம பலம் குறைந்தால் இந்தியாவின் பலமும் குறையும். அஸ்திவாரமே பலமின்றிப் போகும். கிராமத்தின் பலத்தை அதிகரிக்க இந்த விஞ்ஞான யுகத்தில் விஞ்ஞான ஆராய்ச்சி சாதனைகளையும் பயன்படுத்தி மக்களின் வாழ்க்கையை உயர்த்த வேண்டும். இந்தியா கிராமங்களைக் கொண்டது. கிராம மக்களின் வாழ்க்கை மாறினால் இந்தியாவின் வாழ்க்கையே மாறும்.

ஏழ்மை அறிவின்மை மீது போர்

ஏழ்மை, அறிவின்மையை எதிர்த்துப் போராடி ஒழிக்கவேண்டும். இதுவும் ஒரு யுத்தம்போல் தான். உலகில் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. நாம் பலஹீனமாக இருந்தால் சுதந்திரம் போய் விடும். அதற்கு நாம் இடம் கொடுக்கமாட்டோம். நமது மக்களையும் நாட்டையும் பலப்படுத்தி எந்த வெளி நாடானாலும் நாம் அதைச்சமாளிக்க வேண்டும். இதில் எல்லாம் மெதுவாக நடவடிக்கை என்பதில்லை. துரிதமாக நடவடிக்கை எடுத்து முன்னேற வேண்டும். இதில் நமக்குள் ஒற்றுமை தேவை. எல்லோரும் இந்நாட்டு பிரஜைகள். எல்லோருக்கும் சம உரிமை உண்டு. ஜாதி உணர்ச்சிக்கு இங்கு இடமில்லை.

பஞ்சாயத்துகளுக்கும் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் ஏராளமாக வேலை இருக்கிறது. ஒவ்வொரு சிறுவன் சிறுமிக்கும் கல்வி கற்க ஏற்பாடு, விவசாய உற்பத்தி அதிகரிப்பு, தொழில் வளர்ச்சி எல்லாம் இருக்கிறது. பெருந்தொழில்களை அரசாங்கம் நடத்தலாம். ஆனால் நடுத்தர, சிறிய, கிராமத் தொழில்களை நீங்கள் கவனிக்கலாம். உலகிலேயே கூட்டுறவு முறை சிறந்ததென்று ஏற்கப்பட்டிருக்கிறது. அந்த முறைமூலம் நாம் மிகுந்த வளர்ச்சியடையலாம். நில உடைமை குறைவாக இருக்கும் நிலையில்

கூட்டுறவு முறையில் விவசாய வளர்ச்சி நல்லபடி ஏற்பட வசதி இருக்கிறது.

மூதன் முதலாக மனிதன் நீராவியைக்கண்டுபிடித்து அதன் பலத்தைப் பயன்படுத்தினன். பிறகு மின்சார பலத்தைப் பயன் படுத்தினன். நேற்று பாம்பிக் குளத்தில் இதற்கான ஒரு பெரும் திட்டத்தைக்கூடப் பார்த் தேன். கிராமங்களிலும் மக்களுக் குள்ளும் புதிய உணர்ச்சியும் விழிப்பும் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது உங்களுடைய கடமையை நான்கு பிரிவுகளாகக் கூறுகிறேன். ஒன்று கல்வி; இரண்டாவது சக்தி (மின்சாரம் அல்லதுஎந்தவகையாலும்சரி) மூன்றாவது பஞ்சாயத்து ராஜ் யம். இதில்விவசாயம் தொழில் எல்லாம் வரும். நான்காவது கூட் டுறவு. இந்த நான்கு துறைகளி லும் நீங்கள் வெற்றியடைந்தால் மாபெரும் போரில் நீங்கள் வெற்றியடைந்து மக்கள் வாழ்க் கைத் தரத்தை உயர்த்துவீர்கள். உங்களுக்கு மகத்தான பொறுப்பு இருக்கிறது. அதை நிறைவேற்று வதில் உங்களுக்கு ஆசி கூறுகி றேன்.

தமிழ் நாட்டில் 1060 பேருக்கு ஒரு போலீஸ்காரர்

நாட்டிலேயே இதுதான் அதிக விகிதம்

மக்களின் எண்ணிக்கைக் குள்ள போலீசார் விகிதாச்சாரத் தைப் பார்த்தால், நாட்டிலேயே தமிழ் நாட்டில்தான் விகிதம் அதி கம் என்றுக் தெரிவதாக தென் ரேஞ்சு போலீஸ் டிபுடி இன்ஸ் பெக்டர் ஜெனரல் கே. ஆர். ஷெனுய் கூறினர். சென்னை ராஜ் யத்தில் 1060 ஜனங்களுக்கு ஒரு போலீஸ்காரர் வீதம் இருப்ப தாக அவர் தெரிவித்தார்.

ராஜ்யத்தில் மொத்தம் 25,000 போலீசார் இருக்கின்றனர். போலீசார்களைப் பொதுமக்கள் தங்களுடைய நண்பர்களாகப் பாவித்து போலீசார் தங்கள் கடமையை ஆற்றுவதற்கு உதவி புரிய வேண்டுமென்றார்.

(41-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளவர்கள், இந்த நாடு தன்னு டைய சொந்த நாடு என்ற உள்ளு ணர்வினைப் பெறவும், அதை வள மான நாடாக உருவாக்குகின்ற திருப்பணியில் தங்களுக்கும் முக் கியமான பங்கு உண்டு என்று, உணரவும் முடியும்.

பஞ்சாயத்துக்களும் உழவுத்தொழில் வளர்ச்சியும்

[எம். பக்தவச்சலம், உழவுத்துறை அமைச்சர்]

தமிழ்நாட்டின் நிலப் பரப்பளவு 320 லட்சம் ஏக்கர்களாகும். இந்த மாநிலத்தில் 337 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இந்த மக்கள் தொகையானது ஆண்டொன்றுக்கு 4 லட்சம் என்ற விகிதத்தில் அதிகமாகிக் கொண்டே போகிறது.

மொத்தம் 320 லட்சம் ஏக்கர் உள்ள நிலப்பரப்பில், 31 லட்சம் ஏக்கர் நில அளவு, கிராம அமைப்புகள், நகர அமைப்புகள், சாலைகள் ஆறுகள், வாய்க்கால்கள், குளங்கள் முதலியவைகளாகப் பயன்படுகின்றன. மற்ற 60 லட்சம் ஏக்கர்களைக் காடுகள், புதர்கள், மேய்ச்சல் இடங்கள் ஆட்கொண்டு விடுகின்றன. இது தவிர 25 லட்சம் ஏக்கர் நிலப் பரப்பு விவசாயத்திற்குப் பயன்படாத கற்பாறைகளாக உள்ளன. இதுவெல்லாம் போக 204 லட்சம் ஏக்கர் நிலப்பரப்புதான் விவசாயம் செய்யக்கூடிய நிலங்களின் அளவாகும். முன்பே விவசாயம் செய்யப்படுகின்ற இடங்கள் விவசாயம் செய்யக்கூடிய இடங்கள் என்ற இரண்டும் இந்த 204 லட்சம் ஏக்கரில் அடங்கும். இதன்படி பார்த்தால் மக்கள் தொகையில் நபர் ஒன்றுக்கு 61 செண்டு நிலப்பரப்புத்தான் விவசாயத்திற்கென்று கிடைக்கிறது.

சில ரசமான புள்ளி விவரங்கள்

உலகத்தின் மொத்த நிலப்பரப்பு, உலகத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் தலைக்கு 12 ஏக்கர் என்ற அளவில் கிடைக்கச் செய்யும்படியான அவ்வளவு பெரியதாகும். உலகத்தை மொத்தமாகக் கொண்டு கணக்கிட்டால் கிடைக்கின்ற சராசரி அளவாகும் இது. ரஷ்யாவில் தலைக்கு 30 ஏக்கர்களுக்கும் குறையாத நிலப்பரப்பு என்ற அதிக பட்ச நிலை அமைந்துள்ளது. ஆனால் இந்தியாவிலோ தலைக்கு 2 ஏக்கருக்கும் குறைந்த அளவுதான் கிடைக்கக்கூடிய குறைந்தபட்ச நிலை உள்ளது. இந்திய நாட்டில் முன்பே குறிப்பிட்ட மாதிரி தலைக்கு ஒரு ஏக்கருக்கும் குறைந்த நிலப்பரப்பு உள்ள மிகவும் நெருக்கமான ஜனப் பகுதி உள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று.

மொத்தம் 204 லட்சம் ஏக்கர் விவசாயத்திற்கு லாயக்கான நிலப்பரப்பில் 143 லட்சம் ஏக்கர்கள் பயிர் விதைத்து பயிராக்கப்படுகின்ற நிலங்கள். 25 லட்சம் ஏக்கர்கள். சாதாரணமாகப்

பயிர்களை விட்டுவிட்டு மாற்றி விதைக்க வேண்டியிருப்பதினால் தரிசாக விடப்பட்டுள்ள நிலப் பரப்பு. மிச்சமிருக்கின்ற 36 லட்சம் ஏக்கர்களில் 15 லட்சம் "சக்தியிழந்துவிட்ட தரிசு நிலங் கள்" 21 லட்சம் "விவசாயக் கழிவு" நிலங்கள்.

விதைகள் விதைக்கப்படுகின்ற 143 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் 28 லட்சம் ஏக்கரில் ஒரு தடவைக்கு மேற்பட்ட பல தடவை களில் விதைத்துப் பயிரிட்டாகி விட்டது. ஆகவே, இப்பொழுது 171 லட்சம் ஏக்கர் பரப்புள்ள மொத்த அளவு நிலப்பரப்பு பயிர்கள் விளைகின்ற நிலங் களாக உள்ளன. இதில் 120 லட்சம் ஏக்கர்கள் உணவு தானி னியப் பயிர்கள் விளைவது, 51 லட்சம் ஏக்கர்கள் உணவு தானியமல் லாத மற்றப் பயிர்கள் விளைவது. உணவு தானியப் பயிர்களில் மிக வும் அதிகமாகப் பயிரிடப்படு கின்ற ஒரே பயிர் நெல்தான். 56 லட்சம் ஏக்கர்களில் நெல் மட்டும் பயிரிடப்படுகின்றது.

ஆகையால் இருக்கிற நிலப் பரப்பைவைத்துக், கூடுமானவரை அதிகப்படி சாகுபடிக்கு முயற் சிப்பதுதான். நம் கடமை இதில் பஞ்சாயத்துகளுக்கு விசேஷ பொறுப்புண்டு. விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளை வழங்கி உற் பத்திப் பெருக்கத்திற்கு அவர் களுக்கு உதவலாம்.

நீர்ப்பாசன வசதிகள்

உணவு உற்பத்திக்குத் தேவைப்படுகிற வசதிகள் எல்லா வற்றிலும் மிகவும் முக்கிய மானது நீர்ப்பாசன வசதி. இந்த மாநிலத்தில் பயிர்கள் விளைவிக் விக்கப்படுகின்ற 142 லட்சம் ஏக் கர் நிலங்களில் 53 லட்சம் ஏக்கர் நிலங்கள் நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றுள்ளன. இந்த 53 லட்சம் ஏக்கர்களில் 40 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கள் அரசாங்கத்தினரால் பரா மரிக்கப்படுகிற வாய்க்கால்கள், குளங்களிலிருந்து கிடைக்கின் றன. மற்ற 13 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு விவசாயிகளுக்கே சொந்தமாக உள்ளதும் அவர் களாலேயே பராமரிக்கப்பட்டு வருவதுமான கிணறுகளிலிருந்து அநேகமாக நீர்ப்பாசனம் செய்யப் படுகிறது.

நீர்ப்பாசன வசதிகளை அதிகப் படுத்த அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது. அரசாங்க இலாகாக்கள் செய்கின்ற பொது வேலைகள் ஒரு பகுதியாகவும், விவசாயிகளே அமைத்துக் கொள்கின்ற தனியாக உள்ள வேலைகள் ஒரு பகுதியாகவும் அர சாங்கத்தின் ஏற்பாடுகள் அமைந் துள்ளன. தனிப்பட்டவர்களுக்கு இதற்காக க்கடன்களும் பண உத வித் தொகைகளும் அரசாங்கத் தால் அளிக்கப்படுகின்றன.

கடந்த பத்தாண்டுகளில் இந்த துறையில் ஒரு நிலையான முன்

னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகள் தொடர்ந்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் செய்யப்படும். எல்லாப் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆகியவற்றின் பயனைக் கண்டுள்ள அதிகமான உணவு உற்பத்தியின் அளவு முதல் திட்ட வேலைகளின் கீழ் ஆண்டொன்றுக்கு சுமார் 3 லட்சம் டன் என்றும் இரண்டாவது திட்ட வேலைகளின் கீழ் ஆண்டொன்றுக்கு சுமார் 2–1/4 லட்சம் டன் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. மூன்றாவது திட்ட காலத்தில் இந்த அதிகப்படியுள்ள அளவானது, ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சம் டன்னாக இருக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மூன்றாவது திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ள 33 சதவிகித மொத்த உணவு அதிகரிப்பு அளவில் இந்த வேலைத் திட்டங்கள் 8 சதவிகித அளவினுக்கு வழி செய்யும்.

இந்த வேலைத் திட்டங்களை செயல்படுத்த அரசாங்கமே தொடர்ந்து நேரடிப் பொறுப் பேற்றுக் கொண்டு, அரசாங்கத் துறையின் சிப்பந்திகளினால் இந்தப் பணியானது நிறைவேற்றப்படும்.

பஞ்சாயத்துக்கள் பங்கு

பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களின் பங்கு பின்வருமாறு இருக்கும் :—

அரசாங்கத்தால் பராமரிக்கப்படுகிற நீர்ப்பாசனப் பொது வேலைகளில் 200 ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த நில அளவுக்கு செய்யப்படுகிற நீர்ப்பாசன வேலைகள் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் அதிகாரத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. விட்டுப் போகாமல் தொடர்ந்து திறமையுடன் இந்த நீர்ப்பாசன வேலைகளைப் பராமரித்து வருதல் பஞ்சாயத்து யூனியன்களின் கடமையாகும்.

குடி மராமத்து

இரண்டாவதாக அரசாங்க இலாகாக்களினால் பாதுகாக்கப்படாமலும், தனிப்பட்ட முறையில் சொந்தமாக இல்லாமலும் இருக்கின்ற நிலையில் ஏராளமான நீர்ப்பாசன வேலைகள் உள்ளன. அவை சாதாரணமாக நீரினைக் கொண்டுவந்து வழங்குகின்ற கால்வாய்களும், ஓடைகளுமாகும். தண்ணீர் ஓட்டத்தைத் தேக்கி விடும்படி தூர் பிடிக்காமல் அவைகள் நல்ல நிலையில் இருக்க வருடா வருடம் சுத்தப்படுத்தப்பட்டு சீரிய முறையில் அவை பராமரிக்கப்படவேண்டும் பழங் காலத்தில் இந்த வேலை விவசாயிகளின் ஒன்றுபட்ட கூட்டு முயற்சியாக இருந்துவந்தது. இதைத் தான் இந்த மாநிலத்தில் "குடி மராமத்து" என்ற பெயரால் அழைக்கிறோம். சமீப காலமாக இந்தக் கூட்டு முயற்சி வேலையில் அக்கறையும், ஆர்வமும் குறைந்து கொண்டே வந்துவிட்டது. அதன் விளைவாக இந்த வேலை

புறக்கணிக்கப்பட்டுப் பின்தங்கி விட்டது. குடி மராமத்துக் கால்வாய்களைப் பழைய நிலைமைக்குக் கொண்டு வந்து மறுபடியும் ஆண்டுதோறும் தூர் இல்லாமல் சுத்தப்படுத்தும் வேலையை தொடங்கிச் செய்வது, இப்பொழுது ஒவ்வொரு பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்துயூனியனின் தலையாய கடமையாகும். இப்பொழுதே பல மாவட்டங்களில் இந்தத்துறையில் காரிய ரீதியான வேலைகள் தொடங்கி விட்டன. இதில் குறிப்பாகத் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சொல்லலாம். இந்த வேலை மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு நிரந்தரமாகத் தொடர்ந்து செய்யப்பட வேண்டும்.

மூன்றாவதாக திட்டங்களில் செய்யப்பட்டுள்ள நீர்ப்பாசன வசதிகளில் தங்களுடைய பங்கினைத் தங்களுடைய பொறுப்பினில் உள்ள பிரதேசங்கள் அடையும்படியான வகையில் நடவடிக்கை எடுக்க பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன்களும், இயற்கையாவே அக்கறை கொண்டிருக்கும். இந்தத் திட்டங்கள் சம்பந்தமாக கோரிக்கைகளை சமர்ப்பிக்க அவை பற்றி ஆலோசனைகளும், அறிவுரைகளும் சொல்ல இந்த ஸ்தாபனங்களுக்கு முழு உரிமை உண்டு.

ரசாயன உரங்கள்

விவசாய முறைகளில் நவீனமான அம்சங்களைப் புகுத்துவது என்ற ஒரு துறையிலாவது இந்த மாநிலத்தில் தவறாமல் ஒரு வேகமான மாற்றம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. ரசாயன உரங்களை உபயோகித்தல் என்ற வழக்கம் வேகமாகப் பரவிக் கொண்டு வருகிறது.

ரசாயன உரங்கள் வழங்குகின்ற வேலை, பஞ்சாயத்துக்களின், பஞ்சாயத்து யூனியன்களின் கையில் இல்லை. மாநில அரசாங்கத்தின் கையில் கூட இந்த அதிகாரம் இல்லை. இந்தியா பூராவுக்கும், மத்திய அரசாங்கம் தான் இந்த ரசாயன உர வளங்களைத் துரிதப்படுத்தி, தமிழ்நாட்டுக்கு நியாயமான பங்குகளை உயர்த்த வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் கிடைக்கின்ற உரத்தை நேர்மையான அளவின் அடிப்படையில் பிரித்து விநியோகம் செய்வதும் இந்த உரத்தை உபயோகிக்க யார் தயாராகவும் உடன்பாடாகவும் இருக்கிறார்களோ அந்த விவசாயிகளுக்கு நியாயமான அளவில் இப்படி வழங்கப்பட்ட உரமானது மேலும்பகிர்ந்தளிக்கப்படும்படி பார்த்துக்கொள்வதும் மாநில அரசாங்கத்தின் கடமையாகும்.

இந்தப் பொறுப்பை அரசாங்கம் தொடர்ந்து ஏற்றுக்கொண்டிருந்தாலும் பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் இந்தத் துறையில் கீழ்க்கண்ட முறையில் உபயோகமான சில கடமைகளைப் புரிய வேண்டும்.

(1) விநியோக முறையில் ஒரு சீரான நிலையை ஏற்படுத்துதல். அந்த வேலையின் ஒரு பகுதியாக பஞ்சாயத்து யூனியன்களும் இந்த வேலையில் அக்கறை எடுத்துக் கொள்ளும்படி செய்யப்பட்டு அவைகளின் வட்டாரங்களுக்கு ஒதுக்கப்பட்ட உர அளவின் பங்கு எவ்வளவு என்பது அவைகளுக்குத் தெரியப்படுத்தப்படும். உரம் சரியாக வந்து சேருகிறதா என்று அவைகள் கண்காணிக்கப் படும். வருகின்ற உரங்கள் எங்கெங்கு எடுத்துச் செல்லப்படுகின்றன-என்ன செய்யப்படுகின்றன என்பதையும் கண்காணிக்கலாம். இப்படிச் செய்வதன் மூலம், ஒதுக்கப்பட்ட அளவு உரமானது வட்டாரத்தின் உற்பத்தியின் அபிவிருத்திக்காக உண்மையாக உபயோகப்படுத்தப் படுகிறதா இல்லையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

(2) விவசாயத் துறையில் விவசாயி அநேக விஷயங்களைத் தெரிந்து கொண்டிருப்பார். விவசாயத்தைப் பற்றிய அறிவானது மிகவும் அதிகமாகவே பரவியுள்ளது. இருந்தாலும், அறிவுரைகளுக்கும், சொல்லி இணங்க வைத்தலுக்கும் இன்னும் அவசியம் இருக்கிறது. அதுவும் குறிப்பாகப் புதிய மாதிரி நைட்ரஜன் சத்துள்ள உரங்களையும், பாஸ்பேட் உரங்களையும் உபயோகப் படுத்துவதில் விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட அறிவுரை கூறி, விளக்கி அதற்கு அவர்களை இணங்கச் செய்வதற்கும் அவசியம் இருக்கிறது. இந்த அறிவு பரப்பும் வேலை பஞ்சாயத்து யூனியனின் ஒரு முக்கியமான கடமையாகும். இந்த வேலை வளர்ச்சி அலுவலர்கள் மூலமாகச் செய்யப் படலாம்.

(3) தன்னுடைய பிரதேசத்திற்குள்ளாகவே இந்த வேலைகளைச் செய்வதில் பஞ்சாயத்து யூனியனுக்கும், வளர்ச்சி அலுவலர்களுக்கும் உதவி புரிய வேண்டியது ஒவ்வொரு பஞ்சாயத்தின் கடமையாகும்.

உள்ளூர் எருக்கள்

மூன்றாவது திட்ட முடிவில் அடைய வேண்டும் என்று திட்டமிட்டுள்ள அதிகப்படியான உணவு உற்பத்தியானது 33 சதவிகிதமாகும். இதில் எட்டுச் சதவிகித அளவினை நீர்ப்பாசன வசதிகளை மேலும் அபிவிருத்தி செய்வதன் மூலம் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. 12-1/2 சதவிகித அளவினை ரசாயன உரங்களை உபயோகித்தலை மேலும் அபிவிருத்தி செய்தலின் மூலம் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது இன்னும் மிச்சமிருக்கிற 12-1/2 சதவிகித அதிக அளவு உணவு உற்பத்தியைப் பெருக்க வழி செய்ய வேண்டும். இதை மற்ற எல்லாவகையான "முறைகளைக்" கையாளுவதன் விளைவாகப் பெறலாம். இவை அத்தனை வகைகளையும் சேர்த்து ஒருங்கிணைப்பாக உயர்தர சாகுபடி முறைகள் என்று குறிப்பிடலாம். இந்த முறைகளைக் கிராம வட்டார

அளவுகளில் திட்டமிட்ட முறையில் செயல்படுத்த வேண்டியது பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றின் தலையாய கடமையாகும். இந்தத் துறையில்தான் இதுவரை அரசாங்கத்தினால் ஏற்று நடத்தி வந்த பொறுப்புகள் வலிவான முறையில் மாற்றுகின்ற வேலை இப்பொழுது செய்யப்பட்டு வருகிறது.

உயர்தர சாகுபடி முறைகளில் மிகவும் முக்கியமானது, உள்ளூர் எருக்களை உபயோகித்தலும், அதை வழங்குவதை மிகவும் அதிகப்படியான முறையில் பெருக்குவதுமாகும். தோட்ட எரு எல்லா வட்டாரங்களிலும் ரொம்பவும் சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய ஒன்றாகும். ஆனால் அதே சமயத்தில் இது எங்கும் போதிய அளவுக்குக் கிடைக்காமலும் இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் பெறக்கூடிய தூரத்திலிருந்து கிடைக்கக்கூடிய போதிய அளவு பசுந்தழை உரத்தைப் பற்றிய வரையில் ஒரு வட்டாரத்திற்கும் இன்னொரு வட்டாரத்திற்கும் இடையே மிகப் பெரிய வித்தியாசங்கள் உள்ளன. சில வட்டாரங்கள் பசுந்தழை உர விஷயத்தில் நல்ல சாதகமான நிலையைப் பெற்றுள்ளன என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் அப்படிப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகவே உள்ளது.

இந்தப் பற்றாக்குறை எவ்வளவு தூரம் உள்ளது என்பதை ஊகத்தின் பேரில்தான் சொல்லமுடியும். ஒரு வட்டாரத்தில் சராசரியாக விளைகின்ற பயிர்களில் மூன்றில் ஒரு பாக அளவுக்குத்தான் முழுமையாக உரம் கிடைக்கிறது. இன்னும் ஒரு பகுதி அரைகுறையாகவும் மற்றும் ஒரு பங்குக்கு சுத்தமாக உரமே கிடைக்காத நிலையும்தான் உள்ளது என்பது பொதுவாக உள்ள ஒரு கருத்தாகும்.

நிலங்களிலேயே எருக்குழி வசதி

மோசமான பற்றாக்குறை நிலையை புஞ்சை நிலங்களில்தான் சாதாரணமாகக் காணமுடியும். ஒரு ஏக்கருக்கு ஒரே ஸ்டாண்டர்டு அளவுள்ள குழி ஒன்று என்ற விகிதத்தில் நிலங்களிலேயே கலவை எருக்குழிகளைத் தோண்டுவதுதான் சாதகமான ஒரு முறையாகும். கிளிரிசிடியா, புங்கம், இபோமியா, ஆடாதோடை, காட்டாமணி போன்ற மரங்களையும் செடி கொடிகளையும் வளர்ப்பதின் மூலம் அப்படிப்பட்ட குழிகளுக்கு வேண்டிய உரப் பொருள்களை அடையலாம். அப்படிப்பட்ட மரங்களையும் செடிப் புதர்களையும் வேலிப் புதர்களாகவும், கரையோரங்களிலும் வைத்துப் பயிரிடுதலில், அவைகளுக்குத் தண்ணீர் ஊற்றவும் அவைகளைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டியிருப்பதால் முதல் ஆண்டில்

இது விவசாயிகளுக்கு ஒரு இறுதிப்பிரச்னையாகத்தான் இருக்கும். இந்தப் பிரச்னையை நடைமுறையில் சமாளிப்பது எப்படி என்பதைத் தெரிந்துகொண்டுள்ள விவசாயிகள் மற்ற விவசாயிகளுக்கும் இதை எடுத்துச் சொல்லி அவர்களும் அந்த முறைகளைக் குறுகிய காலத்திற்குள் மேற்கொள்ளும்படி செய்வது பஞ்சாயத்தின் கடமையாகும். அவைகளைப் பாதுகாப்பாகப் பார்த்துக்கொள்ளப்போதியகண் காணிப்பாளர்களை பஞ்சாயத்து ஏற்பாடு செய்யவேண்டும்.

தனிப்பட்ட முறையில் விவசாயிகள் தங்களுக்குச் சொந்தமான இடங்களில் இப்படிப்பட்ட முறைகளை மேற்கொள்ளச் செய்வதுடன், தன்னுடைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள புறம்போக்கு தரிசு நிலங்களில் இப்படிப்பட்ட மரங்களையும், செடி கொடிகளையும் வைத்துப் பயிர் செய்ய வேண்டியது ஒவ்வொரு பஞ்சாயத்தும் தவறாமல் செய்ய வேண்டிய கடமையாகும்.

விதைகள்

ஒவ்வொரு ஆண்டும், கிராமத்தில் பயிர் விளைகின்ற நிலப்பரப்பில் சுமார் மூன்றில் ஒரு பாகத்தில் தரமான விதை தயாரிப்பு வேலை நடைபெற வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கிராம விதைப் பண்ணை இருக்க வேண்டும். அந்த விதைப்பண்ணையில் புதிதாக வேண்டியுள்ள விதைகளுக்கு தேவைப்படுகின்ற பொறுக்கு விதைகள் தயாரிக்கப்படும். கிராம விதைப் பண்ணையில் அப்படிப்பட்டதொரு உற்பத்தியைக் காண வழி—செய்யும் வகையில், மாநில விதைப் பண்ணையிலிருந்து கிராம விதைப் பண்ணைக்கு முறையான அளவில் வித்துக்குரிய மூல விதைகள் கிடைக்கும்படி ஒரு நிலையான ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல் கிராம விதைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட பொறுக்கு விதைகள், நல்ல முறையில் பரிசீலனை செய்யப்பட்டு நல்ல விதைதான் என்று சான்றளிக்கப்பட்டு, சேகரித்து, ஒரு இடத்தில் வைத்து கண்காணிக்கப்பட்டு, பிறகு அடுத்து வருகின்ற விளைச்சல் காலத்தில் விவசாயிகள் உபயோகப்படுத்த அவர்களுக்கு விற்பனை செய்யும்படியான நிலையான ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும். கடைசியாக, எந்தெந்த சந்தர்ப்பங்களில் அப்படிப்பட்ட நிலை அவசியமாகிறதோ, அப்பொழுது விவசாயிகளுக்குத் தேவையான விதைகளைக்கடனில் வாங்கக்கூடிய உறுதியான ஒரு நிலையையும் உண்டாக்க வேண்டும்.

மரம் நடுதல்

கலவை எரு தயாரிக்க வேண்டிய கரிமப் பொருள்களைப் பற்றியும், பசுந்தழை உரம் பற்றியும் குறிப்பிடும்பொழுது, கிராமங்களில் திட்டமிட்ட முறையில்

மரங்களை நட்டுப் பயிராக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. மரம் நடுதல் பல காரியங்களுக்குப் பயன்படுகின்ற ஒரு வேலையாகும். கிராம மக்களுக்கு வேண்டிய சாதனங்கள், உபகரணங்களுக்கும் அவை பயன்படுகின்றன; பயிரிட முடியாத நிலையில் உள்ள எல்லா நிலங்களும் வீணாகப் போகாமல் அவைகளைச் சிறந்த உபயோகத்தை அளிக்கின்ற முறையில் உபயோகப் படுத்துகின்ற நிலை மரங்களை நட்டுப் பயிராக்குவதின் மூலம் உண்டாகிறது. கிராமத்தின் மூலதனச் செல்வத்தை உருவாக்கவும், பெருக்கவும் இது ஒரு வழியாகும்.

இதே சமயத்தில், காட்டிலாகா சிப்பந்திகளினால் செய்யப்பட வேண்டிய பண்ணைக்காடு திட்டத்தை அரசாங்கம் அனுமதித்துள்ளது. இது அவர்களுக்கு ஒரு புதிய வேலை. இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இணைப்பான பகுதிகளில், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களைகலந்தாலோசனை செய்து, இந்த வேலையை அவர்கள் செய்வார்கள். மாநிலத் திட்டத்தில் இதற்காகச் செய்யப்பட்டுள்ள நிதி வசதிகளிலிருந்து இவைகளை உற்பத்தி செய்வதற்காக ஆகும் செலவினை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். மரம், செடிகள் பெரியதாக வளர்ந்தவுடன், அவைகள் பாதுகாக்கப் படவும், கிராமத்தின் நலனுக்காக உபயோகப்படுத்தப் படவும் வேண்டி, பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைக்கப்படும். இந்த வேலையைச் செய்ய காட்டு இலாகா அலுவலர்களுக்கு பிரதேசத்தில் என்னென்ன உதவிகள் வேண்டியுள்ளனவோ, அவைகளை அவர்களுக்கு அளிப்பது பஞ்சாயத்துக்களின் கடமையாகும்.

இவ்வாண்டு அக்டோபர் மாதம் முதல் மாநிலத்தின் ஒவ்வொரு வட்டாரத்திலும் விவசாய வளர்ச்சித் துறை அலுவலர் பகுதி இயங்கும். அதற்காக அரசாங்கப் பணத்திலிருந்து ஊதியம் அளிக்கப்படும். அந்தப் பகுதியின் வேலைகளை மாவட்ட விவசாய அதிகாரி கண்காணிப்பார். அந்தப் பகுதி பஞ்சாயத்து யூனியன் அதிகாரத்திற்குட்பட்டு பணியாற்றும். ‘பஞ்சாயத்து யூனியன்கள்’ பஞ்சாயத்துக்கள் மேற்கொண்டுள்ள பொறுப்புகளின் விளைவாக செய்யப்பட வேண்டிய எல்லா வேலைத் திட்டங்களையும் செயல் படுத்தி வைப்பதில் இந்த பணித்துறை பஞ்சாயத்து ஸ்தாபனங்களுக்கு உதவியாக இருக்கும். தொழில் நுணுக்கம் சம்பந்தமான ஆலோசனைகளை அளிப்பது, உயர்ந்த கலாச்சார பழக்க வழக்கங்களைச் செயல் விளக்க முறைகள் மூலமாகச் செய்து காட்டுகின்ற பணியினை அமைப்பு முறையில் நடத்துவது, ஆகிய இந்த வேலைகள் இந்த விவசாய வளர்ச்சிப் பணித்துறைஅலுவலர்

களின் முக்கிய பொறுப்புகளாகும். அவர்களுடைய பணிகளிலிருந்து சிறந்த சேவையை கிரகித்துக் கொள்வதற்கு பஞ்சாயத்து யூனியன்கள் பொறுப்பானபடியால், விவசாயிகள் நல்ல முறையில் இதை யெல்லாம் வரவேற்கின்ற நல்லதொரு சூழ்நிலையினை ஏற்படுத்தும் வகையில் பஞ்சாயத்து யூனியன்கள் உதவி புரிய வேண்டும்.

ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கிச் செயல் முறையில் துல்லியமாக நடத்துவது எப்படி என்பது பற்றிய சுத்தமான கருத்துணர்வு பத்தாண்டுகளுக்கு முன்னால் இந்த நாட்டில் இல்லாமலிருந்தது. மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் எப்படி இது நடத்தப்படவேண்டும். எப்படி நடக்கிறது என்பது பற்றி இப்பொழுது நமக்குத் தெரியும். திட்டமிட்ட அபிவிருத்திக்கான இந்தச் செயல் முறையானது மேலும் விரிவுபடுத்தப்பட்டு, அதனால் ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு வட்டாரமும் இந்தத் திட்டமிட்டுச் செயலாற்றுகின்ற வேலையில் பங்கு கொள்ளும்படியாக உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்து கடந்த பத்தாண்டுகளாகவே எப்பொழுதும் இருந்து வந்துள்ளது. ஆனால், இந்த எண்ணத்தை செயல்முறையில் எப்படி நடத்துவது பற்றித் தெளிவான கருத்துணர்வு இல்லாமலிருந்தது. இப்பொழுது இது நமக்குத் தெரிந்து விட்டது என நாம் எண்ணுகிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநிலத்தின் விவசாய உற்பத்தி வேலைத் திட்டம் பற்றிய பல்வேறு வேலைகளை 12,540 பஞ்சாயத்துகள் 373 பஞ்சாயத்து யூனியன்கள், மாநில அரசாங்கத்துறை செயல் நிறுவனங்கள் இவர்களிடையே எந்தமுறையில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பது பற்றிய ஏற்பாட்டினை இந்தக் கட்டுரை எடுத்து விளக்குகிறது. அடுத்து வருகின்ற சில ஆண்டுகளுக்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு மனப்பான்மையுடன் பணிபுரிந்து, இந்தத் திட்டத்தை செயல் முறையில் அமுல் நடத்திக் காட்டுவோமாக.

★ செய்திக் கொத்து ★

ரஷ்யா வெடிக்கும் அணுக் குண்டின் பயங்கர சக்தி

400 அடி ஆழம் ஒன்றரை மைல் அகலம் பாதாளக் குழி பறிக்கும்

16 மைல் சுற்றுவட்டார வீடுகள் அனைத்தும் நாசமாகும்

சோவியத் அணு ஆயுத சோதனைகளில் இறுதிக் கட்டமாக, அக்டோபர் 31-ந் தேதி வெடிக்கருக்கும் 5 கோடி டன்டிஎன்டி சக்தியுள்ள ஹைட்ரஜன் குண்டு யுத்தத்தின்போது ஏவப்பட்டால் அந்தக் குண்டு வீழ்ந்த இடத்தில் 400 அடி ஆழமும், ஒன்றரை மைல் அகலமுள்ள பிரமாண்ட குழி ஏற்படும். நல்ல பாதுகாப்பான நிலச் சுரங்கங்களில் பதுங்கிக் கொண்டிருப்பவர்கள் தவிர்த்து மற்றப்படி அப்பகுதியில் தென்படுபவர்கள் அனைவருமே கொல்லப்பட்டு விடுவர்.

இந்த ஹைட்ரஜன் குண்டு சோதனை இம்மாதக் கடைசியில் நடக்கும் என்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் அறிவித்தது குறித்து விசாரித்த போது அணு இயல் விஞ்ஞான டாக்டர் ராலப்லாப் மேற்கண்ட கருத்துத் தெரிவித்தார்.

இந்த பிரம்மாண்ட அணுகுண்டின் பெரும் நாசத்தின் அளவை விளக்க இவர் வாஷிங்டன் நகரை ஒரு உதாரணமாகக் கொண்டு கூறியதாவது.

வெள்ளை மாளிகை உள்ள பகுதியில் இந்தக் குண்டு விழுந்தது என்று வைத்துக்கொள்ளலாம். அப்படி விழுந்தால் அமெரிக்க அரசாங்கக் கட்டிடங்கள் அனைத்தும் மறைந்து அவைகள் இருந்த இடத்தில் எரிமலை வாய் போன்ற பிரமாண்ட பள்ளம் ஏற்பட்டுவிடும். வாஷிங்டன் நகரைச் சூழ 16 மைல் சுற்றுவட்டாரத்திற்குள் உள்ள மரக் கட்டுக் கோப்பு வீடுகள் நாசமாகிவிடும். 10 மைல் சுற்று வட்டாரத்திலுள்ள செங்கல் கட்டிடங்கள் அனைத்தும் இடிந்து நாசமாகி விடும். 5 முதல் 6 மைல் சுற்று வட்டாரத்திலுள்ள உருக்கு விட்டங்கள் சட்டங்கள் பிணைத்துக் கட்டிய பெரிய கட்டிடங்களும் இடிந்து சின்னா பின்னமாகி விடும். 30 மைல் சுற்று வட்டாரத்திலுள்ளவர்கள் பல பேர் காயமடைவர்.

அந்த அணுக் குண்டு வெடித்தால் அணுக்கதிர் தூள்கள் காற்று நிலவரத்துக்கேற்றபடி 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் சதுர மைல் வட்டாரத்தைப் பாதிக்கும்.

குண்டு விழுந்த இடத்திலிருந்து மூன்றரைமைலுக்கப்பால்

நல்ல பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வலுவாகக் கட்டப்பட்ட நிலச் சுரங்கங்கள் இந்தக்குண்டுத் தாக்குதலிலிருந்து பாதுகாப்பளிக்கும். இந்த அணுச் குண்டுகளிலிருந்து தெறிக்கும் நெருப்பு இதுவரை வெடித்த அணு குண்டிலிருந்து தெறிக்கும் நெருப்புக் கட்டிகட்டிகளை விடப் பெரியதாக இருக்கும். இந்த நெருப்புப் பந்தின் குறுக்களவு சுமார் 7 மைலிருக்கும்.

100 மைல் உயரத்தில்

இந்த பிரம்மாண்ட அணு குண்டை ராக்கட் மூலம், பூமியிலிருந்து 100 மைல்கள் உயரத்துக்கு அனுப்பி அங்கிருந்து வெடிக்கப்படும் என்று நான் நினைக்கிறேன். இவ்வளவு உயரத்திலிருந்து வெடித்தாலும் வெடிக்கும்போது அதனைப் பார்க்கலாகாது என்று சோவியத் யூனியனில் 10 லட்சம் சதுர மைல் பரப்பளவில் வசிக்கும் மக்களுக்கு முன்னெச்சரிக்கை செய்தாக வேண்டும். ஏனெனில் அந்த ஒளியை நேரடியாகப் பார்த்தால் கண் விழிகள் எரிந்து போகக் கூடும்.

நூறு மைலுக்குக் குறைந்த உயரத்திலிருந்து இந்த குண்டு வெடிக்கப்பட்டால் ரஷிய நாட்டிலுள்ள பயிர் பச்சைகள் எல்லாம் எரிந்து கருகிப் போகும். ஆர்டிக் பகுதியில் வெடித்தால் அங்குள்ள பனிப் படலம் முழுவதும் உருகித் தண்ணீராகிவிடும்.

ரூ. 2000 செலவில் கார் உற்பத்தி இந்திய மாணவர் கண்டு பிடிப்பு

சிறிய கார்கள் ரூ. 2000 விலையில் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதைப் புது டில்லியைச் சேர்ந்த திரு. பல்பீர் சிங் என்ற மாணவர் கண்டுபிடித்துள்ளார்.

இவர் அமெரிக்காவிலுள்ள விச்சியா சர்வகலாசாலையில் படித்து வருகின்றார்.

இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் இந்தக் கார்கள் பெருமளவில் உற்பத்தி செய்வதற்கான ஒரு புதிய கார்ப்பரேஷன் நிறுவப்படும். இந்தக் கார்கள் 4-லிருந்து 9 குதிரை ஓட்ட சக்தியுள்ளவை.

இங்குள்ள பைகோ கம்பெனியின் தலைவர் டாம் சால்டர் என்பவர் இந்த விவரங்களை வெளியிட்டார். பிரஸ்தாப காரின் மாதிரி யொன்று இன்னும் 61 நாட்களில் தயாராகிவிடுமென்றார். இது சாதாரண மக்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்குமென அறிவித்துள்ளார்.

நேரில் பார்த்துப் பேசும் டெலிபோன்!

டெலிபோனில் ஒருவருடன் ஒருவர் பேசுவது மாத்திரமல்லாமல் அவ்விதம் பேசுபவர்கள் ஒருவரை ஒருவர் கண்ணால் பார்த்துக்கொள்ளக்கூடிய நவீன

டெலிபோன் சாதனம் இப்போது ரஷ்யாவில் கண்டு பிடிக்கப்பட்டு அமுலுக்கு வந்துள்ளது.

இதற்கு "விடியோ-டெலிபோன்" என்று பெயர்.

நேற்று லெனின் கிரேடு நகரிலிருந்து கீவ் நகரிலுள்ளவர்களுடன் இந்தப் புதிய சாதனம் மூலம் தொடர்பு கொள்ளப்பட்டது. இந்த சோதனை நல்ல வெற்றி அளித்துள்ளது. பேசுவதுடன் அவ்விதம் பேசியவர்கள் உருவத்தையும் ஒருவருக்கொருவர் டெலிவிஷன் திரையில் பார்த்துக்கொண்டனர். இது நாளை முதல் தொடர்ந்து அமுலுக்குவருமென்று சோவியத் செய்தி நிறுவனம் அறிவித்தது. இந்த சாதனம் மூலம் பலர் ஒரே சமயத்தில் தொடர்பு கொள்ளலாம். திட்டங்கள் பற்றியும் இயந்திரங்கள் பற்றியுமான விவரங்களையும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளலாம். படிப்படியாக இந்த சாதனம் மற்ற நகரங்களுக்கும், சோவியத் அணி அண்டை நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் தெரிகிறது.

தென்னக ராஜ்யங்களுக்கு பொதுவான கல்விமுறை

கல்வி மந்திரிகள் மாநாடு தயார்க்கும்

நான்கு தென்னக ராஜ்யங்களுக்கும் பொதுப்படையான ஓர் கல்வி முறைத் திட்டம் விரைவில் தொகுக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ஆந்திரா கல்வி மந்திரி திரு. பட்டாபி ராமராவ் மேற்கண்ட தகவலளித்தார்.

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளம், மைசூர் ஆகிய நான்கு மாநிலங்களுக்கான கல்வித்துறை அமைச்சர்கள் மாநாடு அக்டோபர் 28-ம் தேதி பெங்களூரில் நடக்க விருக்கிறது. இம்மாநாட்டில் பொதுக் கல்வித்திட்டம் பற்றி முடிவெடுக்கப்படலாம்.

மந்திரிகள் மாநாட்டுக்குமுன்னதாக நான்கு ராஜ்யங்களின் கல்வி இலாகா செயலாளர்கள், கல்வி இலாகா நெறியாளர் ஆகியவர்கள் மாநாடு அக்டோபர் 17 18 தேதிகளில் திருவனந்தபுரத்தில் நடக்கிறது.

சிலப்பதிகார நாட்டிய நாடகம்

சோவியத் ரஷ்யாவில் அரங்கேற்ற முயற்சி

ரஷ்யாவில் சிலப்பதிகாரத்தை "பாலே நாட்டிய நாடகமாக" அரங்கேற்ற முயற்சிகள் நடைபெறுவதாக டாக்டர் சிதம்பரநாதன் தெரிவித்தார். நேற்று மயிலையில் நடைபெற்ற சிலப்பதிகார நாட்டிய நாடக அரங்கேற்றத்தின் போது மேற் கூறிய தகவலை அவர் வெளியிட்டார். அண்மையில் இவர் ரஷ்யா சென்றிருந்தபோது சிலப்பதிகாரம்

பற்றி ரஷ்யர்கள் வினவியதாக வும், ஆங்கிலத்தில் அதன் குறிப் புகளை கொடுத்து வந்ததாகவும் கூறினர். அக்குறிப் புக்களை கொண்டு அவர்கள் முயன்று வரு கின்றனர். இன்னும் ஒன்று அல் லது இரண்டு வருடங்களில் அவர்கள் அரங்கேற்றம் செய்து விடுவார்களென்றும் தெரிவித் தார்.

எஸ். எஸ். எல். சி. எழுதுவோர் கவனிக்க

1962-ம் வருடம் மார்ச்மாதம் நடைபெறும் எஸ். எஸ். எல். சி. பொதுத்தேர்வு எழுத விரும்பும் தனிப்பட்ட அபேட்சகர்கள் அக் டோபர் 31-ந் தேதிக்குள் பணம் கட்டி விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும். ஆனால் 1961 அக் டோபரில் நடைபெற்ற பரீட் சைக்குத் தம்மைப் பதிவு செய்து கொண்டவர்கள் சம்பந்தப்பட்ட வரை இந்தத் தேதி பொருந்தாது.

1948-ம் வருடத்திய பாடத் திட்டப்படி 1961 மார்ச் மாதம் பரீட்சை எழுதித் தவறியவர்க ளும் அல்லது அதற்கு முன்பு எழுதித் தவறியவர்களும் வருகிற தேர்வுக்கு விண்ணப்பம் செய்யலாம். தனிப்பட்ட முறை யில் ஆசிரியர்களும் இத்திட்டப் படி இரு முறை (1963 அக்டோ பர் முடிய) பரீட்சை எழுதலாம். ஆசிரியர்களாக உள்ளவர்கள் இப் பொழுதுதான் முதன்முறையாக எழுதுவதாயிருந்தாலும் பரவா யில்லை. அல்லது 1959-ம் வருடத் திய திருத்தி அமைக்கப்பட்ட கல்வித் திட்டப்படியும் (10-வது ஸ்டாண்டர்டு) இவர்கள் பரீட் சை எழுதலாம்.

1962 மார்ச் முதல் தேதியன்று 20 வயது அடைந்துள்ள பெண் களும் பரீட்சை எழுத அனுமதிக் கப் படுவார்கள். ஆனால் அவர்கள் 8-வது ஸ்டாண்டர்டு பொதுத் தேர்வு (ஆங்கிலம் இஷ்ட பாடத் துடன்) தேறியிருக்கவேண்டும்.

ஐகோர்ட் அருகில் ரயில்வே கீழ்பாலம் கட்ட முடிவு

ரூ. 40 இலட்சம் செலவில் திட்டம்

சென்னை நகரில் உயர்நீதி மன்றம், ரிசர்வ் பாங்க் கட்டிடங் கள் உள்ள பகுதியில் இருக்கும் ரயில்வே லெவல் கிராஸிங்கில் ரோடு போக்கு வரத்துக்கு வசதி யாக கீழ்ப்பாலம் கட்டுவதென இப்போது இறுதியாக முடிவு செய்யப்பட்டுவிட்டது.

இந்த தகவலை நிதியமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் நிருபர் களிடம் தெரிவித்தார்.

அந்த இடத்தில் மேம்பாலம் கட்டுவதாக முதலில் யோசனை செய்யப்பட்டது. ஆனால் அப்படி பாலம் கட்டினால் பக்கத்தில் புதி தாகக் கட்டப்பட்டுள்ள ரிசர்வ் பாங்கு, துறைமுக டிரஸ்ட் கட்டி டங்களின் முழுத்தோற்றம் தெரி

யாமல் அவற்றின் அழகு கெட்டு விடும் என்று எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இத்தகைய அம்சங்களைப் பரிசிலனை செய்தபின் கீழ்ப் பாலம் கட்டுவதெனை முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்திற்கு சுமார் ரூ. 40 லட்சம் செலவாகும்.

இந்தப் பாலத்தின் உயரம் (ரயில் பாதை மட்டத்திலிருந்து ஆழம்)14·5 அடியாக இருக்கும். இந்தியாவில் சாதாரணமாக கீழ்ப் பாலங்களின் உயரம் 17 அடியாக இருக்கும். ஆனல் அமெரிக்காவில் 14·5 அடியாகத்தான் இருக்கிறது. ஆகையால் அதே அளவில் இருந்தால்போதும் என முடிவு செய்யப்பட்டிருக்கிறது. 17 அடி உயரத்தில் கட்டினல் மேற்கொண்டு நான்கைந்து லட்ச ரூபாய் செலவாகும் எனத் தெரிகிறது.

பாலத்தின் கீழ் அமையும் ரோடின் அகலம், இப்போதுள்ள ரோடின் அகலத்திற்குக் குறையாது. வாகனங்கள் போக வர வசதியும், ஓரங்களில் சைக்கிள்கள், பாதசாரிகளுக்கான இடமும் இருக்கும்.

பாலம் கட்டும் வேலைவிரைவில் ஆரம்பமாகும்.

மூடப் பழக்கத்தால் மணமகன் பலி!

பவேரியாவில் திருமணச் சடங்குகள் சம்பந்தமாக இருந்துவரும் பழங்கால பழக்கம் ஒன்றின் விளைவாக மணமகனும் அவர் குடும்பத்தினர் மூவரும் கோர மரணமடைய நேரிட்டது.

ரொஸிஞ கிராமத்தில்ஹார்ஸ்ட் ஹார்பிக் என்பவருக்கு அண்மையில் திருமணம் நடைபெற்றது. அன்றிரவு திருமண விருந்தும் சிறப்பாக நடந்தேறியது. பழங்காலப் பழக்கத்தின்படி மணமகனின் நண்பர்கள் மணப்பெண்ணைக் 'கடத்திச்சென்று விட்டார்கள்!' மணமகன் அவர்களைத் துரத்திச் சென்று பிடிப்பதோடு 'கடத்திச் சென்ற "களவாணிப் பயல்கள்"(நண்பர்கள்)கேட்கும் பணம் அல்லது பொருள்களைக் கொடுத்துவிட்டு, தமது இளம் மனைவியை மீட்டு அழைத்து வர வேண்டும். ஆகையால் ஹார்ஸ்ட் ஹார்பிக்கும், தமது தாய், 17 வயதுள்ள தங்கை மற்றும் ஒருவருடன் காரில் ஏறிப் பறந்தார். இடையில் ரயில் பாதை ஒன்று குறுக்கிட்டது. மனைவியை மீட்கும் ஆர்வத்தில் கனவேகமாகக் காரை ஓட்டிச் சென்ற இளைஞனுக்குக்'கண்முன்'-தெரியவில்லை விளைவு அந்த நேரம் பார்த்து வந்த ரயில் கார் மீது ஏறியது; மணமகன் உட்பட நால்வரும் ரயிலுக்கடியில் சிக்கிமாண்டனர். அடையாளம்தெரியாதஅளவுக்கு அவர்களது உடல்கள் நசுங்கியிருந்தன.

ரயில்வேகேட் காவல்காரர் உரிய நேரத்தில் கதவை அடைக்கத் தவறியதாகக் கைது செய்யப்பட்டார்.

நீவிர் அறிவீரா ?

கழுதைகளுக்குப் பாராட்டு!

ராஜஸ்தான் மணல் பிரதேசத்தில் ராஜஸ்தான் கால்வாய்த் திட்டம் சம்பந்தமாகக் கடுமையாக உழைத்த கழுதைகளின் சேவையை ராஜஸ்தான் கால்வாய் போர்டு தலைவர் பாராட்டிப் பேசினர்!

முதலில் ராணுவப் படையினர் சேவைகளை அவர் பாராட்டினர். பிறகு, மிகவும் வறண்ட பகுதிகளில் கழுதைகளின் உதவி கொண்டு ராணுவத்தார் குடி தண்ணீர் கொண்டு வந்ததைக் குறிப்பிட்டுப் பேசினர்.

அதிகாரிகள் இரண்டு கழுதைகளை அலங்கரித்துக் கொணர்ந்து டிராக்டர்கள் புல்டோசர்கள் பக்கத்தில் நிறுத்தி வைத்திருந்தனர்.

கால்வாய்த் தண்ணீரைத் திறந்து விட்டுவிட்டு உப ராஷ்டிரபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் தம்முடைய மோட்டார் காரில் ஏறிய பொழுது இரண்டு கழுதைகளும் கத்த ஆரம்பித்தன. அங்குக் குழுமியிருந்தவர்களுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை!

83 வயதில் திருமணம்

மணப்பெண் வயது 79

புகழ் வாய்ந்த அமெரிக்க நாவலாசிரியர் அப்டன் சிங்கிளேர் (83 வயது) திருமணம் செய்து கொள்ள அனுமதி கோரியிருக்கிறர். 79 வயதுள்ள கைம்பெண் மேரி எலிசபெத்வில்லிசை அவர் திருமணம் செய்துகொள்வார்.

செகண்டரி கிரேடு ஆசிரியர் பரீட்சை

40 சதவிகிதம் பெற நிபந்தனை ?

"செகண்டரி கிரேடு பள்ளி ஆசிரியராக விரும்புகிறவர்கள் ஆங்கிலத்தில் குறைந்த பட்சம் 40 சதவீதம் மார்க்குகள் வாங்க வேண்டும் என்று நிபந்தனை விதிப்பது குறித்து யோசிக்கப்படும்.

5-ம் வகுப்பிலிருந்தே மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்க வேண்டியிருப்பதால் ஆசிரியர்கள் ஆங்கிலத்தில் திறமை உள்ளவர்களாக இருக்க வேண்டியது அவசியம்" என்று மேல்சபையில் மந்திரி திரு. சுப்பிரமணியம் கூறினர்.

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தியின் கேள்விக்குப் பதிலளிக்கையில் செகண்டரி கிரேடு ஆசிரியராக விரும்புகிறவர்களுக்கு ஆங்கிலத்தில் பெற வேண்டிய மார்க் அளவை 25 லிருந்து 30 ஆக

உயர்த்தப்பட்டுள்ளது என்று மந்திரி கூறினார்.

இந்திய தவளைக் கால்களுக்கு அமெரிக்காவில் கிராக்கி

ஒரு மாதத்தில் 60000 டாலருக்கு விற்பனை!

இதுவரை உயிரியல் சாஸ்திர மாணவர்களின் அறுவை சோதனைகளுக்கு மட்டும் பயன்பட்டு வந்த இந்தியத் தவளைகள் இப்பொழுது அமெரிக்க டாலர்களும்சம்பாதித்துத் தருகின்றன.

அமெரிக்க விருந்துகளில் இவை உயர்ந்த ரக உணவாகப் பயன்படுத்தப் படுகின்றன. அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் தவளைகளுக்குள் இந்தியத் தவளைகளுக்குத்தான் முதலிடம் கிடைக்கிறது. சென்ற ஏப்ரலில் அமெரிக்காவுக்கு இந்தியாவிலிருந்து 60 ஆயிரம் டாலர் பெறுமானமுள்ள 86 ஆயிரம் பவுண்டு தவளைக் கால்கள் ஏற்றுமதி யாகியிருக்கின்றன.

கியூபா 47,000 பவுண்டும் ஜப்பான் 7,000 பவுண்டும் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்திருக்கின்றன.

இந்தியத் தவளைக் கால்களின் விலை பவுண்டு 65 முதல் 80 சென்டு விற்கிறது. ஜப்பானிய வகை பவுண்டு 86 முதல் 103 சென்டு வரை விற்கிறது.

கிராமவாசியின் தீரச் செயலால் ரயில் விபத்து தடுக்கப்பட்டது

சிவப்புத்துணி கொடியாக உதவியது

கிராமவாசி ஒருவரின் சமயோசித புத்தியாலும் துணிச்சலான நடவடிக்கையாலும் அண்மையில் பெகுசாரி அருகில் இரு ரயில்கள் மோதிப் பெரும் விபத்து ஏற்படுவது தடுக்கப்பட்டது.

வடகிழக்குப் பிராந்திய ரயில்வேயில் ஒரே தடத்தில் எதிர் எதிராக இரு ரயில்கள் வந்து கொண்டிருந்தன. ஒரு ரயில் ககாரியா ஸ்டேஷனிலிருந்தும் மற்றொரு ரயில் ககாரியா ஸ்டேஷனை நோக்கியும் அவ்வமயம் பிரயாணம் செய்து கொண்டிருந்தன.

இரு ரயில்கள் ஒரு தடத்தில் வருவதைக் கண்ட இந்தக் கிராமவாசி தடுத்து நிறுத்தாவிடில் பெருவிபத்து ஏற்படும் என்பதை உணர்ந்தார். சற்றும் தாமதம் செய்யாது ரயில் தடத்தை நோக்கி விரைந்தார். ஒரு சிவப்புத் துணியை சிவப்புக் கொடியாகக் கையில் தூக்கிப் பிடித்துக் கொண்டு ரயில் தடத்தில் மிகத் துணிவுடன் நின்றார். சமயத்தே நடைபெற்ற இக்கிராமவாசியின் செய்கையால் மாபெரும் விபத்தொன்று தடுக்கப்பட்டது.

அர்த்தமற்ற பீதிக்குள்ளான சில பிரயாணிகள் ரயிலிலிருந்து கீழே குதித்து காயமடைந்தனர்.

95 அடி உயரத்திலிருந்து தூக்கத்தில் விழுந்தார்!

லேசான காயத்துடன் தப்பிய விந்தை

பத்தடி பதினைந்தடி போன்ற குறைந்த உயரத்திலிருந்து விழுந்த சிலர் கூட உயிரிழந்திருப்பதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் 95 அடி உயரத்திலிருந்து விழுந்த ஒருவர் ஆபத்து எதுவும் இன்றி தப்பிய விந்தைச் சம்பவம் தென் கல்கத்தாவில் நடந்திருக்கிறது.

இந்த மனிதர் (6 அடி) மாடி வீட்டின் மேல்மொட்டை மாடியில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார். திடீரென்று எப்படி உருண்டு விழுந்தாரோ தெரியாது. இந்த 95 அடி உயரத்திலிருந்து கீழே உருண்டு விழுந்தவர் மேல் மாடியிலிருந்து வரும் மின்சார கேபிள் வலையில் விழுந்தார். அங்கிருந்து மீண்டும் உருண்டு தரையில் விழுந்தார். இப்படி விழுந்தும்கூட உயிரிழக்கவில்லை. லேசான காயங்களுடன் தப்பி விட்டார். இவருக்கு 25 வயதாகிறது.

இன்னமும் தான் எப்படி விழுந்தோம் என்று இவருக்கே தெரியாது.

தமிழ் நாட்டில் 15 கோடிக்குப் புது வரிகள் விதிக்கப்படும்

தமிழ் நாட்டில் மூன்றாவது திட்ட செலவுக்காக, அடுத்த நான்காண்டுகளில் ரூ 35 கோடி வரை புதிய வரி விதிக்கப்படும்.

இத்தகவலை தமிழ்நாட்டில்மேல் சபையில் உள்துறை அமைச்சர் திரு. எம். பக்தவச்சலம் வெளியிட்டார்.

மூன்றாவது திட்டம் பற்றிய விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய திரு. பக்தவத்சலம் மாநிலத்தின் மூன்றாவது திட்டத்திற்கு ரூ. 291 ஒதுக்கப்பட்டுள்ளதையும் இதில் ரூ. 100 கோடி ராஜ்ய சர்க்கார் திரட்ட வேண்டிய பங்கு என்பதையும் நினைவு படுத்தினார். இந்த ரூ. 100 கோடி புதிய வரிகள், சிறு சேமிப்பு, ரெவின்யூ உபரி மூலம் திரட்டப்படும் என்றார் அவர்.

விஞ்ஞானயுகத்தில் வரட்டு வேதாந்தம்!

கிரகங்களுக்கும், புறவெளிக்கும் பயணம் செய்வது எப்படி என்று மேலை நாட்டில் ஆராய்ச்சி நடக்கிறது. ஆனால் நம் நாட்டில் கிரகங்களின் நடமாட்டத்தைக் கொண்டு ஜாதகம்" கணித்து அதன்படி எல்லாம் நடக்கும் என்ற மூட நம்பிக்கையில் சிலர் வாழ்கின்றனர். இவர்கள் விஞ்ஞான, அணு யுகத்தில் வாழத் தகுதியற்றவர்கள் என்று நேருஜி

கடற்கரைக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

ஜாதகம், மதம் ஆச்சார அனுஷ்டானங்களின் பெயரால் அந்தப் பெண்ணைத் திருமணம் செய்யாதே! அவர்களுடன் பழகாதே—என்றெல்லாம் மூடக் கொள்கைகளைக் கண்டுப் பிடித்து சமையலறைக்குள்ளேயே முடங்கிக் கிடப்பதா? விஞ்ஞான யுகத்தில் வரட்டு வேதாந்தம் பலன் தருமா? எல்லாம் கிரகங்கள் அருள்தான் என்றால் பகுத்தறிவு உள்ள மனித வாழ்வுதான் எதற்கு? என்று அவர் கேட்டார்.

வருகிற பொதுத் தேர்தல்

வருகிற பொதுத் தேர்தலுக்கு சுமார் 6 கோடி ரூபாய் செலவாகுமென பிரதம தேர்தல் கமிஷனர் திரு. கே. வி. கே. சுந்தரம் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

அபேட்சா பத்திரம் தாக்கல் செய்யத் தற்காலிகமாக ஜனவரி 22–ந் தேதி கடைசி நாளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வாக்குப் பதிவு பிப்ரவரி 22ந் தேதி ஆரம்பமாகும். அரசியல் கட்சிகளை அங்கீகாரம் செய்வது பற்றி மீண்டும் மறுபரிசீலனை தேவையென பிரஜா சோசலிஸ்ட் கோரியிருப்பதைப் பற்றிக் குறிப்பிடுகையில் அதற்கு அவசியமில்லையென்றார்.

அரசியல் கட்சிகளுக்குத் தேர்தல் சின்னம் ஒதுக்கப்படாத ராஜ்யங்களில் எந்தக் கட்சியின் சார்பாக ஒருவர் போட்டியிடுகிறாரோ அவருக்கு மற்ற ராஜ்யங்களில் அந்தக் கட்சிக்கு அளித்துள்ள சின்னம் முதலாவதாகக் கொடுக்கப்படும் என்றார். வாக்குச் சீட்டில் கட்சியின் சின்னம் மட்டும் பொறிக்கப்படுமென்றார். கட்சிகளின் பெயர்களை எழுதுவதற்கு வாக்குச் சீட்டில் இடம் இருக்காதென பிரதம தேர்தல் கமிஷனர் கூறினார்.

3-வது வகுப்பிலிருந்து ஆங்கில போதனை

கேரள சர்க்கார் புது உத்தரவு

1962-63 பள்ளிக்கூட ஆண்டு முதல் இப்பொழுது 5—வது வகுப்பிலிருந்து ஆரம்பிக்கப்படும் ஆங்கிலம் 3வது வகுப்பிலிருந்து ஆரம்பிக்கப்படும் என்று உத்யோகப் பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாடதிட்டத்தைத் திருத்தி அமைக்க நியமிக்கப்பட்ட குழுவின் சிபார்சுப்படிக்கும் ராஜ்ய கல்வி ஆலோசனை போர்டின் அபிப்பிராயப் படிக்கும் இம்மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது.

Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press 2/65, Broadway, Madras-1.